

சோ. ராமேஸ்வரன்

# சத்தியங்கள் சமாதிகளாவதில்லை

[redacted]

# சத்தியங்கள் சமாதிகளாவதில்லை

(சமூக நாவல்)

சோ.ராமேஸ்வரன்

© 1996 by S.Rameswaran

# சத்தியங்கள் சமாதிகளாவதில்லை

(சமூக நாவல்)


- சோ.ராமேஸ்வரன்
- வெளியீடு : திருமதி செ.ராமேஸ்வரன்
- முதலாம் பதிப்பு : டிசம்பர், 1996
- அச்சுப்பதிப்பு : தரஞ்ஜி பிரிண்ட்ஸ்<br>நாவின்ன<br>மஹரகம
- அட்டைப்படம் : 'நியூஸ் வீக்'
- விலை : 60/=


# Sathiyangal Samathikalavathillai
## (Social Novel)


- S.Rameswaran
- Publisher : Mrs.S. Rameswaran
- First Edtion : December, 1996
- Printed at : Tharanjee Print<br>Nawinna,<br>Maharagama
- Cover : Newsweek
- Price : Rs[redacted]/= 100/=

# ஆசிரியர் உரை

1995 இல் மாத்தறையில் உள்ள மக்கள் சமாதான இலக்கிய மன்றம் நடத்திய தேசிய ஐக்கியத்தைக் கருப்பொருளாகக் கொண்ட நாவல் போட்டியில் நான் எழுதிய "வடக்கும், தெற்கும்" என்ற நாவல் முதல் பரிசையீட்டியது. அம்மன்றம் இந் நாவலை நூலாக அச்சிட்டு வெளியிட்டது.

இந் நாவலில் இன ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதென்றால், சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்கும் போதே அதை ஏற்படுத்த முடியும் என்ற கருத்தை, காமினி என்ற சிங்களக் கதாபாத்திரம் மூலம் வெளிப்படுத்தினேன். பலரும் நம்புவது போன்று கலப்புத் திருமணங்கள் மூலம் இன ஐக்கியத்தை ஏற்படுத்தலாம் என்பதில் எனக்கு உடன்பாடில்லை.

"இனக் கலப்புத் திருமணம் மூலம் இன ஐக்கியத்தை ஏற்படுத்தல் என்னும் கோட்பாடு யதார்த்தத்துக்கு மாறானதும், நடைமுறைச் சாத்தியமற்றதுமாகும்" என்று இந் நாவலை முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுத்து, முன்னுரை எழுதிய கல்விமான் திரு.யோ. பெனடிக்ற் பாலன் குறிப்பிட்டிருந்தார்.

"வடக்கும் தெற்கும்" நாவலை ஆய்வு செய்த விமர்சகர் மு.ஸ்ரீ கௌரிசங்கர் பின்வரும் கருத்தை "தினகரன் வாரமஞ்சரி"யில் வெளியிட்டார்.

"இன சௌஜன்யத்திற்கு என்ன வழி எனப் பலரும் பல விதமாக தலை முடியைப் பிய்க்கும் இவ் வேளையில், வடக்கும், தெற்கும் இணைவதற்கான வழி இதோ இருக்கிறது என ஆசிரியர் வெளிக்காட்டியுள்ளார். வழமையான நடவடிக்கையான கலப்புத் திருமணம் எல்லாம் காலாவதியாகி விட்டது. கலப்புத் திருமணம் செய்தவர்களும் இன்று நிம்மதியாக வாழ முடியாத சூழ்நிலையில், இதைவிட அதிகாரப் பரவலாக்கமும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனான இனங்களிற்கிடையேயான புரிந்துணர்வும் தான் நிரந்தர சமாதானத்திற்கு வழி என ஆசிரியர் எடுத்துக் காட்டியமை – ஓர் உண்மையை உண்மையாக, ஆணித்தரமாக வெளிப்படுத்தியதன் மூலம் அவரின் உண்மையான நோக்கு கபடமில்லாமல் வெளிப்படுகின்றது."

இனப் பிரச்சனைக்கும், கலப்புத் திருமணத்திற்கும் இடையில் தொடர்பு இல்லை என்ற எனது சிந்தனை சரி என்பது வெளிப்பட, அதையிட்டு ஆழமாகச் சிந்தித்த போது, கலப்புத் திருமணம் ஓர் இனத்தை, பொதுவாக அதில் சம்பந்தப்பட்டிருப்பவர் ஆணாகவோ, அன்றி பெண்ணாகவோ இருந்தாலும், அவர் சிறுபான்மையினராக இருந்தால் – அது அவரின் இனத்தின் அழிவுக்கே வித்திடுகின்றது என்ற கருத்து என்னுள் புக, "சத்தியங்கள் சமாதிகளாவதில்லை" என்ற இந் நாவல் படைக்கப்பட்டது. இங்கே சிங்கள இராணுவ வீரன் பண்டார மூலம் என் கருத்து பரப்பப்படுகிறது.

பண்டார காதலில் தோல்வியுற்றவன். அவனுக்கு காதல் தேவைப்பட்டது. அவனை யாழ்ப்பாணத்து நங்கை ஒருத்தி காதலித்தாள். ஆனால், அவன் சீரிய சிந்தனையில் கலப்புத் திருமணத்திற்கு இடமில்லை. அதுக்கான காரணமும் இருந்தது.

சோவியத் ரஷ்ய இலக்கியங்களில் சிலவற்றை வாசித்தால், அந் நாட்டின் சரித்திரத்தைச் சுவையுடன் அறிந்து விடலாம் என்று எனது அலுவலக நண்பன் த. இரவிச்சந்திரன் கூறுவதுண்டு. அவரது இத் தகவல் என்னுள் நிறைய தடவைகள் புரண்டு, எழுந்து, இறுதியில் புதைந்துவிட்டது. ஆனால், "வடக்கும், தெற்கும்" நாவலை எழுதிய போது இத் தகவல் என்னுள் புகுந்து நர்த்தனமாட, சரித்திரத்தின் ஒரு பகுதியைக் கதாபாத்திரங்கள் மூலம் வெளிப்படுத்தினேன். "சத்தியங்கள் சமாதிகளாவதில்லை" என்ற இந் நாவலில் சரித்திரத்தின் இன்னொரு பகுதியை வெளிப்படுத்தியுள்ளேன்.

இலக்கியங்கள் மக்களின் உள்ளங்களை சீர்படுத்தி, அவர்களின் சிந்தனைகளையும் தூண்டி விடுகின்றன என்கின்றனர். எனது இந்த இலக்கியத்தின் கருப்பொருள் ஒரு சிலரின் மனதினுள் சிறியதொரு தாக்கத்தை ஏற்படுத்தினால், "இத்தகைய இலக்கியப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆசிர்வதிக்கப்பட வேண்டியவர்கள்" என திரு.பெனடிக்ற் பாலன் குறிப்பிட்டிருப்பது போல, நான் அந்த பெருமைக்குள் நுழைந்து விடுவேன்.

இந் நாவலில் பெரும்பான்மையான கதாமாந்தர்கள் சிங்களத்திலேயே உரையாடுகின்றனர். அவர்களது உரையாடல்கள் சிங்களத்தில் எவ்வாறு அமைந்திருக்குமோ, அவ்வாறு அவற்றைத் தமிழில் தந்திருக்கிறேன். இதை வாசகர்கள் கவனத்தில் கொள்வது அவசியம்.

இந் நாவலின் ஒளியச்சுக் கோர்வையை குறுகிய காலத்தில் நிறைவேற்றித் தந்த வே.சடகோபன் அவர்களுக்கும், அழகாக அச்சடித்துத் தந்த தரஞ்ஜி பிரிண்ட்ஸ் அதிபர் பாலித பெரேரா அவர்களுக்கும் எனது நன்றிகள்.

**சோ. ராமேஸ்வரன்**

4 1/2 , சித்ரா ஒழுங்கை
கொழும்பு 05

# (1)

**வை**காசி மாத மழை பொய்த்து விட்டது. வானம் இடையிடையே மப்பும், மந்தாரமுமாகக் காட்சி அளித்த போதும், மழையின் அறிகுறி தென்படவில்லை. வெயிலின் அகோரம் நிறைய வியர்வையை வழித்தது.

மழையின் காலதாமதம் ஒரு தேசியப் பிரச்சனையை உருவாக்கி விட்டது. மின்வெட்டு இரவு, பகல் என்று பல மணித்தியாலங்கள் அமுலில் இருந்தது. கைத்தொழில் நிறுவனங்கள் 'ததிங்கிணதோம்' போட்டன. வேலை நேரங்கள் குறைந்தன. 'ஜெனரேட்டர்களின்' இரைச்சல் சூழலை மாசுபடுத்தியது. எல்லோருமே ஏதோ வகையில் பாதிப்படைந்தனர். தொலைக்காட்சிச் சேவைகள் இரவு ஒன்பதரைக்குள் 'வணக்கம்' தெரிவித்தன.

திம்பிரிகஸாயவில் தற்காலிகமாக அமைந்திருந்த இராணுவ முகாமில் இருந்து முப்பது இராணுவ வீரர்கள் பலாலிக்குச் செல்வதற்குத் தயாரானார்கள். எல்லோருக்குமே மூன்று மாதப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. நான்கு மாதங்களுக்கு முன் 'கோப்ரல்'களாகத் தெரிவு செய்யப்பட்ட இவர்களில் பலரும் மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் குக்கிராமங்களைச் சேர்ந்தவர்கள்.

இந்த முகாமின் மையத்தில் இருந்த மைதானத்திலேயே இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. சில வேளைகளில் திம்பிரிகஸாய, நாரஹேன்பிட்டி, பொரளை ஆகிய இடங்களில் உள்ள வீதிகள் வழியாக இவர்கள் அதிகாலை வேளைகளில் பயிற்சியை மேற்கொண்டிருந்தார்கள். யாவரும் தலைமயிரை ஒட்ட வெட்டி, 'காப்ரிக்' கோலத்தில், கட்டைக் களுசானும், 'ரீ சேர்ட்டும்' அணிந்து, நிறைய வியர்வையை வீதியில் தெளித்த வண்ணம், 'பூட்ஸ்'களின் ஒலியைப் பரப்பியவண்ணம் ஓடுவார்கள். அக் காட்சியை பலரும் புதுமையுடன், சுவாரஷ்யத்துடன், பிரமிப்புடன் பார்த்து.....'எமது மண்ணைக் காப்பாற்றும் மைந்தர்களே! ஓடுங்கள், ஓடுங்கள்....' என்று மனதினுள் மெச்சியபடி.....

காலைப் பொழுது எவ்வித தயக்கமும் இன்றி பூத்து, வெளிச்சத்தைப் பிரசவித்தது. ஆறு மணியை எட்டிப் பிடிக்க சில நிமிஷங்கள் தயாராக இருந்தன.

கடந்த சில நாட்களை விட புழுக்கம் அதிகரித்திருந்தது. மரங்களின் அசைவுகள் அறவே இல்லை.

பண்டார தொப்பியை அணிந்தான். சுவரில் தொங்கிய கண்ணாடியில் முகத்தைப் பார்த்து, தொப்பியைச் சரி செய்தான். நெற்றியில் சுருண்டிருந்த மயிரை தொப்பியினுள் நுழைத்தான்.

"நீ ஏன் இராணுவத்தில் சேர விரும்புகிறாய்?" ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் போது இராணுவ உயர் அதிகாரிகளின் மத்தியில் அமர்ந்திருந்த 'பிரிகேடியர்' கேட்டிருந்தார்.

"சேர்,எனக்கு ஒரு தொழில் அவசியமாகத் தேவை. அது காற்சட்டை போடும் தொழிலாக இருக்க வேண்டும்." பண்டார எவ்வித தயக்கமும் இன்றி, தன் மனதைத் திறந்து விடுகிறான்.

"உனது தாய்நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இராணுவத்தில் சேரவில்லையா?" மூலையில் – பெருமிதத்தை முகத்தில் தூக்கி வைத்திருந்த நிலையில் – அமர்ந்திருந்த 'லெப்டினன்ட்' வினவினார்.

"எனது நாட்டின் மீது அந்நிய நாட்டுப் படை ஒன்று போர் தொடுத்தால் தான் தாய் நாட்டைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்படும். ஆனால், இது ஓர் உள்நாட்டு யுத்தம். இங்கே எதிரிகள் எமது நாட்டின் இளைஞர்கள். அவர்களைத் தோற்கடித்தால் போதும் என்று நினைக்கிறேன்."

பண்டாரவின் தெளிவான பதில் இரு இராணுவ அதிகாரிகளை வியப்பில் ஆழ்த்தியது. புன்முறுவலுடன் அவனை அவர்கள் விழிகளால் மொய்க்க, அந்த 'லெப்டினன்ட்'டுக்கு சினம் முளைத்து விட்டது.

"'பிளடி ஷிட்'......" என அவர் முணுமுணுத்தார்.

மணி சரியாக ஆறில் நின்றது.

"வானொலி செய்தியைப் போடு." பக்கத்தில் நின்ற இராணுவ வீரன் ஒருவன் சொல்ல , பிரயாணப் பையில் இருந்த 'ரேடியோ'வை எடுத்த பண்டார, அதைப் போட்டான்.

வடமராட்சியைக் கைப்பற்றுவதற்காக இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட 'சூரியக்கதிர்–3' நடவடிக்கை மூலம் வடமராட்சி முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிப்பாளர் உற்சாகத்துடன் சொன்னார்.

இதைக் கேட்டு நாலைந்து இராணுவ வீரர்கள் கைதட்டி, ஆரவாரம் செய்தார்கள். பண்டார அமைதியாக நின்றான்.

"சரியான தலைமைத்துவமும், விவேகமும் இருந்தால் புலிகளை முழுமையாக அடக்கி, ஒடுக்கலாம்." இன்னொருவன் அறிவித்தான்.

"யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதே ஒரு கனவு என்றார்கள். இப்பொழுது முழு குடாநாட்டையுமே எமது வீரர்கள் கைப்பற்றி விட்டார்கள். அவர்கள் யாவருமே பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் தான் மண்ணின் மைந்தர்கள். தாய்நாட்டுப் பற்றுள்ளவர்கள்." பிறிதொரு இராணுவ வீரன் பெருமைப்பட்டான்.

"அவர்களின் பணியை நாம் தொடர்வோம்." முதலில் பேசியவன் உறுதிபூண்டான்.

பண்டார 'ரேடியோ'வைப் பிரயாணப் பையினுள் அடைத்தான்.

வீதியில் நிறைய வாகனங்கள் ஊர்ந்தன. கொழும்பு மாநகரம் சுறுசுறுப்படைந்து விட்டது. காகங்களும் கரைந்து விட்டு, பறந்து விட்டன.

மக்களின் முகங்களில் அவசரம் இணைந்து விட்டது. வாகனங்களும் உறுமின. 'ஹோர்ன்' சத்தங்கள் மாறி,மாறிக் கேட்டன.

மாணவிகள் கூட்டமொன்று வீதியைக் கடக்க முற்படுகிறது. சாரதி ஒருவன் அவர்களைக் கவனிக்கவில்லை. அருகில் வந்த போதே வெள்ளைச் சீருடைகளைக் காண்கிறான். 'படக்'கென்று 'பிரேக்'கை அழுத்த, பயங்கர ஒலியுடன் கார் நின்றது. மாணவிகள் எவரும் காரை, அந்த ஒலியை கவனத்தில் எடுக்கவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தபடி தம் பாட்டில் – எவ்வித அவசரமும் இன்றி நடக்கிறார்கள்.

பண்டாரவின் அருகில் நின்ற இராணுவ வீரனுக்கு அக் காட்சி ஒரு புதுமையைத் தோற்றுவித்துவிட்டது. "இப்பொழுது ஆட்களுக்கு தமது உயிரில் ஆசை இல்லை. மதிப்பு இல்லை." அவன் ஏகாந்தத்துடன் கூறி முடிக்கிறான்.

"இப்பொழுது கணிசமான அளவு இளம் வயதினர் தமது உயிரை மதிப்பதில்லை. அதை மாய்ப்பதில் தயக்கம் காட்டுவதில்லை. ஒரு குறிக்கோளுக்காக, இலக்கை அடைவதற்காக தமது உயிரைத் துறக்க முன்வருகிறார்கள்.'சார்ஜண்ட்' சுஸந்த சொல்லி விட்டு, அர்த்தத்துடன் முதலில் பேசிய இராணுவ வீரனைப் பார்த்தான்.

"இப்பொழுது புலிகள் இயக்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் மட்டுமன்றி, தென்பகுதி இளைஞர்களும் தமது உயிருக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. அதனால் தான் இராணுவத்தில் சேருகிறார்கள். போர் முனையில் தமது நண்பர்கள், உறவினர்கள் மரணமடைவதை அறிந்த பின்னரும் கூட இராணுவத்தில் சேருகிறார்கள். ஏன்?"

சுஸந்தவின் முகத்தில் கடுமை பரவியது. "வேலை இல்லாப் பிரச்சனை தான் அடிப்படைக் காரணம். தாய் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பது உதிரிக் காரணம்."

"இந்த இரண்டு காரணங்களுக்குள்ளும் சிக்கி, தமது உயிரை அநியாயமாக இழப்பவர்கள் ஏழைகள் தான். வேலை இல்லை என்ற காரணத்திற்காகவும் ஏழைகள் இராணுவத்தில் சேருகிறார்கள். அது தான் இங்கு பலவீனமாக விளங்குகிறது."

"உண்மை தான்." இதுவரை அமைதியாக நின்ற பண்டார வெறுப்புடன் வார்த்தைகளை வெளியிட்டான். பின் முகத்தில் வெறுப்பைத் தக்க வைத்தபடி அங்கிருந்து அகன்றான்.

முகாமின் வாசலின் அருகே ஓர் உயர்ந்து, வளர்ந்த ஆலமரம் கிளை பரப்பி இருந்தது. அதன் கீழே இருந்த சிமெந்து வாங்கிலில் அவன் அமர முற்பட, களுசான் பின் 'பொக்கட்'டில் இருந்த 'பேர்ஸை' எடுத்தான். கீழே அமர்ந்தான். 'பேர்ஸை' விரித்துப் பார்க்க, அவன் குடும்பப் 'போட்டோ' கீழே விழுந்தது. அதை எடுத்தவன், ஒரு முறை நோட்டமிடுகின்றான்.

படத்தில் அவன் தாய், தங்கை, தம்பிமார் இருவர் ஆகியோருடன் பண்டார நிற்கிறான். கடந்த வருடம் தங்கையின் பிறந்த தினத்தன்று அவர்களின் வீட்டின் முன்பாக எடுத்த படம் அது. அவன் தந்தை படத்தில் இல்லை. அந் நேரத்தில் அவர் மது வெறியில் நிலத்தில் கிடந்தார்.

அன்றைய அத்தினம்.........

எத்தனை ஆனந்தம்! குதூகலம்!!

அவன் நினைவு பின்னோக்கிப் பாய முற்பட, கெமுனுவின் வருகை அதற்கு முட்டுக்கட்டையிடுகிறது. எவ்வித நோக்கும் இன்றி பண்டார எழுந்து, புன்னகைத்தான். கெமுனு நிற்கிறான். நண்பனை ஒரு முறை புதுமையுடன் அலசுகிறான்.

"உன்னைப் பார்க்க ஒரு 'கப்டன்' போலத் தெரிகிறது. நீ கவர்ச்சியாகத் தென்படுகிறாய்." கெமுனு மலர்ச்சியாகப் புன்னகைக்கிறான்.

"'கப்டன்'? இல்லை, நான் சாதாரண 'கோப்ரல்' போல் தோற்றமளிக்கத் தான் விரும்புகிறேன்."

"எளிமையை விரும்புகிறாய் போல...."

"அதே தான்."

கெமுனு மரத்தில் சாய்ந்தான். பண்டாரவை கனிவுடன் நோக்கினான். "மூன்று மாதப் பயிற்சி மிக விரைவில் முடிந்துவிட்டது போலத் தெரிகிறது. இனித் தான் எமது உண்மையான கடமையை எதிர்நோக்கவுள்ளோம். எம்மை யாழ்ப்பாணத்திற்கு அனுப்புகிறார்கள். அங்கு எமது உடல் சின்னா பின்னமாவதற்கும் இடம் இருக்கிறது. எமது உடல் இன்றியே எமது இறுதி ஊர்வலத்தை நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகும்." தனது பேச்சை முடிக்கும் போது கெமுனுவின் முகத்தில் வாட்டம் சிறிது சாய்ந்திருந்தது.

"எவ்வித இலட்சியமும், குறிக்கோளும் இன்றி இராணுவத்தில் சேர்ந்திருக்கிறோம். எல்லாமே அவர்கள் நீட்டும் ஐயாயிரத்திற்காகத் தான். ஏழைகளைப் பணம் என்ன பாடுபடுத்துகிறது என்று பார்த்தாயா?"

கெமுனு பதில் கூறவில்லை. சில வினாடிகள் பண்டாரவைப் பார்த்தபடி நின்றான். பின் வார்த்தைகளை எவ்வித சிரத்தையும் இன்றி வெளியிட்டான். "இதைப் பற்றி நாம் நிறையப் பேசிவிட்டோம். வாக்குவாதப்பட்டுவிட்டோம். மாறி, மாறி ஆட்சிபீடமேறிய கட்சிகளைச் சாடிவிட்டோம். தற்போதைய சூழ்நிலையில் நாம் பொறிக்குள் அகப்பட்டு விட்டோம். சமாதானம் மலரும் போது தான் எமக்கு விடுதலை கிட்டும். அதுவரை இந்தச் சீருடைக்குள் தான் நாம் எமது உடலையும், உள்ளத்தையும் நுழைத்து வைத்திருக்க வேண்டும்."

பண்டாரவுக்கு தொண்டை அடைத்தது. இரண்டு, மூன்று தடவைகள் செருமினான். "உண்மை தான். எமது சீருடையைக் கழற்றி எறிவதென்றால், நாடு முழுவதும் சமாதானம் மலர வேண்டும். அந்த சமாதானம் கிட்டுமா? இல்லாவிடில் அது ஒரு கனவாகத் தான் பல தசாப்தங்களுக்கு நிலவப் போகின்றதா?"

"அது அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம்."

இவ்வாறு இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில், பிரியந்த அங்கு வந்தான். இருவரையும் சுவாரஷ்யமாகப் பார்த்தான். "இருவரும் என்ன பேசுகிறீர்கள்? யாழ்ப்பாணத்தில் உள்ள பெண்களைப் பற்றி பேசுகிறீர்களா? அல்லது அங்கு போனவுடன் எத்தனை புலிகளைக் கொல்லலாம் எனக் கணக்குப் போடுகிறீர்களா?"

பண்டாரவுக்கு எரிச்சல் வந்துவிட்டது. பிரியந்தவைக் கோபத்துடன் நோக்கினான். "பைத்தியக்காரன் போலப் பேசாதே." அவன் குரலில் ஆக்ரோஷம் இருந்தது.

"நான் பைத்தியக்காரன்? இல்லை, நீ தான் பைத்தியக்காரன். நீ தான் எமது எதிரிகளை நண்பர்கள் என்று போற்றுகிறாய். தமிழ் மக்களும் இந் நாட்டு மக்கள் என்று வாதாடுகிறாய். அவர்களுக்கு உரிமைகள் வழங்க வேண்டும் என்று கத்துகிறாய். இராணுவத்தில் இருந்து கொண்டு இப்படிப் பேசும் நீ தான் பைத்தியக்காரன்."

பண்டாரவின் முகம் சிவந்தது. அவனது கைகள் பரபரத்தன. பிரியந்தவின் மீது பாய்ந்து, அவன் குரல்வளையை நசுக்க வேண்டும் என்ற ஆத்திரம் துளிர்விட்டது. அவனின் உணர்ச்சிக் கொந்தளிப்பை கெமுனு புரிந்து கொண்டான். பண்டாரவின் கையைப்பிடித்து, அவனை ஆசுவாசப்படுத்து

வதற்காக சிறிது தூரம் கூட்டிச் சென்றான். "பண்டார, வீணாக இரத்தத்தைக் கொதிக்க வைக்காதே."

பிரியந்த நின்ற இடத்தை விட்டு அசையவில்லை. மறுதலையான உணர்ச்சிகள் கரைந்தன. அவன் உள்ளத்தில் சாந்தம் குடியேறியது. முகத்தின் இறுக்கம் தளர்ந்தது.

"நாம் எத்தனை மணிக்கு இரத்மலானை விமான நிலையத்திற்குச் செல்கிறோம்?" சிறிது நேர மௌனத்தின் பின் பண்டார கேட்டான்.

"இன்னும் எங்களை ஏற்றிக் கொண்டு செல்ல அரை மணித்தியாலத்தில் 'டிரக்' வரும் என்று 'சார்ஜண்ட்' சுஸந்த சொன்னான்" என்ற கெமுனு, நண்பனின் தோளில் கை போட்டான். "பிரியந்த உனது மாவட்டத்தைச் சேர்ந்தவன். அவன் உனது பாடசாலையில் படித்ததாகச் சொல்கிறாய். அப்படி இருந்தும் ஏன் அவனுடன் தேவையில்லாமல் வாக்குவாதப்படுகிறாய்?"

"இருவரது கொள்கைகளும், நோக்குகளும், சிந்தனைகளும் வித்தியாசமானவை. எனக்கு உண்மையாகத் தெரிவது, அவனுக்கு பொய்யாகத் தெரிகிறது. நான் கறுப்பு என்று சொன்னால், வெள்ளை என்கிறான். அதனால் வாக்குவாதப்படுகிறோம். அதுவும் நல்லதல்லவா? புதிய கருத்துக்கள் வெவ்வேறு கோணங்களில் வெளிப்படும். ஆனால், நாம் இருவரும் நண்பர்கள் என்பதை நான் மறக்கவில்லை."

மைதானத்தில் நடந்தபடி தமது பேச்சை இருவரும் தொடர்ந்தனர்.

"இன்று விமானத்தில் ஏறினால் நாளைக்குள் ஏதாவது ஓர் இடத்தில் தங்கிவிடலாம். அதன் பின் என்னுள் நிறைந்திருக்கும் சிறிய ஆசை ஒன்றை நிறைவேற்றுவேன்" என்று சிரித்தான் கெமுனு.

"ஆசை? அந்தப் பாவப்பட்ட மண்ணில் எந்த ஆசையை நிறைவேற்றப் போகிறாய்?"

"பனம் கள்ளு குடிக்கும் ஆசை." கெமுனு அட்டகாசமாகச் சிரித்தான்.

"ப்பூ, இது தானா அந்த ஆசை? அங்குள்ள மக்களுக்கு ஏதாவது கொண்டு செல்வதைப் பற்றிக் குறிப்பிடப் போகிறாய் என்று நினைத்தேன்."

"உனது மனம் போல என் மனம் பரந்தது அல்ல. அங்குள்ள மக்களை எனது நாட்டு மக்கள் என்று கூட என்னால் நினைக்க முடியாதிருக்கின்றது. ஓர் அந்நிய நாட்டுக்குப் போகிறேன் என்ற நினைவுதான் என்னுள் வளர்ந்திருக்கிறது."

"தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையில் பல நூற்றாண்டு காலமாக நிலவிய நெருக்கம், ஒற்றுமை, நட்புறவு, சகோதரத்துவம் என்று சகலவற்றையும் அரசியல் தலைவர்கள் சுயநலத்திற்காகக் குலைத்து விட்டார்கள். அதனால் தான் தமிழர்கள் அந்நியர்களாக, எதிரிகளாக எமக்குத் தோன்றுகிறார்கள். எனவே, தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையில் இயன்றளவு ஆதரவை வழங்க வேண்டும்."

"இப்படிக் கூறும் நீ எப்படி புலிகளுடன் யுத்தம் புரியப் போகிறாய்?"

"புலிகள் வேறு. பொதுமக்கள் வேறு. இரு சாராரையும் ஒன்றாகக் கலக்காதே."

"தமிழர்கள் தான் புலிகள். புலிகள் தான் தமிழர்."

"நீ சொல்வது தவறு. தமிழர்களிடம் ஆயுதம் இல்லை. புலிகளிடம் ஆயுதம் இருக்கிறது."

கெமுனு மௌனத்திற்கு அடிபணிந்து விட்டான்.

## (2)

சிமெந்து வாங்கிலில் நீட்டி நிமிர்ந்து பண்டார சாய்ந்திருந்தான். கைகளைத் தலையணையாகப் பாவித்திருந்தான்.

கெமுனு அங்கிருந்து சென்றுவிட்டான். "'டிரக்' இப்போதைக்கு வராது போல. நான் முன்னால் உள்ள கடையில் இருந்து, 'சிகரெட்' வாங்கிக் கொண்டு வாறன். யாழ்ப்பாணத்தில் 'சிகரெட்'டுக்காக அலைய முடியாது" என்றபடி கெமுனு சென்றிருந்தான்.

அவன் சில நிமிஷங்களாக வராமல் விடவே, பண்டாரவுக்கு அலுப்புத் தட்டியது. .

சூரியனின் கதிர்கள் மெல்ல, மெல்லக் கிளை பரப்ப முயன்றன.

கெமுனு உற்சாகத்துடன் புன்னகைத்தபடி வந்தான்."பத்துப் 'பக்கெட் சிகரெட்'கள் வாங்கிவிட்டேன். பத்து நாட்களுக்கு கவலை இல்லை" என்றவன் பண்டாரவின் இடது புறத்தில் – நிலத்தில் குந்தினான்.

"'சிகரெட்'க்காக எவ்வளவு செலவழித்தாய்?" பண்டார கேட்டபடி உடலை நிமிர்த்தினான்.

"முன்னூற்றி ஐம்பது ரூபாய்."

"ஒரு பத்து நாளில் இவ்வளவு பெரிய தொகையைக் கரியாக்குகிறாயே! எழுபது இறாத்தல் பாண் வாங்கிற காசு...."

"பழகிவிட்டேன், நண்பா. விட முடியவில்லை."

"எப்பொழுது சிகரெட்டைப் புகைக்க ஆரம்பித்தாய்?"

கெமுனு கள்ளப்பார்வை ஒன்றை வெளியிட்டான். "பாடசாலை நாட்களில் – பதினைந்து பதினாறு வயதில் இந்தப் பழக்கத்தை கற்றுவிட்டேன்."

பண்டாரவுக்குத் திகைப்பாக இருந்தது. துயரமாகவும் இருந்தது. பாடசாலை நாட்களில் ஒரு இறாத்தல் பாணை வாங்குவதற்கு அவன் குடும்பத்தினர் அனுபவித்த கஷ்டங்கள் அவன் நினைவை விட்டு அகலவில்லை. அரை இறாத்தல் பாணில் அவன் முழுக் குடும்பமுமே ஒரு மதிய போசனத்தை நிறைவேற்றி இருக்கிறது. இருபது ரூபா காசுக்காகப் பாடசாலைக்கு மட்டம் போட்டுவிட்டு கிராமத்து மயானத்தில் குழி வெட்டி இருக்கிறான். ஐந்து ரூபாய் குற்றியைத் தொலைத்துவிட்டு வீடு வந்தவனை, அவன் தந்தை கித்துல் மரத்தில் கட்டிவிட்டு அடித்திருக்கிறார். பாடசாலை நாட்களில் எத்தனை கசப்பான நிகழ்ச்சிகள்.....?

"பண்டார, என்ன யோசிக்கிறாய்?"

"பணத்தைப் பற்றி யோசித்தேன். அது எந்நாளும் எங்களிடம் தூர விலகியே இருந்தது...... பாடசாலை நாட்களில் பணத்திற்காக நாங்கள் நிறையவே கஷ்டப்பட்டோம்."

"பணத்தைப் பற்றி நிறைய யோசிக்காதே. அது ஒரு பயங்கரமான வஸ்து."

"ஏழைகளுக்கு அது ஒரு எட்டாத கனி."

கெமுனு எழுந்தான். குறுக்கும், நெடுக்குமாக நடந்தான். திடீரென நின்றான். 'சிகரெட்' ஒன்றைப் பற்ற வைத்தான். " பாடசாலை நாட்களை நான் மகிழ்ச்சிகரமாகக் கழித்தேன். அப்பாவின் பணத்தை நிறையக் கரைத்தேன். நிறைய 'சிகரெட்'களை ஊதித் தள்ளினேன். நிறைய சினிமாப் படங்களைப் பார்த்தேன். அதனால் படிப்பில் என்னால் ஆர்வம் செலுத்த முடியவில்லை. அதன் பலாபலனை இன்று தான் அனுபவிக்கிறேன்."

"பணம் மெத்திப் போனதால் உன்னால் படிக்க முடியவில்லை. பணம் காணாததால் என்னால் படிக்க முடியவில்லை. பணம் இருந்திருந்தால்........" பண்டார பெருமூச்சுவிட்டான். அவன் கண்கள் கலங்க முற்பட்டன.

அவன் நிலை கெமுனுக்குப் புரிந்தது. 'சிகரெட்'டை எறிந்துவிட்டு, அவன் அருகில் அமர்ந்தான். "உனது குடும்பத்தில் எத்தனை பேர் அங்கம் வகிக்கின்றனர்?"

"இப்போதைய கணக்கெடுப்புப்படி ஐவர் அடக்கம். அம்மா, தங்கை, இரு தம்பிமார்............"

"அப்பா?"

"இறந்து விட்டார்."

"நீ பாடசாலையில் படிக்கும் போதா அவர் இறந்தார்?"

"இல்லை. அண்மையில் தான் இறந்தார்."

"என்ன தொழில் செய்தார்?"

"ஒரு நாளுமே நிரந்தரத் தொழில் புரியவில்லை. பொதுவாகக் கூலி வேலை தான் செய்தார். அதைக் கூட ஒழுங்காகச் செய்யமாட்டார். அவர் இறந்த போது அவரது பூதவுடலைப் பெட்டியில் வைத்து, எமது வீட்டுக்குள் கொண்டு போகவே முடியவில்லை."

"ஏன்?"

"எமது வீடு— வீடு அல்ல குடிசை— மிகச் சிறியது. பூதவுடலை வெளியில் வைத்தே அவரது ஈமக்கிரியைகளை நடத்தினோம். எத்தனை பேர் எம்மை பரிகசித்திருப்பார்கள்? எனது நண்பர்கள் கூட என்னை நையாண்டி செய்தார்கள். இந்த மண் குடிசையை கல்வீடாக மாற்ற வேண்டும் என்ற ஓர் உத்வேகம் என்னுள் அடிக்கடி கிளம்பியது. அதுவரை ஒரு வேலையும் செய்யாமல், பொறுப்பில்லாமல் வாழ்ந்தவன் ஒரு முடிவுக்கு வந்தேன். அந்த முடிவு தான் என்னை இராணுவ வீரனாக்கியது." பண்டார உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பேசி முடித்தான்.

"தங்கச்சி, தம்பிமார் என்ன செய்கிறார்கள்? படிக்கிறார்களா?"

"என்னைப் பேட்டி காண்கிறாயா? நான் ஒரு 'ஜெனரல்' இல்லை. சாதாரண 'கோப்ரல்' " என்று சிரித்தான். "என்றாலும் சொல்கிறேன். மூவருமே 'ஏதோ' படிக்கிறார்கள். அவர்கள் மனதில் எவ்வித குறிக்கோளும் இல்லை. படிப்பிலும் கெட்டிக்காரர்கள் இல்லை" என்றபடி 'பேர்ஸை' எடுத்து தனது குடும்பப் புகைப்படத்தைக் கெமுனுவிடம் நீட்டினான்.

கெமுனு அதை ஆர்வத்துடன் நோக்கினான். அவன் கண்களுக்குள் ஆச்சரியம் பிரவேசித்தது. உற்சாகத்துடன் விசில் அடித்தான். "நண்பா, உனது தங்கை அழகாக இருக்கிறாள். அவளுக்குப் பெயர் என்ன?"

"நெலும் குமாரி..."

"அழகான பெயர். பயிற்சிக்கு வந்த அன்றே உனது குடும்பத்தைப் பற்றிய விபரங்களை அறிந்திருந்தால், பயிற்சியை அப்படியே கைவிட்டுவிட்டு உனது ஊரில் குடியேறி இருப்பேன்." கெமுனுவின் முகத்தில் குறும்பும், மகிழ்ச்சியும் நெளிந்து வளைந்தன.

" முட்டாள்களுக்கும், முதுகெலும்பு இல்லாதவர்களுக்கும் எனது தங்கையை மணமுடித்துக் கொடுக்கமாட்டேன், நண்பா." பண்டார நகைச்சுவை உணர்வுடன் கூறிய போதிலும், அவன் வார்த்தைகளில் வலிமை நிரம்பி இருந்தது.

கெமுனு வெகுளியாகச் சிரித்து, "நான் வடமேற்கில் தான் பெண் எடுக்க விரும்புகிறேன்" என்று பிடி கொடுக்காமல் பேசியபடி, மீண்டும் குறுக்கும், நெடுக்குமாக நடந்தான். திடீரென நின்றான். பண்டாரவை நோக்கினான். "நண்பா, காதலைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

அவன் இப்படிக் கேட்டதும், பண்டாரவின் முகத்தில் சாய்ந்திருந்த குறும்பும், மகிழ்ச்சியும் மெல்ல வழுகின. முகத்தில் சுருக்கம் விழுந்தது. கண்களில் ஓர் ஏக்கம் நிறைந்து விட்டது.

"மரணம் தன் பயங்கரத்தைக் காதலில் இருந்து தான் பெறுகிறது. காதல் தன் மென்மையையும், கவர்ச்சியையும் மரணத்தின் இருளில் இருந்து தான் பெறுகிறது. கல்லறையின் கரையிலே பூக்கும் மலர் தான் காதல்."

"வேதாந்தம் பேசுகிறாயா?"

"இல்லை. என் அனுபவத்தை வார்த்தைகளில் வருணிக்கிறேன்."

"அப்படி என்றால் நீயும் ஒரு பெண்ணைக் காதலித்திருக்கிறாய். காதலில் தோல்வி அடைந்திருக்கிறாய்."

"ஒருத்தியைக் காதலித்தேன். நிறைய கனவுகள் கண்டேன். கற்பனைக் கோட்டைகள் கட்டினேன். ஆனால், அவள் ஒருத்தனை மணமுடிக்கப் போவதாக அறிந்த போதே எனது காதல் ஒரு தலைக் காதல் என்பதைப் புரிந்து கொண்டேன். இந்த பண்டார அன்றைய தினம் அடைந்த வேதனை...." பண்டாரவின் குரலில் ஈரம் சொட்டியது.

"நீ ஒரு கெட்டிக்காரன், மதிநுட்பம் வாய்ந்தவன் என்று உன் செயல்களை அவதானித்த பின் முடிவு எடுத்தேன். ஆனால், அது தவறு என்பதை நிரூபித்து விட்டாய் போல.... ஒரு பெண்ணின் உள்ளத்தில் என்ன ஒளிந்திருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியாத முட்டாளாகத்தான் இருந்திருக்கிறாய். உனக்காகப் பரிதாபப்படுகிறேன்."

"பெண்களின் உள்ளம் ஆழமானது என்பதை அறிந்திருக்கிறேன். ஆனால், அது வெறுமையானது, நட்புரிமைக்கே அதில் நிறைய இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவள் புரிய வைத்துவிட்டாள். என்னுடன் ஆழமாகப் பழகினாள். ஆர்வத்துடன் கதைத்தாள். அந்தரங்கத்தைப் பரிமாறினாள். என் மீது அலாதியான பிரியம் வைத்திருந்தாள். அவள் ஒவ்வொரு செய்கையும் என்னுள் காதலை உட்தள்ளியது. ஆனால், இறுதியில் தான் உண்மையை அறிந்து, கனவுலகில் இருந்து விழித்தெழுந்தேன். என் கற்பனைக் கோட்டைகள் சரிந்த போதே என் தவறு புரிந்தது. ஆனால், ஆனால்..... நான் பண்டார. சத்தியங்களுக்கு நான் மதிப்பு கொடுக்கிறேன். ஆதலினால், அவளை வாழ்த்தி விட்டு ஊரை விட்டுப் பிரிந்தேன்."

"அவள் ஏன் உன்னைக் காதலிக்கவில்லை?"

"அதுக்கு நிறைய காரணங்கள் இருக்கலாம். அல்லது சில காரணங்கள் இருக்கலாம். அல்லது ஒரேயொரு காரணமாக இருக்கலாம். ஆனால், நான் அவளை மனதாரக் காதலித்ததை அவள் அறிந்திருக்கவில்லை. நான் நாசூக்காக வெளியிட்ட காதல் வார்த்தைகளை அவளால் சரிவரப் புரிய முடியவில்லை. நட்பு என்ற வட்டத்தை விட்டு அவள் வெளியே வரவில்லை."

விஜிதா................ அவள் பற்றிய நினைவு பண்டாரவின் மனதைத் தடவியபடி சென்றது.

அந்தப் பசுமையான முகம்....... அக் கிராமத்தின் புத்தாண்டு அழகியாக அவள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாள் என்பதை ஒலிபெருக்கியில் அறிவித்த போது, அவள் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி, பூரிப்பு.... பண்டார தன்னை மறந்தவனாக, அவளைப் பெருமிதத்துடன் பார்த்தபடி நிற்கிறான்.

அந்தக் கண்களில் அடிக்கடி தென்படும் குறும்பு.... அவன் காதினுள், அவனுக்குத் தெரியாமல் புல்லைச் செருகி, அதனால் அவன் கூசித்துத் திடுக்கிட, அவள் விழுந்து,விழுந்து சிரிக்கும் போது, முகத்தில் வட்டமிடும் மகிழ்ச்சி.....!

அவள் செய்கையில், பேசும் விதத்தில், குரலில், புன்னகையில், சிரிப்பில்..... சகல அம்சங்களிலும் அவன் தனது மனதைப் பறிகொடுத்திருந்தான்.

இருள் வேளைகளில் கூட, வேலியின் இரு புறமும் நின்றபடி இருவரும் அளவளாவும் போது, பண்டார மாறி மாறி வெளியிடும் பெருமூச்சுக்கள்! கம்பி வேலியில் பதிந்திருக்கும் அவள் கை விரல்களைத் தொட்டு, அந்த ஸ்பரிசத்தை அனுபவித்து விட வேண்டும் என்று எத்தனை ஆதங்கங்கள்!

"பண்டார அண்ணா, நீங்கள் ஏன் இராணுவத்தில் சேர்ந்திருக்கிறீர்கள்? உங்கள் உயிரை இழக்கவும் நீங்கள் தயாரா?"

அன்றைய தினம் பௌர்ணமி பெருமனதுடன் பிரகாசித்திருந்தது. அருகில் இருந்த பன்சாலைக்கு பண்டாரவின் குடும்பத்தினர் சென்றிருந்தனர். விஜிதாவின் பெற்றோர் அயல் கிராமத்திற்குப் போய்விட்டார்கள். அவளுடன்– அந்தத் தனிமையின் அர்த்தத்தினால் ஏற்பட்டிருந்த இனிமையை உளப்பூர்வமாக உணர்ந்த நிலையில் அவன் அளவளாவினான்.

"எனது உயிர் யாருக்கு முக்கியம்?" உள்ளத்தின் ஆழத்தில் புதைந்திருந்த ஓர் அற்ப ஆசையை வெளிப்படுத்தாமல், அவன் கேட்கிறான்.

"உங்களுக்கே உங்கள் உயிர் முக்கியமாகத் தெரியவில்லையா?"

அவன் மனம் சோர்ந்து விட்டது. 'உங்கள் உயிர் எனக்கு முக்கியம்' என்று சொல்வாள் என்று தான் அவன் எதிர்பார்த்தான்.

"இல்லை. எனது குறிக்கோளை அடைய, என் உயிரை விடவும் தயாராக இருக்கிறேன்."

"குறிக்கோள்?" அவள் சந்தேகத்துடன் அவனைப் பார்த்தாள்.

"ஆம், இந்தக் குடிசை இருக்கும் இடத்தில் ஒரு கல்வீடு கட்டப்பட வேண்டும். ஏழை என்ற பதத்தில் இருந்து விலகி, நடுத்தர வர்க்கத்தின் புதிய அங்கத்தவனாக இணைய வேண்டும்." பண்டாரவின் முகத்தில் பெருமிதம் முளைத்திருந்தது.

"இந்தக் குறிக்கோளை அடைய உயிரை விடுவது முட்டாள் தனம்

என்பதே எனது கருத்தாகும். உங்களுக்கு வேறு ஒரு தொழில் எடுக்க விருப்பமில்லையா?"

"தொழில்? நான் படித்த படிப்புக்கு எனக்குக் கூலி வேலை தான் கிடைக்கும். ஒரு அலுவலகத்தில் 'பியோன்' வேலை கூடக் கிடைக்காது. உயிர் என்று பார்த்தால் ஆயுள் உள்ள வரை ஏழையாகத் தான் வாழவேண்டும். அதைவிட உயிரைப் பணயம் வைத்து உழைக்கப் போகிறேன். அதன் மூலம் எனது குறிக்கோளை அடைவேன்."

"வெறும் ஐயாயிரம் ரூபாவுக்காக நீங்களே உங்களுக்கு குழி பறிக்கப் போகிறீர்களா?"

"எதிரிக்கு அந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுக்காவிட்டால், எனக்கே நான் குழி பறிக்கத் தேவை இல்லை அல்லவா?"

"உங்கள் எதிரிகள் முட்டாள்கள் அல்லர். சிறந்த கெரில்லாக்கள். செயல் நோக்கம் கொண்டவர்கள். எதற்கும் அஞ்சாதவர்கள். தீட்டப்படும் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றுபவர்கள்."

"உண்மை தான். ஆனால், அவர்களும் எமது தாக்குதலுக்குப் பலியாகிறார்கள். எத்தனையோ தாக்குதல்களில் எமது தொகையை விட அதிகளவு தொகையை அவர்கள் இழந்திருக்கிறார்கள். கொல்வதும், கொல்லப்படுவதும் எமது விவேகத்தில், புத்திக் கூர்மையில் – அதை விட வீரத்தில் தான் தங்கியுள்ளது."

"இராணுவத்தில் சேர்ந்திருக்கிறீர்கள். அதனால் அதில் சேர்ந்திருப்பது சரி என்றே வாதாடுவீர்கள். உங்களுடன் பேசிப்பலன் இல்லை."

இருளுடன் இருளாக மறைந்து விட்டாள். பண்டார அந்த இருளில் சில நிமிடங்கள் கவரப்பட்டிருந்தான்.

இரு நாட்களின் பின் – ஊரில் இருந்து பயிற்சிக்காகக் கொழும்புக்கு புறப்படும் தினத்தன்று விஜிதா அவனிடம் தயங்கித் தயங்கி வந்தாள்.

"பண்டார அண்ணா" என்று விளித்தவள் அவனிடம் சிறிய 'பார்சல்' ஒன்றை நீட்டினாள்.

"என்ன இது?" ஆச்சரியத்துடன் கேட்கிறான் பண்டார.

"ஒரு சின்னப் பரிசு. எனது ஞாபகார்த்தமாக. என்னை மறக்காமல் இருப்பதற்காக."

பண்டார அவள் வார்த்தைகளுக்கு உருகிவிடுகிறான். காதலும், அன்பும் கலக்க அவளைப் பார்த்துப் பரவசப்படுகிறான்.

"திறந்து பாருங்களேன்...."

அவன் 'பார்சலை' திறக்கிறான். ஐந்து அழகான கைக்குட்டைகள்! ஒவ்வொரு கைக்குட்டையின் மூலையிலும் 'அன்பான பண்டாரவுக்கு' என சிவத்த நூலால் தைக்கப்பட்டிருந்தது.

பண்டாரவுக்கு சந்தோஷம் கட்டை மீறிவிட்டது. பற்கள் தெரிய சிரித்து விடுகிறான். "மிக்க நன்றி, மிக்க நன்றி" என ஆனந்தத்தில் கூவினான்.

"உங்கள் முகத்தில் தெரியும் கபடமற்ற மகிழ்ச்சியைக் காணும் போது, எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த மகிழ்ச்சி என்றென்றைக்கும் நீடிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். இம் மகிழ்ச்சியான வேளையில் ஓர்

இனிமையான செய்தியை உங்களுடன் பரிமாற வேண்டும். நீங்கள் இன்று என்னைப் பிரிய முன் இச் செய்தியைச் சொல்ல வேண்டும் என்று எத்தனை தடவைகள் துடித்தேன் தெரியுமா?" தெளிந்த நீரோடை போல, மகிழ்ச்சியை அரவணைத்த நிலையில் வார்த்தைகள் அவளிடமிருந்து புறப்பட்டன.

ஊரை விட்டு வெளியேறும் வேளையில் தன்னைக் காதலிக்கும் செய்தியை வெளியிட்டு 'பண்டார அண்ணா, திக்குமுக்காடி விட்டார்; அவர் முகத்தில் வழியும் அசட்டுத்தனத்தை பாருங்கள்; கைகொட்டிச் சிரியுங்கள்' என்று சொல்லப் போகிறாளோ என்ற மகிழ்ச்சியில் ஒன்றுமே கூறாமல், அவளை அவன் ஆர்வத்துடன் நோக்க, அவள் எவ்வித தடங்கலுமின்றி அந்த உண்மையைப் புட்டு வைக்கிறாள்.

"பண்டார அண்ணா, நேற்று மாலை எங்கள் வீட்டுக்கு காரில் வந்த விருந்தாளிகளைக் கண்டீர்களா?"

"கண்டேன். புதிய விருந்தாளிகள். அவர்களைப் பற்றி உன்னிடம் இன்று காலை விசாரிக்க இருந்தேன். மறந்து விட்டேன். யார் அவர்கள்? சொல்லு." பண்டார அவளைத் துரிதப்படுத்தினான்.

"அவர்கள் ........" என்ற விஜிதாவின் கண்கள் 'படபட'த்தன. முகத்தில் நாணம் கோலமிட்டது.

"சொல்லு ....."

"என்னைப் பேதிரிஸ் முதலாளியின் மகன் பெண் பார்க்க வந்தார். காரில் இருந்து முதலில் இறங்கியவர் தான் பேதிரிஸ் முதலாளி. இன்னொரு ஆண் வந்திருந்தார் அல்லவா? அவர் பேதிரிஸ் முதலாளியின் தமையன். மற்றவர் தாய். கடைசியாக இறங்கியவர் தான்.......". விஜிதா மீதி வார்த்தைகளை விழுங்கிவிட்டாள்.

பண்டார அதிர்ந்து விட்டான். இதயம் சில வினாடிகள் அடைத்துவிட்டது. தன் முன்னாலேயே தன் கனவுகள் குழப்பப்பட்டு விட்டதை, கற்பனைக் கோட்டைகள் சரிந்து விழுந்து விட்டதை உணர்ந்தான். "நீ .... நீ.... என்ன சொல்கிறாய்?" அவன் குரல் மெலிந்திருந்தது.

"பேதிரிஸ் முதலாளியின் மகன் என்னைச் சந்தையிலும், பன்சாலையிலும் கண்டிருக்கிறாராம். அவருக்கு என்னில் விருப்பம் ஏற்பட்டிருக்கிறது. தனது பெரிய தகப்பனைப் போன கிழமை அனுப்பி, எனது சம்மதத்தைக் கேட்டிருக்கிறார். முதலில் நான் இந்த சம்பந்தத்தை விரும்பவில்லை."

"ஏன்?"

"ஒருவரைத் தெரியாமல், அவருடன் பழகாமல் எப்படித் திருமணம் செய்வது என்று எண்ணினேன். ஆனால், அவரைப் பற்றி எனது அப்பாவும், அம்மாவும் உயர்வாகக் கதைத்தார்கள். நல்ல கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னார்கள். இறுதியில் எனது சம்மதத்தை அளித்தேன்."

'விஜிதா, நான் உன்னைக் காதலிக்கிறேன். ஏன் என்னை மறந்து விட்டு பேதிரிஸ் முதலாளியின் மகனைத் திருமணம் செய்யப் போகிறாய்?' என்று கேட்க வேண்டும் என்ற எண்ணம் அவனுள் புகுந்தது. ஆனால், அவள் இன்னொருவனுக்கு வாழ்க்கைப்படுவதற்கு ஒப்புதல் அளித்த பின், அதைக் குழப்பி சிக்கலைத் தோற்றுவிக்க அவன் விரும்பவில்லை. தன் மனதினுள்

ஏற்பட்ட வேதனையை, அதிர்ச்சியை அடக்கியபடி, எவ்வித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல், மௌனமாக அவளையே பார்த்தபடி நின்றான்.

"பண்டார அண்ணா, கலியாணத்திற்கான நாளும் குறித்து விட்டார்கள். வாற மாதம் பதினேழாம் திகதி கலியாணம். ஆனால், நீங்கள் கலியாணத்திற்கு சமூகமளிக்க மாட்டீர்கள் என்று நினைக்கும் போது தான் துக்கமாக இருக்கிறது." விஜிதா எவ்வித தடங்கலும் இன்றி, தனது வெள்ளை மனதைத் திறந்து விடுகிறாள்.

'பேதிரிஸ் முதலாளியின் மகன் அதிர்ஷ்டசாலி'. பண்டார 'முணுமுணு'த்தபடி சென்று விடுகிறான்.

## (3)

சூரியன் உச்சியில் ஒரு மாசுமரு இன்றி வீற்றிருந்தது. அது வெளிப்படுத்திய உஷ்ணம், காற்றுடன் கலந்து, அப்பிரதேசத்தைப் புழுக்கத்தினால் விழுங்க முற்பட்டது.

மாட்டுவண்டி ஒன்று 'கடபுட, கடபுட' என்ற ஒலியை ஏற்படுத்திய வண்ணம், அந்த மண் ஒழுங்கையில் முன்னேறியது.

கட்டிலில் உடலைச் சாய்த்திருந்த பூரணிக்கு அந்தச் சத்தம் ஆர்வத்தை உட்தள்ளியது. விரைந்து எழுந்தவள், ஜன்னலின் ஊடாகப் பார்வையை விசிறினாள். இரட்டை மாட்டு வண்டி ஒன்று, நிறைய மரத்தளபாடங்கள், தட்டுமுட்டுச் சாமான்களுடன் சென்று கொண்டிருந்தது. வண்டிலின் பின்னால், அந்த சாமான்களின் உரிமையாளர்களான ஒரு குடும்பத்தினர் – தகப்பன், தாய், இரு பிள்ளைகள் நடந்து சென்றனர். அவர்களின் முகங்களைக் கவலை அளவுக்கு அதிகம் சுவீகரித்திருந்தது. பன்னிரண்டும், பத்தும் வயதான இரு சிறுமிகளின் நடையில் 'சுறுசுறு'ப்பு அறவே இல்லை. "அம்மா, என்ன உங்கை பார்க்கிறியள்?" என்றபடி சசிகலா வந்தாள்.

"எங்கேயோ இருந்து ஆக்கள் இஞ்ச வருகினம் போல....... தேப்பன், தாய், இரண்டு பிள்ளையள் போற கோலத்தைப் பார்" எனப் பூரணி சொல்ல, சசிகலா திரைச் சீலையை விலக்கிப் பார்த்தாள்.

"பாவம்..... நாங்களும் தான் பாவம். ஐஞ்சாறு மாசத்துக்கு முந்தி நாங்களும் உப்பிடித்தானே வந்தனாங்கள்?"

பூரணி நெடுமூச்செறிந்தாள். "அது யாழ்ப்பாணத்து ஆக்களின்ர வாழ்க்கையில ஒரு மறக்க முடியாத சம்பவம். ஆக்களின்ர துக்கத்தில மழை கூட பங்குபற்றி விட்டுது."

"யாழ்ப்பாணத்துச் சரித்திரம் எழுதப்படக்கிள்ளை ஒரே இரவில அனாதைத்தனமான நிலையில எத்தனையோ லட்சம் ஆக்கள் தங்கட வீட்டை விட்டு இருட்டுக்குள்ளை, மழைக்குள்ளை நடந்து போனதை குறிப்பிடத்தான் வேணும்......."

பூரணி ஒன்றும் சொல்லவில்லை. அவள் மனதினுள் ஐந்து மாதங்களுக்கு முன் நடந்த சம்பவம் துயரத்துடன் குடியேறியது. சில மணிநேர அவகாசத்தில் யாழ்ப்பாண நகரை விட்டு, கைகளுக்கு கிடைத்த சாமான்களுடன்

வண்டிலில் புறப்பட்ட போது.... அவள் அழுதே விட்டாள். அவளைத் தேற்றி நடையைத் தொடர சசிகலா பட்டபாடு..... இருட்டினுள், விளக்கு வெளிச்சத்தில் அத்தியாவசிய சாமான்களை எடுத்து முன் விறாந்தையில் அடுக்குவதற்குள், எத்தனை தரம் ஒவ்வொரு சடப்பொருளுடனும் முட்டி மோதி ........

"ஆச்சி, இன்னும் ஒரு மணித்தியாலத்திலை வெளியேறிப் போடவேணும். இல்லாட்டி......"

'யாரோ' – ஓர் இளைஞனாகத்தான் இருக்கவேண்டும், சொல்லிவிட்டுச் சென்றிருந்தான்.

"இருட்டுக்குள்ளை நாங்கள் படுறபாடு தெரியாமல்.... எடி சசி, உன்ர 'சூட்கேஸையும்' கொண்டு வந்து வையன்...... கந்தசாமியின்ர மாட்டு வண்டி இப்ப வரப்போகுது." பூரணி 'பரபர'க்கிறாள்.

"அம்மா, இருட்டுக்குள்ளை ஒண்டும் தெரிய இல்லை. கை விளக்கை இஞ்ச கொண்டு வாங்களேன்." சசிகலா கத்துகிறாள்.

"உங்கை விளக்கை கொண்டு வர ஏலாது. கைக்கு அகப்படுற சாமான்களைப் போட்டுக் கொண்டு வா. எல்லா சாமான்களையும் கொண்டு போறதெண்டால் லொறிதான் வேணும்" என்று பூரணி 'புறுபுறு'த்தாள்.

முன் அறையில் தான் சசிகலா இருந்தாள். இருட்டைத் துழாவியபடி, கைக்கு அகப்பட்ட தனது உடுப்புக்களை ஒவ்வொன்றாக எடுத்து 'சூட்கேஸினுள்' அடுக்கினாள்.

"சசி, உன்ர இரட்டைப்பட்டுச் 'செயின்' கட்டிலுக்கு கீழ இருக்கிற 'சூட்கேஸுக்குள்ள' இருக்குது. அதையும் எடுத்துப் போடு. கொஞ்சம் கெதிப்பண்ணு." பூரணி அவசரப்படுத்தினாள்.

"எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் வாயைப் பொத்திக் கொண்டு, உங்கட வேலையைப் பாருங்கோ."

"உங்க வாறன்" என்ற பூரணி விளக்குடன் முன் அறைக்கு விரைந்தாள். "வண்டில் வரப் போகுது. கொஞ்சம் கெதிப்பண்ணன்."

விளக்கு வெளிச்சத்தைக் கண்ட சசிகலா, "உதைப் பிடிச்சுக் கொண்டு நில்லுங்கோ. நான் அதுக்கிடையில உடுப்புக்களை அடுக்கிப் போடுறன்" என்றாள்.

பூரணியின் ஊளைச் சதை நிறைந்த உடம்பு நிறைய வியர்த்து விட்டது. நெற்றியில் இருந்து வியர்வை பெருவாரியாக வழிந்தது.

"எல்லா உடுப்புக்களையும் அடுக்கத் தேவையில்லை. தேவையானதுகளை மட்டும் ...."

சசிகலா தாயை எரிப்பது போலப் பார்த்தாள். "அம்மா, வாயைப் பொத்திக் கொண்டு இருக்கமாட்டியளோ? எனக்கு எதை வைக்கவேணும், வைக்கத் தேவையில்லை எண்டு தெரியும்."

'சூட்கேஸ்' நிறைந்தது.

"சரி மூடன்."

"பொறுங்கோ. அலுமாரியைத் திறந்து பார்க்க வேணும்" என்ற சசிகலா பர்மா தேக்கிலான அலுமாரியைச் சத்தத்துடன் திறந்தாள்.

"உன்ர அப்பா முப்பது வருசத்திற்கு முந்தி வாங்கினது. இப்பத்தைய பெறுமதிக்கு ஐம்பதினாயிரமாவது வரும் ."

"பெறுமதியான சாமான்களை எல்லாம் விட்டுட்டுப் போறம். திரும்பி வரக் கிடக்குமோ?"

"எங்க கிடக்கப் போகுது? ஆராவது கொசப்புகள் கொண்டு போயிடுங்கள்."

"பொத்திப் பொத்தி வைச்ச சாமான்களை எல்லாம் விட்டுப் போறம்." சசிகலாவின் குரல் கம்மியது.

"சரி எல்லாத்தையும் எடுத்தாச்சு தானே?"

"இல்லை." 'வெடுக்'கென கூறிய சசிகலா, அலுமாரியின் மேல்தட்டில் இருந்த இரு சேலைகளை எடுத்து 'சூட்கேஸுக்குள்' நுழைக்க முற்பட, "'சூட்கேஸ்' நிறைஞ்சிட்டுது. போதும்" என்றாள் பூரணி.

"அப்பா சாக முந்தி வாங்கித் தந்த சீலை. அவர்ற்றை ஞாபகத்திற்காகக் கொண்டு போகவேணும்."

"அப்பாவும் நேரம், காலம் தெரியாமல் போனதால நாங்கள் படுறபாடு............ சரி, சரி 'சூட்கேஸை' மூடு."

"பொறுங்கோ. லாச்சிக்குள்ளை அப்பான்ர படங்கள் இருக்குது. அதையும் கொண்டு போவம்."

கந்தசாமியின் வண்டில் சத்தத்துடன் வந்து நின்றது. "அம்மோய்." கந்தசாமி குரல் கொடுத்தான்.

"வண்டில் வந்திட்டுது. கெதிப்பண்ணு...."

பூரணி விளக்குடன் முன் விறாந்தைக்கு விரைந்தாள்.

"அம்மா, சாமான்களை ஏத்துவமோ?" கந்தசாமி விறாந்தைக்கு வந்தான்.

"ஓமோம்."

"அம்மா, நல்லூர் திருவிழா மாதிரி சனம் சாரி, சாரியாகப் போகுது. குஞ்சுகள், குருமன்கள் இந்த நட்ட நடு ராத்திரியில..... என்ர சிவனே.... இதுகள் எல்லாம் எங்க போகப் போகுதுகளோ தெரிய இல்லை. என்ர வீட்டில இருந்து இஞ்ச வாற அரைக்கட்டையைக் கடக்க மூண்டு மணித்தியாலம் எடுத்திட்டுது. நாங்கள் எத்தனை மைல் போக வேணுமோ தெரிய இல்ல. கொஞ்சம் கெதிப் பண்ணினால் நல்லது."

"சாமான்களை ஏத்துவம்" என்ற பூரணி விளக்கை விறாந்தை நிலத்தில் வைத்து விட்டு, "நீங்கள் வண்டியில ஏறுங்கோ. நான் சாமான்களை எடுத்துத் தாறன்" என்றாள்.

கந்தசாமி வண்டிலின் மேல் ஏறினான். பூரணி ஒவ்வொரு சாமான்களாகக் கொண்டுபோய் அவனிடம் நீட்டினாள்.

"ஊருப்பட்ட சாமான்கள்....."

"ஓமோம். இனி திரும்பி வாற மாதிரி சூழ்நிலை வருமோ, இல்லாட்டி....."

"எங்கை வரப் போகுது? எல்லாரையும் போகச் சொல்லிப் போட்டாங்கள்."

"ஒரு நாள் அவகாசம் தந்திருந்தால், ஒரு ஒழுங்கோட போயிருக்கலாம்."

"இப்ப இதைக் கதைச்சு... எங்க தங்கச்சி?"

"தன்ர உடுப்புக்களை அடுக்கிறா வருவா."

"நீதவான் ஐயா இருந்திருந்தால் செல்வாக்காக ஏதாவது வாகனத்தில போயிருப்பியள்."

"நல்ல வேளை அவர் இல்லை. இருந்திருந்தால் இந்த மாதிரி விஷயங்களைப் பார்த்துக் கொண்டு அவரால நிம்மதியாக இருக்க ஏலாது."

செல்வரத்தினத்தின் நினைவு பூரணியின் மனதில் நிழலாடியது.

சசிகலா 'சூட்கேஸுடன்' வந்தாள்.

"கந்தசாமி அண்ணை, இதையும் ஏத்தி விடுங்கோ" என்ற சசிகலா, 'சூட்கேஸை' நீட்டினாள்.

வண்டில் நிறைந்து விட்டது.

"சரி போவமோ?" கந்தசாமி வண்டியை ஓட்டத் தயாரானான்.

சசிகலா விரைந்து சென்று, முன் கதவை மூடினாள்.

பூரணி வீட்டின் முன்புறமாக நின்று வீட்டைப் பார்த்தாள். அவளிடமிருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது. அவள் கண்கள் கலங்கின. சில வினாடிகளுக்குள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். சசிகலாவின் கண்களும் குளமாகின.

"வாங்கோ அம்மா, போவம்." சசிகலா அவசரப்படுத்தினாள்.

பூரணி ஒருவாறு அழுகையைக் கட்டுப்படுத்தினாள்." கடைசித் தரமாகப் பார்ப்பம். இனிப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்குமோ......"

வண்டில் புறப்பட்டது. அதன்பின் பூரணியும், சசிகலாவும் நடந்தனர்.

"ஜகா.... ஜகா...." கந்தசாமி மாடுகளைத் துரிதப்படுத்தினான்.

மண் வீதியில் இருந்து தார் வீதிக்கு இறங்கியதும் தான் அந்த மாபெரும் சனக் கூட்டத்தைக் கண்டு பூரணியும், சசிகலாவும் பிரமித்தனர். வலிகாமத்தைச் சேர்ந்த ஆயிரம், ஆயிரம் மக்கள் – வயோதிபர்கள், நடுத்தர வயதினர், இளம் வயதினர், சிறுவர்கள், குழந்தைகள் – அந்த நடுராத்திரியில், குளிரைப் பொருட்படுத்தாமல் நடந்தனர். முழு வீதியும் வாழ்க்கையின் ஒவ்வொரு மட்டத்தையும் பிரதிநிதிப்படுத்தும் மக்களினால் நிரம்பி வழிந்தது. சைக்கிள்கள், மாட்டு வண்டிகள், கைவண்டிகள், 'டிரக்டர்கள்', 'வேன்'கள் என்று எத்தனை வகையான வாகனங்கள் மக்களின் பெருமூச்சுக்களை மீறியபடி சென்றன?

தமது விதியை நொந்தபடி – இலக்குத் தெரியாத நிலையில், இருட்டினைத் துளைத்தபடி மக்கள் நடந்தனர்.

மக்களின் எத்தனை 'முணுமுணு'ப்புக்கள், கூச்சல்கள், கூப்பாடுகள், விமர்சனங்கள், தர்க்கங்கள்....

நடந்தார்கள்.... நடந்தார்கள்...

குழந்தைகள் அழுதன. வீரிட்டுக் கத்தின. வயோதிபர்கள் ஒப்பாரி வைத்தனர். சிறுவர்கள் சிணுங்கினர்.....

அந்தப் பிரதேசத்தின் மகிமைக்கு உரமூட்டும் உயர்ந்து வளர்ந்திருந்த பனை மரங்கள் 'சலசல'த்தன.

மனிதக் கூட்டங்களுக்குள் ஆடுகள், மாடுகள், நாய்கள்...... ஆட்களின் கால்களுக்குள் இடறி எகிறி...... அவை தான் என்ன பாவம் செய்தனவோ?

வானத்தின் கருமை கடுமையாகிறது. நட்சத்திரங்கள் மறைந்தன.

மழைத் தூறல் போட்டது.

சனங்கள் மத்தியில் 'சலசலப்பு'. அதீத அவசரம். "மழை, மழை" என்று சிறுவர்கள் கத்தினார்கள்.

"வானத்திற்கு எங்கட நிலையைக் கண்டாப் போலை அழுகை வந்திட்டுது போல." 'யாரோ' ஒருவர் பகிடியாகச் சொன்னார்.

"ஓமாக்கும்." இன்னொருவர் ஆமோதித்தார்.

தாய்மார் தங்கள் அணைப்பில் கிடந்த சிசுக்களின் போர்வையை மேலும் மூடுகிறார்கள்.

நொண்டிக் கிழவன் ஒருவன் மழையைத் திட்டுகிறான்.

கொஞ்சம் கொஞ்சமாக மழை பெலக்கத் தொடங்கியது.

பயணத்தை இடைநிறுத்த யாரும் தயாராக இருக்கவில்லை. நதியின் வேகத்திற்கு படகு தள்ளப்பட்டது போல, எல்லோருமே முன்னே தள்ளப்பட்டார்கள். நின்று நிதானமாக யோசிக்க எவருக்குமே சந்தர்ப்பம் கிட்டவில்லை.

மழையைப் பொருட்படுத்தவில்லை. நனைகிறோமே என நினைக்கவில்லை. பக்குவங்களை மறந்த நிலையில், மக்கள் கூட்டம் நடையைத் தொடர்ந்தது.

பூரணிக்குக் களைத்தது. இதயம் 'பட, பட'த்தது. அவள் 'பிரஷர்' நோயாளி. அதிக தூரம் நடந்தால் தலை சுற்றும். ஆனாலும், மனத் தைரியத்தை வரவழைத்து, நடந்தாள்.

"அம்மா களைக்குதோ?"

"இல்லை."

"நிண்டுட்டு போவமோ?"

"எங்கை நிக்கிறது?"

சசிகலா வாயை மூடிவிட்டாள்.

எல்லோருமே தெப்பமாக நனைந்து விட்டார்கள்.

மக்கள் பொறுமையாக நடந்தனர்.

"அம்மா நாங்கள் இப்ப எங்கை போறம்?"

சசிகலா 'திடுதிப்பென'க் கேட்டாள்.

"பருத்தித்துறைக்கு....."

"ஏன் சாவகச்சேரிக்கு போக ஏலாதோ?"

"எங்களுக்கு முந்திப் போன ஆக்கள் அங்கை போயிருப்பினம். பருத்தித்துறைக்கு இப்பத்தான் ஆக்கள் போகினம்."

"பருத்தித்துறையில ஆரும் தெரிஞ்ச ஆக்கள் இருக்கினமோ?"

"என்னோட படிப்பிச்ச 'ரீச்சர்' ஒருவ அங்கை இருக்கிறா."

"'அட்ரஸ்' தெரியுமோ?"

"இல்லை. விசாரிச்சால் கண்டு பிடிக்கலாம்."

"அப்ப அங்கை போவம். ஆனால், அங்கத்தைய கிணறு எல்லாம் உப்புத் தண்ணியாம்."

"அதை எல்லாம் இப்ப கதைச்சுப் பிரயோசனம் இல்லை. அங்கை போய் பார்ப்பம்."

மழையின் தாக்கத்தை உணர்ந்தும், உணராத நிலையில் மக்கள் முன்னேறினார்கள்.

வீதியின் ஓரங்களில், வாய்க்கால்களில் விழுந்தவர்கள், முக்கிமுனகிய

நிலையில் கர்ப்பிணிகள், கூனல் முதுகுக்கிழவிகள், பொல்லுகளுடன் கிழவர்கள், தீராத நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் என்று யாவருமே தம்முள் உள்ள பேதங்களை மறந்தவர்களாக அந்த பாத 'யாத்திரை'யில் கலந்து கொண்டார்கள்.

முழு இரவும் நடந்து, விடிந்த பிறகும் பூரணியும், சசிகலாவும் நடந்தார்கள்.

சாவகச்சேரியை அடைந்தனர்.

"அம்மா, மாடு களைச்சுப் போட்டுது. கொஞ்ச நேரம் ஆறிப் போட்டு போவம்." கந்தசாமி சொன்னான்.

"எனக்கு நாரி முறிஞ்சு போச்சுது."

கடை ஒன்றின் தாழ்வாரத்தில் பூரணி அமர்ந்து விட்டாள்.

சசிகலாவுக்குச் சினமாக இருந்தது. உடம்பெல்லாம் எரிந்தது. அடிவயிறு குத்தியது. வயிற்றைக் குமட்டியது. அவள் கீழே குந்தினாள். அவளுக்கு ஒரு புறம் அவமானமாகவும், மறுபுறம் கோபமாகவும் இருந்தது. ஓர் இளைப்பாறிய நீதவானின் மகள் அவள். செல்வத்தில் பிறந்து, வளர்ந்து, மிதக்கிறாள். பிச்சைக்காரர்களை விட கேவலமான நிலையில், பலரும் பார்த்துக் கொண்டே செல்ல, ஓர் அவமானச்சின்னம் போல் விளங்குவதாகவே அவள் உணர்கிறாள். தன் நிலையை நினைத்துப் பார்க்க, அவள் உள்ளம் அழுதது.

அவர்களைக் கடந்து கொண்டு நிறைய சனங்கள் சென்றன.

பூரணியும் சசிகலாவும் எழுந்தனர்.

"அம்மா போவமோ?" கந்தசாமியும் வந்தான்.

பூரணி நேரத்தைப் பார்க்க, அது பதினொன்று என்று காட்டியது.

சூரியன் உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்தது.

"போவம்."

அவர்களது பயணம் தொடர்ந்தது. இப்போது வீதியில் சனநெருக்கம் இல்லை. மக்கள் கூட்டம் ஐதாகி விட்டது. சனவெட்கை தணிந்து விட்டது. ஆனால், வெயில் வெட்கை சுட்டெரித்தது. இருவரும் ஆளுக்கொரு தொப்பி போட்டனர்.

மாலை மங்கும் போது பருத்தித்துறை சந்தியை அடைந்தனர்.

ஒரு பெரு வெள்ளம் போல், மனிதக் கூட்டம் ஒன்று நகரில் குவிந்திருந்தது. எங்கே போவது, என்ன செய்வது என்று தெரியாத நிலையில், அவர்கள் வீற்றிருப்பது போல...... வீதி என்று பாராமல், கீழே நீட்டி நிமிர்ந்து அமர்ந்திருக்கிறார்கள். மூட்டை முடிச்சுக்களின் மேல் குழந்தை, குட்டிகள் ........ பலவித ஒலிகளை எழுப்பியபடி ஆடுகள், மாடுகள், நாய்கள் மனித அங்கத்தவர்களாகச் சோம்பிக்கிடக்கின்றன.

அந்தக் கூட்டத்தினுள் புக பூரணி விரும்பவில்லை. அவள் தயங்கியவாறு நின்றாள்.

"அம்மா, அந்த 'ரீச்சரின்ர' வீட்டைத் தேடிப் போவமோ?" சசிகலா கேட்டாள்.

"எந்தப் பக்கம் போய் தேடுறது எண்டு தெரிய இல்லை. எதற்கும் இப்படியே நடப்பம்."

பூரணியும், சசிகலாவும் முன்னே நடக்க, பின்னால் மாட்டு வண்டில் வந்தது.

அறிமுகமான ஒரு முகமும் தென்படவில்லை. எல்லோருமே அந்நியராகக் காட்சி அளித்தனர்.

ஓர் ஒழுங்கை தென்பட்டது. ஏதோ ஓர் எண்ணத்தில் அதனூடாக நடந்தார்கள்.

"'ரீச்சர்' ...... " என்று ஒரு குரல். அங்கே நளினி நிற்கின்றாள். பூரணிக்கு தனது மாணவியை உடனடியாக அடையாளம் காண முடியவில்லை.

"'ரீச்சர்', என்னைத் தெரிய இல்லையா? நான் தான் நளினி" என்று நளினி தன்னை அறிமுகப்படுத்தியபோதும், பூரணியால் அவளை அடையாளம் தெரியவில்லை. எனினும், "ஓ.... தெரியும், தெரியும்" என இளித்தாள்.

வண்டில் நிறைய சாமான்கள், பூரணியின் அருகில் நின்ற சசிகலாவின் தோற்றம் ......ஆகிய இரண்டும் அந்த உண்மையை நளினியின் மனதுக்குள் உட்தள்ளியது.

"ரீச்சர், யாழ்ப்பாணத்திலை இருந்து வாறீயளாக்கும்." நளினி இழுக்க, "ஓமோம்" என்றாள் பூரணி.

"எங்க போறியள்?"

"என்னோட ஒரு 'ரீச்சர்' படிப்பிச்சவ...."

"பெயர் என்ன?"

"மிஸிஸ் சாம்பசிவம்."

"ஓ, அவவோ? அவ 'ஹஸ்பன்ட்', பிள்ளையளோட கனடாவுக்கு போயிட்டா."

பூரணியின் முகம் சோபை இழந்து விட்டது.

"ஓ....." அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை.

"'ரீச்சர்' உங்கடை நிலைமை புரியுது. 'மிஸிஸ்' சாம்பசிவம் இல்லை எண்டாப் போல பயப்படாதேங்கோ. நீங்கள் எங்கட வீட்டுக்கு வரலாம்."

அக்கணமே பூரணியின் முகம் மலர்ந்தது."சத்தியமாக... ?" எனப் பூரிப்பில் கேட்டாள்.

"ஓமோம். இந்த நேரத்தில உதவாட்டால், எந்த நேரத்தில உதவுறது?"

நளினியின் வீட்டை பூரணியும், சசிகலாவும் அடைய............ நளினியின் தாய் ராஜேஸ்வரி இருவரையும் தயக்கமின்றி வரவேற்றாள்.

"உங்களைப் பற்றி நளினி முந்திச் சொல்லி இருக்கிறாள். இப்ப உங்கட நிலை எனக்கு விளங்குது. நீங்கள் இரண்டு பேரும் இஞ்ச இருங்கோ. சின்ன வீடுதான். ஒரு மாதிரிச் சமாளிப்பம்." இப்படி ராஜேஸ்வரி கூற, பூரணியை மகிழ்ச்சி அரவணைத்தது. அவள் உள்ளம் குளிர்ந்தது.

சசிகலா ஒன்றும் பேசவில்லை. விறாந்தையில் அமர்ந்து விட்டாள்.

மறுநாள் கந்தசாமி அங்கிருந்து அகன்றான்.

"கந்தசாமி இல்லாட்டால் நாங்கள் என்ன பாடுபட்டிருப்பமோ எண்டு தெரியாது" என்ற பூரணி ஐயாயிரம் ரூபாவை அவனிடம் நீட்ட, அவன் நாணிக் கோணி பணத்தைப் பெற்றான்.

புதிய இடம், புதிய சூழ்நிலை. அந்த வீட்டில் ராஜேஸ்வரி, நளினி, அவள் தங்கை வசந்தி வாழ்ந்தனர்.

அடுத்த ஒரு வாரத்திற்குள் பூரணியும், சசிகலாவும் எல்லோருடனும் ஐக்கியப்பட்டு விட்டனர். இரவு நேரங்களில் இரு குடும்பத்தினரும் ஊர்

புதினங்களை, அரசியலை, சமூக விடயங்களை என்று பலவற்றை தமக்குள் பரிமாறி, இருளின் பயமுறுத்தலை அகற்றினர்.

நாட்கள் கழிய அவர்களது மனங்களில் யாழ்ப்பாணத்தைப் பற்றிய சிந்தனை தங்குவது குறைந்தது. ஏக்கப் பெருமூச்சுக்கள் தணிந்தன. ஆனால், அடி மனதினில் எப்பொழுது மீண்டும் யாழ்ப்பாணத்திற்குப் போவோம் என்ற ஆவல் மட்டும் தங்கி இருந்தது. இடையிடையே அது மனதை அரித்தது.

மாதங்கள் மறைய அந்தச் செய்தி அவர்களுக்குக் கிட்டியது.

தென்மராட்சியைக் கைப்பற்றுவதற்காக சூரியக்கதிர்–2 நடவடிக்கை ஆரம்பமாகி விட்டது என்பதே அச் செய்தி.

## (4)

ஒரு பௌர்ணமி தினம் மாலை.

அலிஸ் நோனா தனது மூன்று பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு அருகில் இருந்த பன்சாலைக்குச் சென்று விட்டாள்.

பண்டார வீட்டை விட்டு அசையவில்லை. சிங்களச் சித்திரக் கதைப் புத்தகம் ஒன்றில் தன் கவனத்தைப் பதித்திருந்தான்.

"நீ வரவில்லையா?" அலிஸ் நோனா கேட்டிருந்தாள்.

"இல்லை, இன்று நிறைய சனம் வரும். அங்கு எல்லோருமே என்னிடம் வேலை கிடைத்துவிட்டதா எனக் கேட்டு நச்சரிப்பார்கள். அவர்களுக்குப் பதில் கூறும் போது என் இரத்தம் அளவுக்கதிகம் கொதிக்கும்" என்கிறான் பண்டார.

"பிரதம குரு பௌர்ணமி தினத்தில் சிறந்த உபதேசங்களைச் செய்கிறார்."

"எனக்குத் தெரியும் ஆனால், நான் இன்றைக்கு வரவில்லை."

"உனக்கு இப்பொழுது பிரதம குருவில், பன்சாலையில், புத்த பெருமானில் என்று எல்லாவற்றிலும் வெறுப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதனால் தான் இந்தப் புனிதமான நாளில் கூட பன்சாலைக்கு வர மறுக்கிறாய். கடவுளை மட்டும் நினைத்தால் போதாது. வழிபடவும் வேண்டும். அதற்காகத் தான் பன்சாலை இருக்கின்றது."

பண்டாரவுக்குக் கோபம் வந்துவிட்டது. "உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு இங்கிருந்து போய் விடுங்கள்."

"சின்னப்பிள்ளை மாதிரி இப்பொழுதும் சித்திரக்கதைப் புத்தகம் தான் வாசிக்கிறாய். பிரதம குருவின் உபதேசத்தைக் கேட்டால் உன் மனதைப் பக்குவப்படுத்தலாம்."

தன் கையில் இருந்த புத்தகத்தைப் பண்டார எறிந்தான்.

தாய்க்கு நிலைமை புரிந்து விட்டது. "சரி,சரி நீ இரு. அப்பா நன்றாக கசிப்பு குடித்துவிட்டு, நாலு கால்களில் வருவார். அவருக்கு சாப்பாடு கொடுத்து விட்டு நீயும் சாப்பிடு. எங்களுக்காகக் காத்திருக்காதே. நாங்கள் வரும் போது பாண் வாங்கிக் கொண்டு வருவோம்."

எல்லோரும் மறைந்த பின் பண்டார முற்றத்தின் முன்பாக இருந்த வேப்ப மரத்தின் கீழே குந்தினான். பார்வையை நாலாபுறமும் சுழற்றி, நேரத்தைக்

கடத்தினான்.

காகம் ஒன்று விடாமல் கரைந்தது. பண்டார எழுந்தான். சோம்பல் முறித்தான். காகம் கரைவதை நிறுத்தியது.

இருள் போர்வை அப் பிரதேசத்தை மெல்ல, மெல்லச் சுவீகரித்தது. போர்த்தியது.

பண்டார மீண்டும் பார்வையை விசிறினான். அவன் பார்வையில் விஜிதா சிக்கினாள். அவன் நெஞ்சில் ஒரு சிறிய சலனம் உருவகித்தது. கண்களில் மலர்ச்சி பிறந்தது. ஒரு வகை ஆனந்தம் அவனுள் வியாபித்தது.

விஜிதாவை அவன் எத்தனை தடவைகள் கண்டிருக்கிறான்! அருகில் நின்றவாறும் சம்பாஷித்திருக்கிறான். ஆனால், இன்று அவன் நிலை வித்தியாசமாக விளங்கியது. 'விஜிதா எனக்குரியவள்' என்ற எண்ணம் அவனுள் முகாமிட்டிருந்தது.

அவனிடம் இருந்து புன்னகைகள் அழகாக வெளிப்படுகின்றன. மனதின் ஆனந்தம் எல்லை மீறிய நிலையில், அவனைத் தடுமாற்ற முயன்றது.

விஜிதாவை நெருங்க, நெருங்க நெஞ்சில் 'ஜில்'லென்ற குளிர் படர்வதும், அகல்வதுமாக ஓர் இன்ப வேதனையை அவனுள் புகுத்துகிறது.

தலைவிரி கோலத்தில், ஒரு கையில் வாளியும், மறு கையில் ஈரத்துணிகளுமாக அவள் வருகிறாள். முகம் 'பளீச்'சென்று விளங்கியது. அவள் அழகின் வரைவிலக்கணமாகத் திகழ்வதாக அவன் உணருகிறான்.

அவளிடம் இருந்து சவர்க்காரத்தின் வாசனை வெளிப்பட்டு, அவன் நாசியை மிருதுவாக வருடிச் செல்ல, அந்த சுகானுபவம் அவள்பாற் அவனைத் தள்ளுகிறது. எழுந்தமான எண்ணங்கள் வெளிப்படுகின்றன. ஆனால், யாவற்றுக்கும் கடிவாளம் போட்டபடி அவளை நெருங்குகிறான்.

"ஆ....! பண்டார அண்ணா! வீட்டில் ஒருவரும் இல்லையா?" என்ற விஜிதா, கள்ளம் கபடமற்ற புன்னகை ஒன்றை உதிர்த்தாள்.

அவளின் கேள்விக்கு விடை அளிக்காமல், "ஏன் இருட்டும் நேரத்தில் குளத்திற்கு குளிக்கப் போறாய்?" என பண்டார உரிமையுடன் கேட்க, "பகல் வேளைகளில் எங்கே நேரம் இருக்கிறது? சமையல் வேலை முழுவதையும் நானே கவனிக்க வேண்டியுள்ளது. அத்துடன் பகல் வேளைகளில் ஊர் வாலிபர்கள் அங்கு நிற்பார்கள். என்னைக் கண்டால் பகிடி பண்ணுகிறார்கள்" என்றாள் விஜிதா.

"யார் அந்தப் பைத்தியக்காரர்கள்?"

"நிமால், சரத், அமரே...."

"அவர்கள் மோசமானவர்கள். கவனமாக இரு. அமரே ஒரு பொம்பளைக் கள்ளன். அவன் உன்னைத் தீண்டினாலும் தீண்டுவான்."

"என்னையா?" விஜிதா சிரிக்கிறாள். "அது ஒரு போதும் நடக்காது. அவன் என்னை நெருங்கினால் ஒரு இடியில் கீழே விழுத்தி விடுவேன்." அவள் கண்களில் கோபம் கொப்பளித்தது.

பண்டார உடனடியாக ஒன்றும் சொல்லவில்லை. அவன் முகத்தில் சில வினாடிகள் தவிப்பொன்று தத்தளித்தது. தொண்டையைச் செருமிவிட்டு பேசினான். "நான் உனக்குத் துணையாக வரட்டுமா?"

"துணைக்கு?" அவள் கேள்வியில் வியப்பு சிக்குண்டிருந்தது. "வேண்டாம் அண்ணா. என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் மனோபலம் என்னிடம் உள்ளது."

பண்டாரவின் முகத்தை அரவணைத்திருந்த தவிப்பு அகன்று, ஏமாற்றம் மெலிதாகப் படர்ந்தது. அவன் பேச்சு நின்று விட்டது.

இதை விஜிதா அவதானிக்கவில்லை. அவள் தொடர்ந்தும் எவ்விதத் தடங்கலும் இன்றிப் பேசினாள்.

"அண்ணா, 'சூரியக்கதிர் –1' நடவடிக்கை முடிந்து விட்டதாக வானொலியில் செய்தி ஒலிபரப்பினார்கள். எமது இராணுவ வீரர்கள் உண்மையிலேயே கெட்டிக்காரர்கள்தான். யாழ்பாணத்தைக் கைப்பற்ற முடியாது என்று நிலவிய மாயையை அவர்கள் அழித்துவிட்டார்கள். நாளைக்கு இலங்கையின் சிங்களக் கொடியை ஏற்றப் போகிறார்களாம்."

"வெறும் நிலத்தைக் கைப்பற்றி என்ன பிரயோசனம்? மக்கள் எல்லோரும் வெளியேறிவிட்டார்கள். இப்பொழுது அப்பகுதியில் சொற்ப மக்களே இருக்கிறார்கள்."

"என்றாலும் புலிகளின் மாயையைப் படையினர் தவிடுபொடியாக்கி விட்டனர். எதிர்காலத்தில் வேறு 'ஒபரேஷன்களைச்' செய்து மக்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்றப் படையினர் நடவடிக்கை எடுப்பார்கள்."

"அதை நான் வரவேற்கிறேன். அப்பாவி மக்களுக்கு சிறந்த வாழ்க்கையை அளிக்க இராணுவத்தினர் முன்வந்தால் நான் அதை வரவேற்பேன். கடந்த பதின்மூன்று வருடங்களாக தமிழ் மக்கள் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்து விட்டார்கள்! எத்தனை ஆயிரம் பேர் இறந்துவிட்டார்கள். எத்தனை ஆயிரம் பேர் தமது வீடு, வாசல்களை இழந்து விட்டார்கள். அவயவங்களை இழந்து, பார்வையை இழந்து...... பாவம், பாவம்...."

"பண்டார அண்ணா, நீங்கள் தமிழ் மக்களைப் பற்றித் தான் கதைக்கிறீர்கள். சிங்கள, முஸ்லிம் மக்க்ளைப் பற்றி ஏன் கதைக்கிறீர்கள் இல்லை? ஓர் இரவில் முஸ்லிம் மக்கள் ஐநூறு ரூபா பணத்துடன் மட்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதைப் பற்றி ஏன் மறந்து விட்டீர்கள்? அவர்கள் மனிதர்கள் இல்லையா? சிங்கள மக்கள் எத்தனை பேர் அநியாயமாக இறந்தார்கள்? முடமானார்கள்? வீடு வாசல்களை இழந்தார்கள்?"

"உண்மை தான். நீ சொல்வதை ஒப்புக் கொள்கிறேன். இந் நாட்டில் சிங்கள, முஸ்லிம் மக்கள் பாதிப்படையும் போது அரசியல்வாதிகள், பொதுநலத்தொண்டர் தாபனங்கள், பத்திரிகைகள், இனப்பற்றுள்ளவர்கள், தமிழ் விரோதிகள், மதகுருமார்கள் என்று பல தாபனங்களும், ஆட்களும் குரல் எழுப்பியிருக்கிறார்கள். கண்டனம் தெரிவிக்கிறார்கள். ஆனால், தமிழர் பாதிப்படையும் போது அதைப் பற்றிக் கதைப்பார் இல்லை. தமிழ் அகதி முகாமில் குண்டு "வீசப்பட்டு, இறப்பவர்கள் யாவரும் புலிகள் என நாமம் சூட்டப்படுகிறார்கள். அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்க யாரும் இல்லை. காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஆஸ்பத்திரிகள் இல்லை. அவர்களுக்கு நிவாரணமும் வழங்கப்படுவதில்லை."

"இனி அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு ஆஸ்பத்திரி இருக்கும். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும். சிறிது காலம் பொறுத்திருங்கள். தமிழ்

மக்களும் எங்களைப் போல சுதந்திரத்துடன் வாழப் போகிறார்கள்."

"அது அரசாங்கம் நீட்டும் கரத்தில் தான் தங்கியுள்ளது. சிங்கள மக்கள் அவர்களை அரவணைக்க வேண்டும். சிங்களத் தலைவர்கள் இனத்துவேஷத்தை குழிதோண்டிப் புதைக்க வேண்டும். அப்பொழுதே இராணுவத்தின் இந் நடவடிக்கையின் பலனை இரு சாராரும் அனுபவிப்பார்கள்."

"அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இனி வடமராட்சி, தென்மராட்சி ஆகியவற்றையும் படையினர் கைப்பற்றப் போகிறார்களாம். அங்குள்ள மக்களை விடுவிப்பதே படையினரின் நோக்கமாகும். அவர்களது அடுத்த 'ஒபரேஷன்களுக்கு' இன்னும் பத்தாயிரம் இராணுவ வீரர்கள் தேவைப்படுகிறார்கள்."

"இதைப் பற்றிக் கேள்விப்பட்டேன். எனது நண்பர்கள் மூவர் இராணுவத்தில் சேருவதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள்."

"அப்பாவின் வயலில் வேலை செய்யும் ஒருவன் இராணுவத்தில் சேர்ந்து விட்டான். அவன் பயிற்சிக்காக மாத்தறைக்குப் போய்விட்டான். மீசை கூட அவனுக்கு முளைக்கவில்லை." சிரித்தபடியே விஜிதா போய்விட்டாள்.

பண்டார மீண்டும் மரத்தடிக்கு வரமுற்பட, புஞ்சி சிங்கோ தள்ளாடியபடி வந்தான்.

பண்டார நின்றான். தகப்பனை வெறித்துப் பார்த்தான்.

"மகன் ........" என்றபடி வந்த புஞ்சிசிங்கோ, மகனை ஒரு தினுசாக நோக்கினான். பின் ஆந்தையைப் போல ஒலியெழுப்பியபடி இளித்தான். "பண்டார மகன்..." மகனை உச்சி முதல் உள்ளங்கால் வரை நோட்டமிட்ட புஞ்சி சிங்கோ கண்களை பலமுறை சிமிட்டினான். "மகன், நீ நன்றாக வளர்ந்து விட்டாய். என்னை விட உயரமாக விளங்குகிறாய். கவர்ச்சியான தேகக்கட்டு..... எனக்கு இப்படி ஒரு மகனா?"

பண்டாரவின் முகத்தில் ஒரு மாற்றமும் தென்படவில்லை. அசுவாரஷ்யத்துடன் தகப்பனைப் பார்த்தபடி நின்றான்.

"வா மகன்." புஞ்சி சிங்கோ மகனின் தோளில் கையைப் போட்டு, அவனை அணைத்தவாறு அழைத்துச் சென்றான்.

பண்டாரவுக்கு தகப்பனின் செய்கை வெறுப்பையும், எரிச்சலையும் ஏற்படுத்தின. தகப்பனிடம் இருந்து வெளிப்பட்ட கசிப்பு நாற்றம் அவன் வயிற்றைக் குமட்டியது. தகப்பனிடம் இருந்து விலக முற்பட்டான். தகப்பன் விடவில்லை. அணைப்பை இறுக்கினான்.

"நீ எனது மகன். என்னை விட நீ மேல்.... அறிவாளி, படித்தவன். எல்லாம் தெரிந்தவன். அரசியல்ஞானி. ஆனால் மகன், உனக்கு அனுபவம் குறைவு. எனக்கு அனுபவம் அதிகம். மானம், மரியாதை, கௌரவம் ஆகியவற்றைப் பற்றி எனக்கு சிறிதளவே தெரியும். இன்பத்தை விடத் துன்பத்தைப் பற்றியே தெரியும். ஆசை என்பதன் அர்த்தமே புரியாது. ஆனால், அன்பு, பாசம் ஆகியவற்றின் அர்த்தம் எனக்குத் தெளிவாகப் புரியும். அன்பின் ஆழத்தை உணர்ந்திருக்கிறேன். என் வாழ்க்கையில் நான் நிறைய அன்பு உள்ளங்களைச் சந்தித்திருக்கிறேன்......" பிதற்றியபடி புஞ்சி சிங்கோ நடந்தான்.

இருவரும் வீட்டின் முன்னால் இருந்த வாங்கிலில் அமர்ந்தனர். பண்டாரவின் பார்வை விஜிதாவின் வீட்டில் பதிந்திருந்தது. அவள் அங்கு

எங்காவது தென்படுகிறாளா எனக் கண்களால் மேய்ந்தான். அவளின் சிலமன் தென்படவில்லை.

மகனின் கையைப் புஞ்சி சிங்கோ வாஞ்சையுடன் பற்றினான்." மகன், எனது பார்வை மங்கிக் கொண்டு வருகிறது. காதும் மந்தமாகிறது. ஒவ்வொரு புலனாக இழக்கின்றேன். தென்னை மரத்தில் ஏறி, தேங்காய் பிடுங்கவே கஷ்டப்படுகிறேன். பன்னிரண்டு வயதில் இருந்து உழைத்து, உழைத்து தேய்ந்து விட்டேன்." புஞ்சி சிங்கோவின் கண்கள் கலங்கின.

இப் புதிய தகவல்களைக் கேட்டு பண்டார நெகிழ்ந்து விட்டான். மலைத்தும் விட்டான். "பன்னிரண்டு வயதா? என்ன சொல்கிறீர்கள் அப்பா?"

புஞ்சி சிங்கோ கைகளினால் தனது கண்களைத் துடைத்தான். "மகன், அது ஒரு பெரிய கதை. ஒரு நல்ல நாளில் அதைப் பற்றி சொல்கிறேன். இப்பொழுது சொன்னால் அழுதுவிடுவேன்."

புஞ்சி சிங்கோ எழுந்தான். குசினிக்குள் சென்றான். உள்ளே பீங்கான் விழும் சத்தம் கேட்டது. பண்டார அசையவில்லை. யோசனை அவன் மனதினுள் புகுந்தது. தகப்பன் அவனுள் ஊட்டிய ஆர்வம் அவன் சிந்தனையில் பல கேள்விகளை எழுப்பிது.

தாய் மீண்டும் வீடு வந்த போது, தகப்பன் உறக்கத்திற்கு அடிமையாகிவிட்டான். எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிட்டார்கள். தங்கையும், தம்பிமாரும் படுக்கைக்குப் போன பின்னர் தாயை நெருங்கினான் பண்டார. அது ஒரு தனிமையான சூழ்நிலை. பௌர்ணமி நிலவு வஞ்சகமில்லாமல் பண்டாரவையும், அலிஸ் நோனாவையும் அணைத்திருந்தது.

"உனது அப்பா ஒரு பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். நிறைய சகோதர, சகோதரிகள். அவர்கள் இப்பொழுது எங்கிருக்கிறார்கள் என்று எவருக்குமே தெரியாது. அப்பாவையும், மற்றவர்களையும் வளர்க்க உனது தாத்தா கஷ்டப்பட்டாராம். அதனால் பன்னிரண்டு வயதில் அப்பா ஒரு வீட்டில் வேலைக்காரனாகச் சேர்க்கப்பட்டார். மற்றப் பிள்ளைகள் எல்லோரும் படிக்கும் போது, உனது அப்பா ஒரு தொழில் செய்தார். அன்று முதல் இன்று வரை அவர் ஓய்வு ஒழிச்சல் இன்றி ஏதாவது ஒரு தொழிலைச் செய்கிறார்."

பண்டாரவுக்கு தூக்கம் கண்களைச் சுழற்றியது. படுத்துவிட்டான்.

பிறிதொரு தினத்தில் சுகவீனமுற்று பாயில் கிடந்த போது புஞ்சி சிங்கோ தனது மனதை அளவுக்கதிகம் அவிழ்த்தான். தகப்பன் கூறுவதை பண்டார அக்கறையுடன் செவிமடுத்தான்.

"எனது வேலைக்கார வாழ்க்கையைக் கொழும்பில் உள்ள ஒரு 'யாழ்ப்பாணத்து ஐயா'வின் வீட்டில் தான் ஆரம்பித்தேன். அந்த ஐயா ஒரு கனவான், கண்ணியமானவர். சுருங்கச் சொன்னால் ஒரு கடவுள். என்னை வளர்த்து, ஆளாக்கிய மகான். அன்பின், பாசத்தின் அர்த்தங்களை என்னுள் ஊட்டியவர்."

பண்டார மௌனமாகத் தகப்பனைப் பார்த்தபடி, ஒன்றும் கூறாமல் அமர்ந்திருந்தான்.

"பதினைந்து வயது முதல் இருபத்தைந்து வயது வரையுள்ள காளைப் பருவத்தின் போது நான் யாழ்ப்பாணத்தில் தான் வாழ்ந்தேன். அந்தப் பத்து

வருடங்களில் எத்தனை அன்பு உள்ளங்களைச் சந்தித்திருப்பேன்!"

"நீங்கள் சொல்வது உண்மையா அப்பா?"

"நான் ஏன் எனது மகனுக்குப் பொய் சொல்ல வேண்டும்? இதைப் பற்றி நான் உனது அம்மாவுக்கு சாடை,மாடையாகச் சொல்லி இருக்கிறேன். நான் யாழ்ப்பாணத்தில் கழித்த நாட்கள்........" புஞ்சி சிங்கோ பெருமூச் செறிந்தபடி மகனை நோக்கினான். அவன் ஏதும் பேசுவான் என புஞ்சி சிங்கோ எதிர்பார்த்தான். அவன் மௌனம் சாதிக்கவே, தொடர்ந்தும் பேசினான்.

"யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பத்து வருடங்களில் வாழ்க்கையின் சிறந்த பக்கங்களை எத்தனை தடவைகள் புரட்டி இருப்பேன்? அன்பை, பண்பை, பாசத்தை, பொதுநலத்தை என்று பலவற்றை உணர்ந்து, எத்தனை தடவைகள் தடுமாறி இருப்பேன்? அவர்கள் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள் யாவற்றிலும் தெய்வ பக்தியைக் கண்டு மெய்சிலிர்த்தேன். அவர்களது அமைதியான வாழ்க்கை முறையை, ஆடம்பரமற்ற செய்கைகளை, ஆணவமற்ற போக்குகளைக் கண்டு 'இப்படியும் மனிதர்களா' என வியந்திருக்கிறேன்!" கண்களை மூடியவண்ணம் புஞ்சி சிங்கோ பேசிக் கொண்டிருக்க, அவன் அமைதிப் பேச்சை நெலும் குமாரி கத்தரித்தாள்.

"அப்படி என்றால் அவர்கள் ஏன் துப்பாக்கியை ஏந்தி, அமைதியைக் குலைத்தார்கள்?" அவள் குரலில் இகழ்ச்சியும், நகைப்பும் இழையோடின.

"அவர்களது உரிமைகளை நீங்கள் பறிக்க முற்பட்டால், அவர்கள் சும்மா இருப்பார்களா? உங்களுக்கு 'சனசக்தி' அட்டைகள் விநியோகிக்கப்படவில்லை என்பதற்காக நீங்கள் எல்லோரும் உதவி அரசாங்க அதிபரிடம் போய் உரிமைக் கொடியை உயர்த்தினீர்கள் அல்லவா? அவரும் உங்களுக்கு உதவி செய்யாமல் விட, அரசாங்க அதிபரிடம் போகவில்லையா? அது மாதிரித்தான் தமிழர்கள் தமது உரிமைகளுக்காகச் சாத்வீக ரீதியில் போராட்டம் நடத்த, அதுக்குத் தீர்வு வழங்காமல், அரச படைகளினதும், குண்டர்களினதும் அனுசரணையுடன் காட்டுமிராண்டித்தனமான முறையில் அதை நசுக்கியதை மறந்து விட்டாயா, மகள்? இனப் பிரச்சினைக்குச் சரிவர தீர்வு வழங்கப்பட்டிருந்தால், அது இன்று இந்தளவுக்கு பாரிய அழிவினை உருவாக்கியிருக்காது. தீர்வு வழங்க முடியாதளவுக்கு விசுவரூபம் எடுத்திருக்காது."

தகப்பனிடம் இருந்து இவ்வளவு ஆழமான, ஆணித்தரமான கருத்துக்கள் வெளிப்பட, பண்டார வியப்புற்றான். நெலும் குமாரி பதில் அளிப்பதற்கு வார்த்தைகளைக் கோர்வையாக்குவதில் சிரமப்பட, புஞ்சி சிங்கோ குரலை உயர்த்தியபடி, தொடர்ந்தும் பேசினான்.

"யாழ்ப்பாணத்தவர்கள் விடாமுயற்சி உள்ளவர்கள். கடின உழைப்பை நல்குபவர்கள். கல்வி விஷயங்களில் கூட ஒரு முன்னோடியானவர்கள். எதையும் அக்கறையுடன், முன்யோசனையுடன் மேற்கொள்வார்கள். அப்படியானவர்களின் கழுத்தில் அரசாங்கம் கத்தியை வைத்தது. அதனால் அவர்கள் துப்பாக்கி ஏந்தினார்கள்."

"நீங்கள் யாழ்ப்பாணத்தவர்களை அளவுக்கு மீறி புகழ்கிறீர்கள். அவர்கள் தந்திரசாலிகள், அயோக்கியர்கள், பெருமிதம் கொண்டவர்கள், சுயநலவாதிகள், ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்டவர்கள். சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் தமது அடிமைகள் என நினைக்கிறார்கள். துப்பாக்கியினால்

இந்த நாட்டின் மூன்றில் ஒரு பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர பிரயத்தனம் எடுக்கிறார்கள். இவர்களை அடக்கி, ஒடுக்கினால் தான் ஒவ்வொரு பௌத்தனும் நிம்மதியாக மூச்சு விடலாம்." நெலும் குமாரி ஆக்ரோஷத்துடன் கத்தினாள்.

"உன்னைப் போல பலரும் இப்படிப் பேசுவதனால், எண்ணுவதால் தான் இந்த சின்னஞ்சிறு நாட்டில் இன்று இனப்பிரச்சினை தீர்க்க முடியாத நிலைக்குள் சிக்கிவிட்டது. இனப் பிரச்சினையைத் தீர்த்தால் தான் நாட்டை அபிவிருத்தி செய்யலாம் என்ற நிலை இன்று நிலவுகின்றது. என்றபடியால் யாழ்ப்பாணத்தவர்களுக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விட்டு, நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்கான தருணம் வந்துவிட்டது. காலம் கடக்கக் கடக்க, தீர்வு தூரத் தூர போகப் போகிறது."

யாவற்றையும் பண்டார அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் வாய் திறந்து ஒன்றுமே கூறவில்லை.

"அப்பாவுக்கு பைத்தியம். யாழ்ப்பாணத்தவர்களுக்குத் தேவையில்லாமல் வக்காலத்து வாங்குகிறார். இங்கும் மின்கம்ப தண்டனை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது." நெலும் குமாரி பதிலை எதிர்பார்க்காமல் சென்று விட்டாள்.

பண்டாரவின் மனதில் புதிய எண்ணங்கள் மெல்ல, மெல்லப் புகுந்தன.

## (5)

நேரம் எட்டு மணியைத் தாண்டியது. ஆறரை மணிக்கு வந்து இராணுவ வீரர்களை இரத்மலானை விமான நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான 'டிரக்' வரவே இல்லை.

"ஏதாவது கண்ணி வெடிக்கு அகப்பட்டிருக்குமா?" ஒருவன் நகைச்சுவையாகச் சொல்லியபடி சென்றான்.

"இருக்கலாம். கொழும்பில் நிறையப் புலி உறுப்பினர்கள் இருக்கிறார்களாம்." இன்னொருவன் அதை ஆமோதித்தான்.

பண்டாரவின் மனதினுள் அடங்கி இருந்த உற்சாகம் தணிந்து விட்டது. விரைவிலேயே யாழ்ப்பாணத்தை அடைந்து விட வேண்டும் என்ற ஆதங்கம் அவனுள் அடங்கி இருந்தது.

கெமுனு வந்தான். ஒரு 'பணிஸை' பண்டாரவிடம் நீட்டினான். "இந்தா, இது உனக்கு."

பண்டார 'பணிஸை' மருட்சியுடன் நோக்கினான். பின் மெல்லப் புன்னகைத்தான். "இதுவா காலை ஆகாரம்?"

"அப்படித் தான் போல இருக்கிறது."

"ஒரு 'பணிஸை' தின்று விட்டு ஒரு வலிமையான இயக்கத்துடன் எவ்வாறு போராடுவது?"

இதைக் கேட்டு கெமுனு வாய்விட்டுச் சிரித்தான். "யாழ்ப்பாணத்து மண்ணில் காலைப் பதிக்க முன்னரே எதிரியைப் பற்றி யோசிக்கிறாயா?"

கெமுனுவின் வார்த்தைகளில் பரிகாசம் நிறைந்திருப்பதைப் பண்டார அவதானித்தான். சூடாக இரு வார்த்தைகள் பொழிய நினைத்தான். ஆனால்,

தன் எண்ணத்தைக் கைவிட்டு, பார்வையை ஏகாந்தமாகச் செலுத்தினான்.

பண்டார 'பணிஸை' சாப்பிட்டான். கல்லொன்று பற்களுக்குள் அகப்பட்டது. 'ஆ' என்று கத்தினான்.

"'பணிஸு'க்குள்ளும் எதிரி இருக்கிறான் போலும்." கெமுனு வாய் விட்டுச் சிரித்தான். அவன் சிரிப்பில் பண்டார அரைகுறையாகப் பங்கெடுத்தான்.

"இன்றைக்கு நாம் யாழ்பாணத்திற்குப் போக முடியாது போல." சொற்ப வேளையின் பின் பண்டார வார்த்தைகளை இழுத்தான்.

"அப்படி போலத்தான் தெரிகிறது. பெரும்பாலான விமானங்கள் யாழ்ப்பாணத்தில் தரித்து நிற்கின்றனவாம்" என்றான் கெமுனு.

"என்ன காரணம்?"

"இரு முக்கிய அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருக்கிறார்கள்."

"யாழ்ப்பாணத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் நடப்பதாக பத்திரிகைகளில் வாசித்தேன். அதுக்காக அவர்கள் செல்கிறார்கள் போலும்."

"ஆம் நண்பனே! நிறைய வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்த்து மாபெரும் திட்டங்களை அரசாங்கம் தீட்டியுள்ளதாம். பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் யாழ்ப்பாணத்தைக் கட்டி எழுப்புவதற்காக முன் வந்திருக்கின்றனவாம்."

"கட்டிடங்களைக் கட்டி எழுப்புவது மட்டும் போதாது. வடக்கு மக்களுக்கும், தெற்கு மக்களுக்கும் இடையில் ஒரு பாலத்தைக் கட்ட வேண்டும். தமிழ் மக்களின் உடைந்த உள்ளங்களை ஒட்ட வேண்டும். தமிழர்கள் மனதில் தோன்றியுள்ள பயம், வெறுப்பு, சந்தேகம் ஆகியவற்றைக் களைய வேண்டும்."

"தெற்கில் உள்ள சிங்களத் தாய்மார்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி அங்குள்ள மக்களுக்கு பாலூட்டினாலும் நல்லதல்லவா?" என்று கேட்டுவிட்டு நமுட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தான் கெமுனு.

பண்டாரவுக்கு கோபம் வந்து விட்டது. "நீ ஒரு விஷயத்தையும் தீவிரமாக சிந்தித்துப் பார்க்க மறுக்கிறாய். அது தான் சிறு பிள்ளை போலக் கதைக்கிறாய்." பண்டாரவின் வார்த்தைகள் சீற்றத்தில் தோய்ந்திருந்தன.

"பெரும்பாலான அரசியல்வாதிகளைப்போல சூது,வாது, கள்ளம், கபடம் என்று எதுவுமே எனக்குத் தெரியாது. சமாதானப் பிரியர்கள் போல எனக்குப் பேசத் தெரியாது. நான் இராணுவ வீரன். துப்பாக்கியினால் எதிரியைச் சுடத்தான் எனக்குத் தெரியும். எனது மேலதிகாரி இடும் கட்டளையை நிறைவேற்றத்தான் என்னால் முடியும். உறவுப் பாலங்களைக் கட்டவோ, புண்பட்டிருக்கும் மனங்களுக்கு ஒத்தடம் புரியவோ எனக்குத் தெரியாது" என கெமுனு விளக்கினான்.

பண்டார பேசுவதை நிறுத்தினான். தனது கருத்துகளுக்கு எதிரான கருத்துக்களே கெமுனுவிடம் இருந்து வெளிப்படும் என்பதை அவன் புரிந்தான். அவனுடன் தர்க்கப்படுவதில் அர்த்தம் இல்லை என்பதை உணர்ந்தவனாக 'பணிஸை' சாப்பிட்டான். வயிறு சற்று நிறைந்தது. அருகில் இருந்த குழாயடிக்குச் சென்று நீர் குடித்துவிட்டு வந்தான். மீண்டும் நண்பன் அருகில் அமர்ந்தான்.

"யாழ்ப்பாணத்துக்குப் போக வேண்டும் என்ற எனது கனவு இன்று தான் நிறைவேறப் போகிறது" என்று பண்டார சொன்னான்.

"இதே விஷயத்தை நீ என்னிடம் பல தடவைகள் சொல்லி விட்டாய். ஏன் யாழ்ப்பாணத்திற்குப் போக வேண்டும் என்று விரும்புறாய்?"

"யாழ்ப்பாணத்திற்கு ஒரு தடவை செல்வதற்கு நான் முயற்சி செய்தேன். ஆனால், முடியவில்லை."

"இது புதிய தகவல், நண்பா. அதை விபரமாகச் சொல்."

"எனது அண்ணனும் இராணுவத்தில் 'கோப்ரலாக' இருந்தவர். பூநகரித் தாக்குதலின் போது அண்ணனைப் புலிகள் இயக்கத்தினர் மடக்கிப் பிடித்து தம்முடன் கொண்டு சென்று விட்டனர். அவருடன் இன்னும் பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவர்களில் அண்ணனுடன் மூன்று பேர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். அவர்களை மீட்டு வருவதற்காக எமது ஊர் பன்சாலை பிரதம குருவுடன் நானும், அம்மாவும், மற்றவர்களின் பெற்றோரும் செல்வதற்கு முயற்சி எடுத்தோம். அதற்காக நாங்கள் பட்டபாடு..... " பண்டார பெருமூச்சு விட்டான்.

"யாழ்ப்பாணத்திற்குப் போனீர்களா?"

"கொஞ்சம் பொறு. விபரமாகச் சொல்கிறேன். அரசாங்கத்தினதும், புலிகளினதும் அனுமதி கிடைக்க இரண்டு மாதங்கள் எடுத்திருக்கும். யாழ்ப்பாணத்திற்குப் போகப் போகிறோமே என்று எண்ணிய போது எவ்வளவு மகிழ்ச்சியில் திளைத்தோம்! ஆனால், கடைசி நேரத்தில் அண்ணன் உயிருடன் இல்லை என்ற தகவல் கிடைக்க நானும், அம்மாவும் செல்லவில்லை."

"அப்படி என்றால் உன் அண்ணனை அவர்கள் கொன்று விட்டார்களா?"

"முதலில் நானும் அப்படித்தான் எண்ணினேன். ஆனால், புலிகளால் விடுவிக்கப்பட்டவர்கள் சொன்ன தகவலின்படி அண்ணன் சுகவீனமுற்றிருந்தார் என்றும், ஆஸ்பத்திரியில் இரு மாதங்கள் வரை இருந்தார் என்றும் அறிந்தேன்."

"உனது அண்ணனுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் அவர் தப்பி இருப்பார் என நினைக்கிறாயா?"

"அவர் எந்த நோயினால் பீடிக்கப்பட்டார் என்று தெரியாமல் ஒரு முடிவுக்கும் என்னால் வரமுடியாது. ஆனால், உரிய சிகிச்சை அளிப்பதற்கு அங்கு மருந்துகளும், உரிய வசதிகளும் இல்லை என்ற காரணம் சொல்லப்பட்டால், அந்தப் பழியை நாம் தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். ஏனென்றால் நாம் தானே அந்த வசதிகளைப் பறித்திருக்கிறோம்?"

பிரியந்த வந்தான். "என்ன கதைக்கிறீர்கள்?" எனப் பொதுப்படையாகக் கேட்க, கெமுனு தமது சம்பாஷணையைச் சுருக்கமாக வெளியிட்டான்.

"பண்டார, நீ ஏன் யாழ்ப்பாணத்து மக்களுக்காக வக்காலத்து வாங்குகிறாய்? அவர்களே தமது செயல்களால் தமக்கு குழி பறித்திருக்கும் போது, நீ ஏன் அவர்களுக்காகப் பரிதாபப்படுகிறாய்? அவர்கள் வளர்த்த பூதம் தான் இப்பொழுது அவர்களை மிரட்டுகிறது. அவர்களுக்காகப் பரிதாபப்படாதே. உன்னைச் சார்ந்திருக்கும் மக்களை நினைத்து அதற்கேற்றாற் போல நடவடிக்கையை எடு."

"எனது மக்களின் உயிர்கள் அநியாயமாகப் பறிபோகக் கூடாது, எமது நாட்டின் பொருளாதார நிலை சீர்குலையக் கூடாது, எமது நாட்டின் எதிர்காலச்

சந்ததியாவது இன ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்ற காரணங்களை முன் வைத்தே நான் செயற்படுவேன். அந்த ஒரு பக்குவத்தைத் தான் நான் என் மனதினுள் வளர்த்துள்ளேன்."

"நான் என்றால், யாழ்ப்பாணத்தில் காலடி வைத்த பின் சந்தர்பபம் கிடைக்கும் போதெல்லாம் அங்குள்ளவர்களைப் பழிவாங்குவேன்."பிரியந்த சொன்னான்.

"ஏன் நண்பனே அப்படி செய்ய நினைக்கிறாய்? பழி வாங்குவது பௌத்த மதக் கொள்கைக்கு எதிரானது" என கெமுனு சுட்டிக் காட்டினான்.

"யாழ்ப்பாணத்தில் தர்மயுத்தமா புரியப்படுகிறது? பயங்கரவாதிகளின் பயங்கரவாதச் செயல் தான் அங்கு தலை விரித்தாடுகிறது." பிரியந்த வலியுறுத்தினான்.

"எமது முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்க போலத் தான் நீ பேசுகிறாய். தமிழர்களின் உரிமைப் பிரச்சனையின் உச்சக் கட்டம் தான் பயங்கரவாதப் பிரச்சனை போல் தென்படுகிறது. இப்பொழுது பயங்கரவாதப் பிரச்சினைகளுக்குள் தமிழர்களின் உரிமைகள் புதைந்து விட்டன." பண்டார ஆறுதலாக விளக்கமளித்தான்.

"யாரோ செய்யும் தவறுகளுக்கு அப்பாவி ம்க்களுக்கு எதிராகப் பழிக்குப் பழி வாங்குவது தவறு நண்பனே. பயங்கரவாதிகளின் கோரப்பிடியில் இருந்து அவர்களை மீட்டெடுத்து, அவர்களுக்குச் சுதந்திரம் வழங்கி இருக்கிறோம் என அரசாங்கம் இப்பொழுது பிரச்சாரம் செய்கையில், நாம் பழிக்குப் பழி வாங்கினால், அது அரசாங்கத்திற்குச் சர்வதேச ரீதியில் இழுக்கை ஏற்படுத்துவதற்குச் சமனாகும்" என்றான் கெமுனு.

பண்டாரவை வெறித்துப் பார்த்தான் கெமுனு. "ஏய் பண்டார! தமிழ் மக்களால் தான் இந்த நாடே இன்று சீர்குலைந்துள்ளது. சில தமிழ் இளைஞர்கள் தமது அதிருப்தியைத் தெரிவிப்பதற்காகத் தொடங்கிய இயக்கத்தினால், இன்று நாட்டின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. சிங்கள மக்கள் நிம்மதியாக வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எந் நேரத்தில், எங்கு குண்டு வெடிக்கும் என்ற அச்சமே பலரைக் கொல்லாமல் கொல்லுகிறது. தாம் தெரிவு செய்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கூட நெருங்க முடியாத நிலையில் சிங்கள மக்கள் விளங்குகிறார்கள். கொழும்பில் எத்தனை வீதிகள் மூடப்பட்டுள்ளன? வீதிகளில் எவ்வளவு வாகன நெரிசல்............? தமிழ் மக்களைப் படிப்படியாக அழித்தால் தான், எமது எதிர்காலச் சந்ததியாவது நிம்மதியாக வாழக் கூடியதாக இருக்கும். நாம் விடும் ஒவ்வொரு துளி இரத்தமும் சிங்கள மக்களின் சுபீட்சத்திற்குத் தான் என்பதை கெமுனு நண்பனும், பண்டார நண்பனும் புரிந்து கொள்வார்கள் என நான் நினைக்கிறேன்."

"உன்னைப் போன்ற இனத் துவேஷிகளால் தான் நமது நாடு இன்று இந் நிலைமையை அடைந்துள்ளது. தமிழர்களும் எமது நாட்டு மக்களே என்று எல்லோரும் நினைத்திருந்தால், இன்று நமது நாடு அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஒன்றாக விளங்கி இருக்கும். 'சனசக்தி', 'சமுர்த்தி' ஆகிய திட்டங்கள் கூட அர்த்தமற்றதாக, அநாவசியமானதாக விளங்கியிருக்கும்."

பிரியந்த 'ஏதோ' கூற வாயெடுத்தான். ஆனால், அவன் நாவை அடக்கினான். 'கப்டன்' பொன்சேகா அவர்களை நோக்கி வந்தான். அவன்

மூவரையும் சுவாரஷ்யமாகப் பார்வையால் கடவினான். பின் பண்டாரவைக் கடுமையாக நோக்கினான்.

"நீங்கள் மூவரும் சமீப நாட்களாக அடிக்கடி சர்ச்சையில் ஈடுபடுவதைக் கண்டிருக்கிறேன். அங்கங்களை நிறைய அசைக்கிறீர்கள். எதைப் பற்றி சர்ச்சைப்படுகிறீர்கள்?" எனக் கேட்டான் பொன்சேகா.

"ஒன்றும் பெரிதாக இல்லை, 'சேர்'. எமது நாட்டுப் பிரச்சனையைப் பற்றித்தான் பேசுகிறோம்." பண்டார மெல்ல இழுத்தான்.

"நாட்டுப் பிரச்சனையா? அல்லது இனப் பிரச்சனையா?"

"இரண்டும் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருக்கிறது அல்லவா, 'சேர்'? நாட்டுப் பிரச்சினை என்னும் போது இனப் பிரச்சினையும் அதில் முக்கியமானதொரு அம்சம் அல்லவா?" பண்டாரவின் கேள்வியில் திட்டமான பதில் மறைந்திருந்தது.

"இனப் பிரச்சினையா? அல்லது பயங்கரவாதப் பிரச்சனையா?"

'நீங்களும் முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்க போல் பேசுறீர்கள்' என்று சொல்ல பண்டார முற்பட்டான். ஆனால், அப்படிப் பேசினால், பொன்சேகா ஆத்திரப்படுவான். பண்டாரவைக் கண்டபடி தூஷிப்பான். அவனை உதைக்கவும் தயங்க மாட்டான். ஒரு தடவை யாரோ' ஒரு 'கோப்ரல்' குதர்க்கமாகப் பேசிய போது தனது உள்ளாடைகளை நீட்டித் தோய்க்கும்படி கட்டளையிட்டிருந்தான். அப்படியான ஒரு மோசமான பேர் வழி அவன். ஆதலினால், மன எழுச்சியை அடக்கிய பண்டார 'கப்டனைப்' பார்த்து வெறுமனே புன்னகைத்தான்.

பண்டாரவிடம் இருந்து பதில் வராமல் விடவே, பொன்சேகாவின் பார்வையில் கடூரம் குடியேறியது. அச்சுறுத்துவது போல் ஆள் காட்டி விரலை ஆட்டியபடி பேசினான். "எமது நாட்டில் பயங்கரவாதப் பிரச்சனை தான் உள்ளது என்பதை நினைவில் வைத்திரு. அந்தப் பிரச்சனையை நாம் தான் தீர்த்து வைக்கப் போகிறோம் என்பதையும் நினைவில் வைத்திரு. இது சம்பந்தமாக உன் மனதினில் உள்ள தவறான எண்ணங்களை மறந்துவிடு."

"'சேர்', இதை அரசியல் தீர்வினால் தீர்க்க முடியாதா?" பண்டார 'தழதழத்த' குரலில் கேட்டான்.

"அரசியல் தீர்வு? பயங்கரவாதப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு தான் இறுதி முடிவு."

"அப்படி என்றால் அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசுகிறார்களே, 'சேர்' ....."

"பேசட்டும். அதிகாரப் பரவலாக்கம் என்றால் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும். அதிகாரம் தமிழர்களின் கைக்கு மாறுவதைப் பெரும்பான்மையான சிங்களவர்கள் விரும்பமாட்டார்கள். அதைவிட இராணுவத் தீர்வு என்றால் ஒன்றையும் கொடுக்காமல் தீர்வைக் கண்டு விடலாம்."

"இது சாத்தியமாகுமா 'சேர்'? நூறு ரூபாய் சம்பள உயர்வு கேட்பவனுக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுப்பது நியாயமா? ஆகக் குறைந்தது எழுபத்தைந்து ரூபாயாவது கொடுக்க வேண்டும். அது தான் நியாயம், தருமம், சத்தியம்........"

பொன்சேகாவின் முகத்தில் ஏளனம் சாயலிட்டது. "எழுபத்தைந்து ரூபாய்? வெறும் எலும்புத் துண்டுகளை நீட்டிவிட்டு முடிக்கிற பிரச்சனைக்கு, ஏன் இறைச்சியைப் பற்றிக் கதைக்க வேண்டும்?"

"எலும்புத் துண்டுகளுக்கு நாக்கை நீட்டிய காலம் மாறிவிட்டது. இப்பொழுது எமது இறைச்சியை அவர்கள் சாப்பிடுவதற்கான ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கி விட்டோம்." கெமுனு பொதுப்படையாகச் சொன்னான்.

"புலிகளை மையமாக வைத்துத் தானே நீங்கள் மிரட்டுகிறீர்கள்? புலிகள் இயக்கம் அடக்கி, ஒடுக்கப்பட்டு விட்டது. நாம் அதன் வாலைக் கத்தரித்து விட்டோம். புலிகளை வளர்த்த யாழ்ப்பாணத்து மக்களே அவர்களை இன்று வெறுக்கிறார்கள். புலிகளை அவர்கள் இப்பொழுது காட்டிக் கொடுக்கிறார்கள். இராணுவத்தினரை தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள். அவர்களின் ஆட்சியின் கீழ் வாழ விரும்புகிறார்கள்."

"ஆகவே, அவர்கள் இராணுவத் தீர்வை விரும்புவார்கள் என எண்ணுகிறீர்கள். அப்படித் தானே, 'சேர்'?" பண்டார தயக்கத்துடன் வினாவினான்.

"அவர்கள் விரும்பமாட்டார்கள். ஆனால், நாங்கள் அதைத் திணிக்க வேண்டும்."

"இவ்வகையான திணிப்புகளும் இனப் பிரச்சனை உக்கிரமடைவதற்குக் காரணமாக விளங்கியுள்ளன." கெமுனு சொன்னான்.

"அவை அரசியல் திணிப்புகள். இவை இராணுவத் திணிப்புகள், இரண்டுக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன."

"நீங்கள் பிரச்சனையை இன்னும் அகலமாக்குகிறீர்கள். பிரச்சனையைத் தீர்ப்பதற்கான நேரம் வந்து விட்டது. இனியும் காலம் தாழ்த்துவது பேயின் வாய்க்குள் தலையை நுழைப்பதற்குச் சமம்." பண்டார உறுதிமிக்க குரலில் சொன்னான்.

பொன்சேகா அவனை முறைத்தான். "உனக்கு நிறையத் தெரியும் என்று நீ நினைக்கிறாய். வாயைப் பொத்திக் கொண்டிரு. எனது சப்பாத்துக்கு வேலை கொடுத்து விடாதே." பொன்சேகா உறுமியபடி அங்கிருந்து அகன்றான்.

பண்டார வாயை மூடிவிட்டான். அவன் நெஞ்சில் நிறைந்திருந்த கருத்துக்களை வெளியிட வேண்டும் என்ற துடிப்பு பெருகிய போதும், அதைத் தடுத்து நிறுத்தினான்.

பயிற்சியின் போது 'சார்ஜண்ட்' நிஹாலுடன் பண்டார வாக்குவாதப்பட்டான். "நீ பறைத் தமிழரின் சார்பாகத்தான் கதைக்கிறாய். உன்னை ஏன் இராணுவத்தில் சேர்த்தார்களோ தெரியவில்லை." நிஹால் அகவினான்.

"தமிழர்களை ஏன் தூற்றுகிறீர்கள்? அவர்கள் கௌரவமானவர்கள், நேர்மையானவர்கள், கடமை வீரர்கள், ஒழுக்க சீலர்கள். அவர்களது போதாத காலம் இன்று அவர்கள் வாழ்க்கையின் அடி மட்டத்திற்கு வந்து விட்டார்கள். பிச்சைக்காரர்களை விடக் கேவலமான ஒரு நிலையில் தமிழ் அகதிகள் வாழ்கிறார்கள்." பண்டார விடாப்பிடியாகச் சொல்லி இருந்தான்.

"தமிழர்களைப் பற்றி நீ ஓரளவு தான் அறிந்திருக்கிறாய். நீ ஒரு கிணற்றுத் தவளை. பிற்போக்குவாதி. அவர்கள் கபடர்கள், கள்வர்கள், துரோகிகள், அமைதியின் சத்துராதிகள், தாய்நாட்டில் பற்றற்றவர்கள்" என்ற நிஹால், நிறைய தூஷண வார்த்தைகளை ...த்தான்.

பண்டார மௌனத்திற்கு அடிமையாகி விட்டான். நிஹாலுடன் தொடர்ந்தும் பேசுவது அர்த்தமற்றது என்று நினைத்தான்.

பண்டாரவை நிஹால் நெருங்கினான். அவன் கழுத்தில் கையை வைத்தான். "கவனமாக இரு. துப்பாக்கியின் ரவைகளை வீணாக்காமலேயே உன் உயிரைக் குடிப்பேன்" என்றவன், பண்டாரவின் மூக்கில் ஒரு குத்து விட்டான்.

பண்டாரவுக்கு வலித்தது. ஆனால், அதைப் பொருட்படுத்தாமல் நின்றான்.

நல்ல வேளையாக அப் பக்கம் மேஜர் ஒருவன் வர, நிஹால் போய்விட்டான்.

## (6)

நெல் அறுவடைக்காலம் என்றால் அக் கிராமத்தில் 'சுறுசுறுப்பு' முட்டி மோதும். 'டிரக்டர்களின்' ஓட்டத்தினால் புழுதி பறப்பது ஒரு புறம், அவற்றின் இரைச்சல் மறுபுறம். சில வேளைகளில் கிராமத்தின் அரைவாசியே விழித்திருக்கும். நித்திரையை ஒத்தி வைத்துவிட்டு, முழுக் குடும்ப உறுப்பினர்களும் சூடடிப்பில் இறங்கி விடுவார்கள். அயல் கிராமத்தைச் சேர்ந்த தரகர்கள் தமது 'சிஷ்யர்களுடன்' சாராயப் போத்தல்களைக் காவிக் கொண்டு வந்து விடுவார்கள். ஒரு விதக் களியாட்ட விழா போல் அக் கிராமம் அல்லோலகல்லோலப்படும்.

விடிந்த பின்பும் மண்டிக் கிடக்கும் புஞ்சி சிங்கோ, சூரியனின் விழிப்பின் முன் எழுந்து விட்டான். பீடியைப் பற்ற வைத்தபடி காட்டுப் பக்கம் போய் காலைக் கடன்களை முடித்துவிட்டு வந்தான். அலிஸ் நோனா வெறும் தேநீரை நீட்ட, அதைப் பருகியபடி உற்சாகத்துடன் பேசினான். "இன்றைக்கு ஜோன் அப்புஹாமி ஐயாவின் வயலில் சூடடிப்பு நடக்கிறது. மனுஷன் நல்லவர். வேலை முடிந்தவுடன் ஒரு முட்டி கித்துல் கள்ளை வைத்து விடுவார். அவரும் எங்களுடன் சேர்ந்து குடிப்பார். நாங்கள் 'பைலா' போட்டால் அவரும் ஆடுவார்."

அலிஸ் நோனா கணவனை அச்சுறுத்துவது போலப் பார்த்தாள். "உங்களுக்கு காலையில் எழுந்த நேரம் தொடக்கம், இரவு உறங்கும் வரை கள்ளுக் குடிக்கிற சிந்தனை தான். ஒவ்வொரு நாளும் மூக்கு முட்டக் குடித்தும், உங்கள் ஆசை அடங்கவில்லை."

"ஒரு பிடி உமி தூக்கும் சக்தி இருக்கும் வரை நான் குடிப்பேன்" என்ற புஞ்சி சிங்கோ பீடியை எறிந்து விட்டுச் சிரித்தான்.

"அதற்கு முன் நீங்கள் குடிக்கும் விஷம் உங்களை ஏப்பமிட்டு விடும். நீங்கள் குடியை மறக்கும் நாளை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்."

"இங்கு காத்திருப்பதில் பலன் இல்லை. மயானத்தில் போய் காத்திரு. ஏனென்றால் நான் இறந்த பின்னர் மயானத்திற்குச் கொண்டு போவீர்கள் அல்லவா? எனது சிதைக்குத் தீ மூட்ட முன், உடனே எழுந்து, ஒரு போத்தல் கள்ளைக் குடித்துவிட்டுத் தான் மீண்டும் மீளாத் துயில் கொள்வேன்" என்று சொன்ன புஞ்சி சிங்கோ, அட்டகாசமாகச் சிரித்தான்.

"உனது தலையில் இடி விழ," ஒருமையில் அவனை விளித்து, சபித்தாள் அலிஸ் நோனா.

புஞ்சி சிங்கோ தனது சிரிப்பைத் தொடர்ந்தான்.

"நீங்கள் ஏன் குடிக்கிறீர்கள்?" சொற்ப வினாடிகளின் பின் அலிஸ் நோனா தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"வாழ்க்கையில் நாளாந்தம் ஏற்படும் கஷ்டங்களை, உடல் வலியை மறப்பதற்காக குடிக்கு அறிமுகமானேன். இப்பொழுது கவலைகளை மறக்கக் குடிக்கிறேன்."

"கவலை? உங்களுக்கும் கவலை இருக்கிறதா? கவலையை நினைத்துக் கூடப் பார்க்கிறீர்களா?"

"அலிஸ், நான் எருமை இல்லை.... மனிதன். எனக்கு இன்னும் ஆறறிவுகள் உள்ளன. எனது உணர்ச்சிகள் மரத்துப் போகவில்லை. ஒரு மகனை அநியாயமாக இழந்துவிட்டேன். அது கவலை இல்லையா? எனது பொறுப்பை அவனிடம் ஒப்படைக்கலாம் என்று நினைத்திருக்கையில்...... இப்பொழுது இங்கு ஒரு எருமை ஒரு பொறுப்பும் இல்லாமல், இன்றும் எனது வருவாயில் தனது வயிற்றை வளர்த்துக் கொண்டு..... எங்கே அவன்?"

"வெசாக் கூடு கட்டுவதற்காக சுனிலின் வீட்டுக்குப் போய்விட்டான்."

"இந்த வயதிலும் வெசாக் கூடு கட்டுற வேலை தான். அவனுக்கு ஒரு தொழில் எடுக்க விருப்பமில்லையா?"

"இந்தக் கிராமத்தில் இருந்தால் ஒரு தொழில் எடுக்க முடியாது என்று கூறுகிறான். இங்கிருந்தால் இராணுவத்தில் தான் சேர முடியுமாம்."

"இராணுவத்தில் சேர விரும்புகிறானா?"

"அதைத் தவிர வேறு வழி இல்லை என்று சொல்கிறான்."

"நான் உயிர் வாழ மட்டும் அந்த எண்ணத்தை மறந்து விடச் சொல்லு. தெரியுமா?"

அலிஸ் நோனா நோக்கமின்றி 'சரி' எனத் தலையசைத்தாள்.

புஞ்சி சிங்கோ போய் விட்டான்.

நண்பகல் போல் சுனிலின் வீட்டில் இருந்து பண்டார வர, தாய் அவனிடம் சென்றாள்.

"மகன், நீ எத்தனை நாட்களுக்கு இப்படி விளையாட்டுத்தனமாக வாழ்க்கையை மேற்கொள்ளப் போகிறாய்? இப்பொழுது உனக்கு வயது இருபத்திரண்டு. உனது வயதை ஒத்த இக் கிராமத்து இளைஞர்கள் ஒன்றில் ஒரு தொழில் செய்கிறார்கள். அல்லது பல்கலைக்கழகங்களில் படிக்கிறார்கள். ஆனால் நீ..."

தாயின் பேச்சை பண்டார இடைமறித்தான். "உண்மை தான். வேலை வெட்டி இன்றி, அப்பாவின் வருமானத்தில் தான் தங்கியிருக்கிறேன். ஆனால், என்னோட படித்த சிலர் கள்ளு, கசிப்பு, சாராயம் குடித்தும், ஊரெல்லாம் களவெடுத்தும் திரிகிறார்கள். ஏன் அதைச் சொல்லத் தயங்குகிறீர்கள், அம்மா?"

"கெட்டுப் போனவர்களைப் பற்றி ஏன் கதைக்கிறாய்? வாழ்க்கையில் தமது முயற்சியினால் முன்னேறியவர்களைத் தான் உதாரணத்திற்கு எடுக்க வேண்டும்...... மகன், நானும் உன்னை அவதானித்துக் கொண்டு தான் வருகிறேன். நீ சிறுபிள்ளை போலத்தான் நடக்கிறாய். உனக்குப் பொறுப்பு

இன்னும் வரவில்லை. அரசியல் பற்றி நிறைய நேரம் கதைக்கிறாய். தமிழ் மக்களின் பிரச்சனை பற்றி கதைத்து, எல்லோருடனும் வாக்குவாதப்படுகிறாய்...... இதெல்லாம் சோறு போடுமா? ஏதாவது ஒரு தொழிலை எடுத்து, வாழ்க்கையில் முன்னேறப் பார். குறிக்கோள் இல்லாமல் வாழ்வதைக் கைவிடு."

"அம்மா, தேவை ஏற்படும் போது பொறுப்பைச் சுமப்பேன்" என்று கூறியவன், குசினிக்குச் சென்று பீங்கானில் சோற்றையும், கறிகளையும் போட்டான். பின் தாயின் முன்பாகப் பலகைக் குற்றி ஒன்றில் அமர்ந்தான்.

"மகன், அப்பாவுக்கு வயது நன்றாக ஏறி விட்டது. உடம்பு தளர்ச்சி அடைந்து விட்டது. வேலை செய்கிற தெம்பு அவரிடம் இல்லை. நாளெல்லாம் வேலை செய்தால் மாலை வேளையில் நன்றாகக் களைத்துவிடுகிறார். அதனால் அந்தக் களைப்பைப் போக்க மூக்குமுட்ட குடிக்கிறார். அவரது குடியை நிறுத்துவதென்றால், அவர் கடின உழைப்பைக் கைவிட வேண்டும்."

தாயை ஒரு விதக் குறிக்கோளும் இன்றி பண்டார நோக்கினான். ஏழ்மையில் நீண்ட வருடங்கள் உழன்று, அதில் இருந்து மீள முடியாமல், நிறைய சோகத்தைச் சுவீகரித்திருந்த அந்த முகத்தில் சுருக்கங்கள் தென்பட்டன. அதில் பொலிவு இல்லை. கண்களில் ஒளி இல்லை. முழுத் தோற்றத்திலும் செழுமை இல்லை.

தாயின் முகத்தைத் தீவிரமாக நோக்கும் வேளைகளில் எல்லாம் பண்டார நெகிழ்ச்சி அடைந்து விடுவான். கிராமத்தில் அவளை ஒத்த பெண்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தாலும், தமது தோற்றத்தில் களையினைக் காவ, இவளோ வறுமையை தன் உடலிலும் தக்க வைத்திருந்தாள். உடையில் கூட ஏழ்மையின் ஆழம் பிரதிபலித்தது.

குடித்து விட்டு வரும் தகப்பன் கண்டபடி தாயை ஏசுவதை, அடிப்பதை, உதைப்பதை பண்டார கண்டிருக்கிறான். ஒரு நாள் அடி தாங்காமல் அவள் மூர்ச்சை அடைந்துவிட்டாள். பானைகளை, சட்டிகளை எல்லாம் தகப்பன் உடைத்து ரகளை புரிந்த போது, தாயின் முகத்தில் பரிணமித்த சோக உணர்ச்சியைக் கண்டு நாள் முழுவதும் வேதனையில் உழன்றிருக்கிறான்.

"அம்மா, பயப்படாதீர்கள். கூடிய விரைவில் ஒரு தொழிலை எடுப்பேன்." பண்டாரவின் முகத்தில் வைரம் ஒன்று பாய்ந்திருந்தது.

மாலையில் சுனிலைச் சந்திக்கச் சென்றபோது தாயின் உணர்ச்சியைப் பண்டார வெளிப்படுத்தினான்.

"எனக்கு ஒரு தொழில் வேண்டும். உதவி செய்வாயா?" பண்டார வேண்டுகோள் விடுக்க, சுனில் சிரித்தான். "குடும்பப் பொறுப்பைச் சுமக்கத் தயாராகி விட்டாயா? சரி உதவி செய்கிறேன். என்னுடன் கூலி வேலை செய்ய வா. நாளொன்றுக்கு நூறு ரூபாவும், மதியச் சாப்பாடும் கிடைக்கும்."

"கூலி வேலை? என்னால் அந்த வேலைக்கு வர முடியாது. எனது அப்பா ஒரு கூலிக்காரன். நானும் அதே வேலையை, அதுவும் சாதாரண தரம் வரை படித்து விட்டுச் செய்வதா? ஒரு கௌரவமான தொழிலைப் பெற்றுத் தரமாட்டாயா?"

பண்டார சொல்ல, சுனில் சிரித்தான். "நானும் சாதாரண தரம் வரை படித்து விட்டுத்தான் கூலி வேலைக்குப் போகிறேன். உனக்கு வரட்டுக் கௌரவம் நிறைய இருக்கிறது."

"இல்லை. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒரு கொள்கையைக் கொண்டிருக்கிறேன்."

"கொள்கை மட்டும் இருந்தால் போதாது. முயற்சியும் வேண்டும்."

"என்ன மாதிரியான முயற்சி?"

"வேலை உன்னைத் தேடி வராது. நீ தான் அதைத் தேடிச் செல்ல வேண்டும். இயந்திரங்களுடன் வேலை செய்ய நீ விரும்பினால் சொயிஸா முதலாளியின் கடையில் பயிற்சியாளராகச் சேரலாம்."

"என்னைப் போன்ற முற்போக்கான எண்ணம் கொண்டவர்களை அவர் விரும்புவதில்லை என்று அறிந்தேன். முட்டாள்களையே அவர் தன்னுடன் வைத்திருக்கிறாராம்."

"அப்படி என்றால் டேவிட்டின் 'கராஜில்' வேலை செய்ய விரும்புகிறாயா?"

"இல்லை, அவன் ஒரு இனத்துவேஷி. எந் நேரமும் தமிழர்களை வெட்ட வேண்டும், குத்த வேண்டும் என்று கத்திக் கொண்டிருப்பான்."

"உனக்கு இந்த மாவட்டத்தில் ஒரு வேலை எடுப்பது கஷ்டம். இராணுவத்தில் சேருவது தான் இலகுவான வழி என்று நான் நினைக்கிறேன்."

வீடு வந்து சேர்ந்த பண்டார தன் சிந்தனையில் இராணுவத்தில் சேருவது பற்றிய அரைகுறை முடிவை ஏற்றி வைத்திருந்தான். 'இராணுவத்தில் சேர்ந்தால் என்ன' என்ற கேள்வியைப் பல தடவைகள் தன்னுள் கேட்டான். எந்த குறிக்கோளை மையமாக வைத்து அதில் சேருவது? தொழில் என்பதற்காகவா, அல்லது நாடு பிளவுபடுவதைத் தடுப்பதற்காகவா, அல்லது தமிழ் மக்களுக்கு புலிகளின் பிடியில் இருந்து விடுதலை பெற்றுக் கொடுப்பதற்காகவா?

நீண்ட நேரமாக சிந்தித்த போதும், எதுவுமே மனதில் உறுதியாக, படிமமாகப் படியவில்லை.

அவன் குடும்பம் விளங்கிய நிலையில், அவனுக்கு ஒரு கௌரவமான தொழில் தேவை. இராணுவத்தில் தொழில் பார்ப்பது கௌரவமானது. இராணுவ வீரர்கள் லீவுக்காக ஊர் வரும் போது எவ்வளவு மிடுக்குடன் உலாவுகிறார்கள்? அவர்கள் வீதிகளில் நடமாடும் போது எத்தனை ஊர் மக்கள் அவர்களைப் பெருமை மிளிரப் பார்த்து, தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்கள்? ஊர்ப் பெரியவர்கள் கூட இராணுவ வீரர்களுடன் தமது கருத்துக்களைப் பரிமாறுகிறார்கள். இளம் பெண்கள் வாயெல்லாம் பற்களாக அளவளாவுகிறார்கள்.

நாடு பிளவுபடுவதைத் தடுப்பதும், தமிழ் மக்களைப் புலிகளின் பிடியில் இருந்து விடுவிப்பதும் அவனைப் பொறுத்தளவில் ஓர் உதிரிக் குறிக்கோளாகத் திகழலாம். அவற்றையிட்டு ஆழமாகச் சிந்திக்கத் தேவையில்லை. தொழில் என்ற ரீதியில் இராணுவத்தில் சேரலாம்.

அவன் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தான். இரவு குடும்ப அங்கத்தினர்கள் மத்தியில், தந்தையிடம் தனது எண்ணத்தைத் தெட்டத்தெளிவாக முன்வைத்தான்.

"உனக்கு பைத்தியமா? வேறு ஒரு தொழில் எடுப்பதற்கு முயற்சி செய். அல்லது வீட்டிலேயே கிட. நான் உழைக்கிறேன். சாகும் வரை உழைபதற்கான தெம்பு என்னிடம் இருக்கிறது." புஞ்சி சிங்கோ வார்த்தைகளைச் சூடாக வெளியிட்டான்.

பண்டார மலங்க, மலங்க விழித்தான். எதிர்வாதத்தை நிகழ்த்துவதற்கு முடியாமல் தத்தளித்தான்.

"மகன், இராணுவத்தில் சேரும் எண்ணத்தை மட்டும் மறந்து விடு. இரு மகன்களை இழக்க என்னால் முடியாது." புஞ்சி சிங்கோ தொடர்ந்தும் பேசினான்.

"இராணுவத்தில் சேருபவர்கள் எல்லோரும் இறப்பதில்லை."

"உனது அண்ணன் இறந்து விட்டான்."

"அதனால் நானும் இறப்பேன் என்று நினைக்கிறீர்களா?"

"அதை என்னால் உறுதியாகக் கூற முடியாது. ஆனால், இறப்பதற்கு நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன."

பண்டார தாயைத் தன் சார்பில் பேசும்படி கண் ஜாடை காட்டினான். அவள் தலை குனிந்தாள்.

"வேண்டாம் அண்ணா." நெலும் குமாரி தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"நான் ஒரு முடிவை எடுத்துவிட்டேன். அப்பா உழைத்தது போதும்." பண்டார உறுதியாகச் சொன்னான்.

"முடிவை மாற்று. இல்லாவிட்டால் உன் பெற்றோரை, தங்கையை, தம்பிமாரை மறந்துவிடு."

"அன்பால், பாசத்தால் எனது முடிவுக்கு கட்டுப் போட வேண்டாம்."

"மகன், நாம் கிராமவாசிகள். எம்மை விட்டு உண்மையான அன்பும், பாசமும் அகலவில்லை. இன்றும் நாம் மனிதர்களாக , ஓரளவு சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு காரணம் நாம் இன்னும் கிராமவாசிகளாகத் தான் இருக்கிறோம் என்பதேயாகும். சம்பிரதாயங்கள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள், கலாசாரங்கள் ஆகியவற்றை நாம் இன்னும் கடைப்பிடிக்கிறோம். அவற்றைப் பேணுகின்றோம். பாதுகாக்கின்றோம். அவற்றையிட்டு பெருமைப்படுகிறோம்."

புஞ்சி சிங்கோ கூறிமுடிக்க, பண்டார 'ஏதோ' சொல்ல வாயெடுத்தான். புஞ்சி சிங்கோ கையைக் காட்டி, அவன் பேச்சைத் தடுத்தான்.

"ஒரு தொழில் எடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறாய். அதற்காக முயற்சிக்கிறாய். உன்னிடம் இருந்து சிறுபிள்ளைத்தனம் அகல்கிறது என்பதற்கு இவை சாட்சியம். என்றபடியால் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கும் வந்து விடாதே. பொறுத்திரு."

தந்தையின் ஆழமான கருத்துக்கள், புத்திமதிகள், தாயின் மௌனம், தங்கையின் அன்பு வேண்டுகோள், தம்பிமாரின் கண்களில் தெரிந்த பீதி.... யாவுமே பண்டாரவின் மன எழுச்சியைத் தணித்தன. அவன் தனது முடிவைத் தீர்க்கமாகச் சிதைத்தான்.

இரு நாட்கள் கழிய, தன் நிலையை சுனிலிடம் எடுத்துரைத்த பண்டார, "நீ என்ன சொல்கிறாய்?" எனக் கேட்டான்.

"உனது அப்பா சொல்வது மாதிரி பொறுத்திரு. இல்லாவிடில் உனது வரட்டுக் கௌரவத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, சாரத்தைச் கட்டிக் கொண்டு என்னுடன் கூலி வேலைக்கு வா."

"கூலி வேலையா?" அந்த எண்ணமே பண்டாரவுக்குக் கசந்தது.

மறு நாள் சுனிலின் வீட்டில் கரம் விளையாடிக் கொண்டிருக்கையில் பண்டாரவின் தம்பி நிமால் ஓடோடி வந்தான். அவன் அதிர்ச்சித் தகவல் ஒன்றைக் கக்கினான்.

புஞ்சி சிங்கோ தென்னை மரத்தில் இருந்து கீழே விழுந்து விட்டானாம். உயிர் ஊசலாடிய நிலையில் நிலத்தில் உருண்டு புரள்கிறானாம்.

பண்டார விரைந்தான்.

வீட்டின் முன்பாக, பாய் ஒன்றில் புஞ்சி சிங்கோவைக் கிடத்தி இருந்தார்கள். குற்றுயிரான நிலையில், இரத்தம் தோய்ந்த நிலையில் கிடந்தான். அவனைச் சுற்றி அலிஸ் நோனா, பிள்ளைகள், கிராமத்தின் மூத்த பிரஜைகள் குழுமி நின்றனர். முன்வீட்டு நாயும் நின்றது.

யாவரையும் விலக்கியபடி தந்தையிடம் பண்டார சென்று அவனை நோக்க......

புஞ்சி சிங்கோவின் முகத்தில் ஒரு சின்னப் புன்னகை வெளிப்பட்டது. தலையை உயர்த்த முற்பட்டான். முடியவில்லை. அந்தப் புன்னகையுடன் அவன் கண்கள் செருகின.

"ஐயோ மகனே." அலிஸ் நோனா கத்தினாள்.

"ஐயோ அண்ணே." நெலும் குமாரி ஒப்பாரி வைத்தாள்.

இரு தம்பிமாரும் 'எதையோ' சொல்லி அழுதார்கள்.

பண்டாரவுடன் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் புஞ்சி சிங்கோ மரணத்தைத் தழுவிவிட்டான்.

மூன்று நாட்கள் அண்டை, அயலவர்கள் சாப்பாடு கொண்டு வந்து நீட்டி விட்டுச் சென்றனர். கிராமத்தின் மரண சகாய நிதியத்தில் இருந்து சவப்பெட்டி வாங்குவதற்குப் பணம் வழங்கப்பட்டது.

பண்டாரவின் நண்பர்கள் தென்னோலைத் தோரணங்களை மயானம் வரை கட்டினார்கள். அச்சகச் சொந்தக்காரர் ஒருவர் – பண்டாரவின் ஆசிரியராக இருந்தவர் – தனது செலவில் புஞ்சி சிங்கோவின் புகைப்படத்தையும் போட்டு, மரண அறிவித்தலை அச்சடித்துக் கொடுத்தார்.

புஞ்சி சிங்கோவின் பூதவுடல் பலவித அழுகைகள், ஒப்பாரிகளுக்கு மத்தியில் அந்த மண் குடிசையை விட்டு வெளியேறியது.

ஒரு வாரத்துக்குள் கிராமத்தவர்கள் புஞ்சி சிங்கோவை, அவனது பிள்ளைகளை மறந்து விட்டார்கள்.

வறுமை பண்டாரவின் குடிசையை நெருங்கியது. நெலும் குமாரி பூப்பெய்திய போது வாங்கிய ஒரு சோடிக் காப்பு சுமணதாச முதலாளியிடம் அடகு வைக்கப்பட்டது.

அலிஸ் நோனா பித்துப் பிடித்த நிலையில், அழுக்கான உடையுடன், நெடுக நிலத்தில் குந்தி இருந்தாள். குளத்துக்குக் குளிக்கப் போகவில்லை. சமையலும் ஒழுங்காக நடக்கவில்லை. நெலும் குமாரி தான் ஜீவகளையை ஏற்படுத்த முயற்சித்தாள்.

விஜிதா அடிக்கடி வந்து ஆறுதல் வார்த்தைகளைப் பரிமாறினாள். சோம்பிக் கிடந்த பண்டாரவுக்கு உற்சாகமூட்டினாள். வாழ்க்கையின் தத்துவங்களை மேலெழுந்தவாரியாக எடுத்தியம்பினாள்.

"அண்ணா, எத்தனை நாட்களுக்கு இப்படி இருக்கப் போகிறீர்கள்? நீங்கள் தான் எல்லோரையும் வழி நடத்த வேண்டும். இனியாவது பொறுப்புடன் நடக்கப் பாருங்கள்."

"வாழ்க்கையின் எந்த நுனியைப் பிடித்து ஆரம்பிக்கிறது என்று தெரியாமல் தடுமாறுகிறேன்."

"முதலில் நீங்கள் இயல்பு நிலைக்குத் திரும்புங்கள்."

விஜிதாவின் வார்த்தைகளுக்குப் பண்டார மதிப்பு வழங்கினான்.

ஒரு வாரம் வரை கூலித் தொழிலுக்குச் சென்றான். மனதில் நிறைந்த வெறுப்புடன் கூலியைக் கைநீட்டிப் பெற்றான்.

தன் மனதை நீண்ட நாட்களுக்கு ஏமாற்ற அவனால் முடியவில்லை. இனி கூலித் தொழிலுக்குப் போவதில்லை என்று நினைக்கையில்– அந்த டிசம்பரில் கிராமத்தின் முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி ஒன்று அவனைச் சுண்டி இழுத்தது.

அந்தச் சுவரொட்டியில் இராணுவத்தில் சேருமாறு இளைஞர்களுக்கு 'அன்புடன்' அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

மூன்று நாட்களுக்குள் கிராம சேவகரின் சிபார்சுக் கடிதம், பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் ஆகியவற்றுடன் நேரடியாக மாத்தறை இராணுவ முகாமுக்கு வருமாறு, சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மீண்டும், மீண்டும் அந்தச் சுவரொட்டியை வாசிக்க, புதைந்து போயிருந்த ஆவல், நசுக்கப்பட்டிருந்த ஆசை கிளர்ந்தெழுந்தன. அவை தணிய முற்படுகையில் சுவரொட்டியை அப்படியே கிழித்து துண்டுகளுடன் தாயிடம் ஓடினான். கிராமத்து நாயொன்று அவனை வீடு வரை துரத்தியது. அவன் நாயைத் துரத்த இல்லை.

தாயின் முன் சுவரொட்டியின் துண்டுகளைப் பரப்பினான்.

அதில் கிடந்த இராணுவ வீரனின் புகைப்படத்தைக் கண்ட அலிஸ் நோனா, மகனை உணர்ச்சியற்ற பார்வையுடன் நோக்கினாள்.

பண்டார ஒன்றும் பேசவில்லை. தாயை ஆவலுடன் நோக்கினான்.

அலிஸ் நோனாவின் இதழ்கள் துடித்தன. ஆனால், வார்த்தைகள் வெளிவரவில்லை. அவள்கண்களை மூடினாள். சில வினாடிகள் முன்னேறின. கண்களை திறக்க, நீர் கன்னத்தின் வழியாக வழிந்தது.

"இராணுவத்தில் சேர விரும்புகிறாயா?"

பண்டார வெறுமனே தலையாட்டி, 'ஆம்' என்றான்.

அலிஸ் நோனா தனது வலது கையை பண்டாரவை நோக்கி நீட்டினாள்.

"எந்த ஒரு அப்பாவியையும் கொல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்து தா."

'விருட்'டென பண்டார பாய்ந்தான். தாயின் கையைப் பிடித்து, "திஸ்ஸமகராமை வேரஹேன பன்சாலை சாட்சியாக, நான் எந்தவொரு அப்பாவியையும் கொல்ல மாட்டேன்" என சத்தியம் செய்தவன், தாயை அணைத்தான்.

## (7)

'சூரியக்கதிர்–2' நடவடிக்கையின் ஒரு பாகமாக கிளாலி இறங்கு துறையை இராணுவம் கைப்பற்றி விட்டது. இச் செய்தி பருத்தித்துறைக்கு வந்தது.

"அப்படி எண்டால் நாங்கள் குடாநாட்டை விட்டு வெளியேற முடியாது போல...." சசிகலா ஏங்கினாள்.

"எங்களுக்கு இங்க தான் சாவு போல." பூரணி அங்கலாய்த்தாள்.

சில நாட்கள் கழிய தென்மராட்சி முழுவதும் படையினரின்

கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகத் தகவல் வந்தது.

"அப்ப அடுத்ததாக வடமராட்சி தான்." சசிகலா இரண்டு, மூன்று தடவைகள் நினைப்பூட்டியும் பூரணி ஒன்றும் கூறவில்லை. நெடுக சிந்தனைவசப்பட்டிருந்தாள். கவலையும் முகத்தில் குடியிருந்தது.

தாய் மௌனமாக, எதுவித முன்னேற்பாடும் எடுக்காமல் இருக்க, ராஜேஸ்வரியைச் சசிகலா நெருங்கி தன் கருத்தினை வெளிப்படுத்தி, "'அன்ரி', சாமான்களை கொஞ்சம் அள்ளும் கொள்ளையுமாக வாங்கி 'ஸ்டொக்' பண்ணுவமோ? 'கேர்ஃபியு' போட்டால் வெளியில தலை காட்ட ஏலாது" என்றாள்.

"அப்ப நளினியை கூட்டிக் கொண்டு போய் சாமான்களை வாங்கி வாரும்." ராஜேஸ்வரி சொல்ல நளினியைக் கூட்டிக் கொண்டு சசிகலா சைக்கிளில் பறந்தாள்.

இருவரும் சென்ற பின், பூரணியின் முன் ராஜேஸ்வரி தயக்கத்துடன் வந்து நின்றாள்.

"தென்மராட்சியிலை இருந்து நிறைய பெடியள், பெட்டையளைப் பிடிச்சு, கொழும்புக்குக் கொண்டு போறாங்களாம்" என்று ராஜேஸ்வரி வார்த்தைகளை இழுத்தாள்.

"ச ...!"

"எண்டபடியால குமர்ப்பிள்ளையளை வைச்சிருக்கிற நாங்கள் கவனமாக இருக்க வேணும். உங்களுக்கு ஒண்டு. எனக்கு இரண்டு........ ஆம்பிளைத் துணை இல்லாத வீடு."

"என்ர சசிக்கு 'ஆமிக்காரங்கள்' எண்டால் பயம். இந்திய 'ஆமிக்காரன்' ஒருக்கால் இவளை வெருட்டிப் போட்டான். பிள்ளை நல்லா பயந்திட்டுது. ஒரு கிழமையாக நடு இரவில ஒழும்பி அழத் தொடங்கி விடுவாள். சில நேரத்தில 'ஏதோ' கெட்ட கனவு எல்லாம் கண்டு குழறுவாள். இப்பத் தான் கொஞ்சம் தெளிஞ்சு இருக்கிறாள்."

"பிஞ்சு மனதில பயம் வந்தால் உப்பிடித்தான் நடக்கிறது. இஞ்சயும் ஒரு பெடிச்சியை அவங்கள் வெருட்ட, அதுக்கு விசர் வந்திட்டுது. தேப்பன் எவ்வளவோ ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயும் பெடிச்சியில ஒரு மாற்றமும் ஏற்பட இல்லையாம்."

"அநியாயம் பிடிச்சவங்கள். இருந்த மூண்டு வருஷத்துக்குள்ளை எவ்வளவு கொடுமையைச் செய்து போட்டாங்கள்."

ராஜேஸ்வரி இரண்டு, மூன்று முறைகள் தொண்டையைச் செருமினாள். "உங்களிட்டை ஒண்டு கேக்க வேணும் எண்டு நினைச்சனான். கேட்கிறன் எண்டு குறை விளங்காதேங்கோ. என்னட்டையும் இரண்டு குமர் இருக்கிறதால கேட்கிறன்." ராஜேஸ்வரியின் குரலில் தயக்கம் வழிந்தது.

"என்ன?"

"அடுத்ததாக வடமராட்சியையும் கைப்பற்றி விடுவாங்கள் போலத் தெரியுது. அதுக்குப் பிறகு வீடு வீடாகப் போய் இயக்கத்தாரையும், 'சப்போர்ட்டர்ஸ்' களையும் பிடிப்பினம். உங்கட மேளுக்கும் இயக்கத்திலை ஏதும் தொடர்பு....."

"இல்லை, இல்லை. இயக்கத்திலை சேருகிற அளவுக்கு தைரியம் அவளிட்டை இல்லை. அவள் ஒரு பயங்தாங்கொள்ளி. இந்திய 'ஆமிக்காரன்' சும்மா வெருட்டினதுக்கு எத்தனை நாள் அந்தரப்பட்டாள்?"

"இயக்கத்துக்கு ஏதாவது 'சப்போர்ட்'?"

"ச! இல்லை. தமிழ் ஆக்கள் உரிமையோட வாழ வேணும் எண்டு எங்கட அடிமனதில ஒரு சின்ன நினைப்பு இருந்தாலும், அதை வெளிப்படையாகக் காட்டுறதில்லை."

ராஜேஸ்வரி மலர்ச்சியுடன் புன்னகைத்தாள். "அப்ப நீங்களும் எங்களைப் போலத்தான். 'இவர்' இருக்கு மட்டும் கொஞ்சம் 'சப்போர்ட்' பண்ணினார். 'இவர்' போனாப் போல, நாங்கள் எங்கட விருப்பத்தினை மூடி மறைச்சிட்டம்."

"ஒரு சண்டை, சச்சரவு இல்லாமல் இருந்த நாடு. இண்டைக்கு ...." பூரணி பெருமூச்செறிந்தாள்.

"எவ்வளவு பெடியள் செத்துப் போட்டாங்கள்? என்ர குமர்ப் பெட்டையள் இரண்டும் கலியாணத்துக்குக் கழுத்தை நீட்டுற வயசு. ஆனால், எங்கை மாப்பிள்ளை? மூத்தவளுக்கு இருபத்தியேழு. இளையவளுக்கு இருபத்திமூண்டு. எப்பத்தான் இதுகளை கரைசேர்த்துப் போட்டு நான் கண்ணை மூடப் போறனோ.....?"

"என்ர சசி தனக்கு கலியாணமே வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டாள்."

"ஏனாம்?"

"அவள் ஒருத்தனை நம்பி மோசம் போயிட்டாள். அதுக்குப் பிறகு கலியாணம் எண்டால் அவளுக்கு வெறுப்பு. யாழ்ப்பாணத்து மாப்பிள்ளையளை நினைச்சு காறித் துப்புறாள்."

சசிகலாவும், நளினியும் தூக்க முடியாத சாமான்களுடன் வர, இவர்களது சம்பாஷணை இடைநடுவில் அறுந்தது. ராஜேஸ்வரியின் மனதினுள் கதை கேட்கும் ஆர்வம் தணிய முரண்டு பண்ணியது.

நளினியின் முகத்தில் 'பரபரப்பு' தென்பட்டது. "அம்மா, கொடிகாமத்திலை இருந்து 'ஆமி' வெளிக்கிட்டு, பருத்தித்துறையை நோக்கி வருதாம்." நளினி சொல்ல, "என்ர பிள்ளையாரே, இரண்டு, மூண்டு நாளைக்கு குண்டுச் சத்தம் தான் கேட்கப் போகுது" எனத் தலையில் கை வைத்தாள் ராஜேஸ்வரி.

"எதிர்ப்பு இல்லாதபடியால இரத்தம் சிந்தாமல் வடமராட்சியைப் பிடிச்சுப் போடுவினம்." பூரணி நமுட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

"வடமராட்சியைப் பிடிச்சால் முழுக் குடாநாடும் அவங்கட கையில தான். அப்ப எங்களையும் யாழ்ப்பாணத்துக்குப் போக விடுவாங்கள். உப்புத் தண்ணியைக் குடிக்கத் தான் ஏலாமல் போகும்." சசிகலா சிரித்து விட்டு, நகைச்சுவை உணர்வுடன் நளினியை நோக்கினாள்.

"வடமராட்சி 'ஒபரேசனுக்குள்ளை' நாங்கள் நல்லா கஷ்டப்பட்டு விட்டம். ஒரு கிழமை மட்டும் கோயிலிலை இருந்தம். ஒரு நாளும் குளிக்க இல்லை. ஆனபாட்டுக்கு சாப்பிட இல்லை. நீட்டி நிமிர்ந்து படுக்க இல்லை. இந்த முறை அப்படி நிலைமை வருமோ?" இவர்கள் சம்பாஷணையில் நுழைந்த இளையவள் வசந்தி கண்களைப் பிரட்டி எடுத்தாள்.

"இந்த முறை அந்த மாதிரி நிலைமை இருக்காது எண்டு நினைக்கிறன். ஆனால், பெடியளைப் பிடிச்சுக் கொண்டு போவாங்கள். மற்றும்படி பெடிச்சியளோட

சேட்டை விடுவாங்கள்." ராஜேஸ்வரி நிதானத்துடன் சொன்னாள்.

முன் வீட்டு சுப்பிரமணியம் வந்தார். வயதில் பழுத்தவர். பற்கள் இல்லை நெற்றியில் நிறையத் திருநீறு. "தொண்டமானாறு பக்கம் வெடிச்சத்தம் கேட்குதாம்."

"அங்க இருந்தும் 'ஆமி' வருது போல..."

"கோயில்ல போய் இருப்பமோ?"

"ஏன் சனம் கோயிலுக்குப் போற மாதிரி சிலமன் தெரியுதோ?"

"இல்லை. போனால் இடம் பிடிக்கலாம். பேந்து எண்டால் கஷ்டமாக இருக்கும்."

சசிகலா தன்னை மீறிச் சிரித்து விட்டாள். சுப்பிரமணியத்திற்கு முகம் கோணலாகிவிட்டது. முதுகைச் சொரிந்தபடி போய் விட்டார். "நாகரீகம் மெத்தி கோயிலுக்குள்ளை போறதுக்கு கால் கூசுதாக்கும்" என்ற மாதிரி அவர் சொல்லி இருக்க வேண்டும்.

சசிகலா வீட்டுக்குள் புகுந்து விட்டாள்.

இரவு காய்ந்த போது நிசப்தம் தான். விடிந்த போதும் அதே நிலை தான்.

மதியம் போல, "வந்திட்டாங்கள், வந்திட்டாங்கள்" என்று கத்தியபடி 'யாரோ' ஒருவன் ஓடினான்.

"எங்கையாம்?" சுப்பிரமணியம் வீதியில் நின்றார்.

"மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கிட்ட நிக்கிறாங்களாம்."

"சத்தம், சிலமன் இல்லாமல்...."

" 'ஒபரேஷன் இடிமுழக்கம்' எண்டால் தான் சத்தம் கேட்குமாக்கும். இது 'ஒபரேஷன் சூரியக்கதிர்' தானே? "

சுப்பிரமணியம் முதல் ஆளாக கோயிலில் அடைக்கலம் புகுந்தார்.

பிள்ளையார் கோயில் மணியடித்தது.

"வழமை போல ஐயர் மத்தியான பூசையைத் துடங்கப் போறார் போல."

சசிகலா கண்களை மூடினாள். அவள் மேனியைச் சிறியதொரு நடுக்கம் பற்றி இருந்தது. அவள் நெஞ்சு குளிர்ந்திருந்தது. இதயத்துடிப்பு அளவுக்கு மிஞ்சியது.

அவள் நினைவலைக்குள் 'அந்தச் சம்பவம்' ஊடுருவுகின்றது. நல்லூர் கந்தசாமி கோயில் மணி விடாமல் ஒலிக்கின்றது. அந்த ஒலியில் மிதந்து வந்த பக்திப் பரவசத்தை உணர முடியாமல் சசிகலா தவிக்கிறாள்.

நல்லூர் வீதிச் சந்தியில் அவள் நிறுத்தப்பட்டிருக்கிறாள். வீதியை ஒட்டி ஒரு சிறிய இராணுவ முகாம் இருந்தது.

"உனக்குப் பெயர் என்ன?" மேஜர் அர்ஜுன் சிங் என்பது தான் அவனுக்குப் பெயர் என்பதை அவள் பிற்பாடு அறிந்தாள். அவன் 'உடைந்த' ஆங்கிலத்தில் அவள் மேனியை அநாகரீகமாகத் துளைத்தபடி கேட்டான்.

"சசிகலா....." இவள் நடுங்குகிறாள்.

"வயது?"

"பதினெட்டு."

"படிக்கிறாயா?"

வெறுமனே சின்னதாக 'ஆம்' என்று தலையாட்டுகிறாள்.

அவன் துப்பாக்கியை அவள் நெற்றிக்கு நேரே பிடித்தான். கொஞ்சம், கொஞ்சமாக கீழே பதித்து, நெஞ்சுக்கு நேரே குறி வைக்கிறான்.

"உனக்கு எத்தனை புலிகளைத் தெரியும்?"

"ஒருத்தரையும் தெரியாது." சொன்னவள் அவள் தான். அவளுக்கே பிற்பாடு சொன்னது தானா என்று ஒரு சந்தேகம்.

"உண்மையைச் சொல்லு." அர்ஜுன் சிங் மிரட்டினான்.

"எனக்கு ஒருத்தரையும் தெரியாது, 'சேர்'....."

"அப்படியா?" எனக் கேட்ட அர்ஜுன் சிங் எழுந்து, சசிகலாவின் முன் நின்றான். "உனக்குத் தெரியாது? உண்மையைச் சொன்னால் விட்டுவிடுவேன்." அவன் தன் நெஞ்சை அவள் நெஞ்சுக்குக் கொண்டு வந்தான்.

சசிகலா கூசித்தாள். அவள் முழு உடம்பும் ஒரு முறை சிலிர்த்தது. இரு கைகளினாலும் தன் உடலைப் போர்த்த....

அவன் மேலும் முன்னேறினான்.

அவள் பெண்மை வெகுண்டெழுந்தது. கோபம் இதயத்தை உதைத்தது. அவனைக் கோபத்துடன் முறைத்துப் பார்க்க, அவள் கன்னத்தை அவன் மெல்லக் கிள்ளினான்.

அவளுள் உருவகித்திருந்த கொஞ்ச, நஞ்சத் தைரியமும் உருகியது. எதிர்ப்புச் சக்தி குறைந்தது. பலிகடாவின் நிலையை அடைய முற்பட, அவளுள் வேதனை உருவாகியது. அந்த உணர்ச்சியின் தாற்பரியம் அவள் கண்களைக் கலங்க வைத்தது.

அர்ஜுன் சிங் இப்போது அவளைப் புதுமையாக நோக்கினான்.

"உனக்கு கலியாணம் ஆகிவிட்டதா?"

"இல்லை."

"என்னைக் கலியாணம் முடிக்க உனக்கு விருப்பமா?" அர்ஜுன் சிங்கின் கை அவளது தோளுக்கு நகர்ந்தது.

சில விநாடிகளில் அவன் கை எங்கே இறங்கப் போகிறது என்பதை அனுமானிக்கும் பக்குவம் அவளிடம் இருந்தது. இனிச் சற்றுத் தைரியத்துடன் செயற்படவேண்டும் என்று எண்ணியவளாக, அவனிடம் இருந்து விடுபட முயன்றாள்.

அவளிடம் இருந்த 'ஹான்ட் பாக்'கை அவன் கண்டு விடுகிறான். 'வெடுக்'கென அதைப் பறித்தான். அதைத் திறந்தவன், அவளின் அடையாள அட்டையை எடுத்து, அதை ரசிப்புடன் நோக்கினான்.

"படத்திலும் நீ நல்ல அழகாகத் தான் இருக்கிறாய்" என்றவன், இந்தியில் நீண்ட வசனமொன்றை உற்சாகத்துடன் உதிர்த்தான். பின் "அடையாள அட்டை வேண்டுமென்றால் நீ எனக்கு ஒரு முத்தம் தர வேண்டும்" என்று சொல்லி விட்டு, அவளைச் சுவாரஷ்யத்துடன் நோக்கினான்.

அவள் உணர்ச்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றுடன் போராட்டம் நடத்தின. கோப உணர்ச்சி தான் உச்சியில் நின்றது. அந்த மேஜரை அப்படியே உரிந்து விட்டு, சுட்டுத் தள்ள வேண்டும் என்ற வெறி அவளுள் புகுந்து, நர்த்தனமாடியது.

"என் இனியவளே, முத்தத்தை தருவாயா?" கெஞ்சலும், கொஞ்சலும் அவன் வார்த்தைகளில் பரிணமித்தன.

"இல்லை, இல்லை." திடீரென – ஆவேசம் வந்தவளாக அவள் கத்தினாள்.

அவள் வாயை மூட முன், 'மேஜர்' அவள் கன்னத்தில் முத்தமிட்டு விட்டான்.

பரம்பி இருந்த சர்தார்கள், மராட்டியர்கள், கூர்க்காக்கள் அளவுக்கு மீறி நகைத்தார்கள்.

சசிகலாவின் முழு உடலும் நடுங்கியது. தலை விறைத்தது. குருதி அத்துமீறி ஓடியது.

"சரி, நீ போ." அர்ஜுன் சிங் கொஞ்சலாகச் சொன்னான். பின் அடையாள அட்டையை வீசி எறிந்தான்.

அவள் அந்த முகாமடியில் இருந்து குனிந்த தலையாக நடக்கிறாள். அவமானம், ஆத்திரம், எரிச்சல் என்று நிறைய உணர்ச்சிகளைக் காவியபடி செல்ல, ஜீப்பில் இருந்த கிழட்டு ஜவான் ஒருவன் விசில் அடித்தான்.

தொடர்ந்து ஒலித்த கோயில் மணி அடங்கி விடுகின்றது.

வீட்டை அடையும் போது, சித்த சுவாதீன நிலையை அவள் நெருங்கிவிட்டாள்.

அன்று முழுவதும் பூரணி மகளைத் தேற்ற முயல எடுத்த பிரயத்தனங்கள்.....

ஒரு வாரமாக சசிகலா இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள். பாடசாலைப் பக்கமும் எட்டிப் பார்க்கவில்லை.

ஒருத்தி இவளைத் தேடி வந்தாள். "பிள்ளை, அவளுக்கு மலேரியா காய்ச்சல்." பூரணி அழகாகப் பொய் சொன்னாள்.

அந்த ஒருத்தி நண்பியைப் பார்க்காமலேயே சென்று விட்டாள்.

மீண்டும் பள்ளிக்கூடத்தில் காலடி எடுத்து வைத்த சசிகலாவிடம் இருந்து 'கலகலப்பு' விடை பெற்றிருந்தது. நிறையக் கதைப்பவள், அமைதியை நாடினாள். விளையாட்டுக்களில் ஈடுபாட்டை அறவே ஒழித்தாள். நிரம்பிய யோசனைகளிடம் தன்னை ஒப்புவித்திருந்தாள்.

இத் தருணத்தில் சவூதி அரேபியாவில் இருந்து விடுமுறைக்காக வந்திருந்த இவர்களது தூரத்துச் சொந்தக்காரனான கேசவனுக்கு இவளுடன் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அவள் வாழ்வில் மலர்ச்சி தோன்றியது.

## (8)

விமானப் படைக்குச் சொந்தமான அந்த விமானம் பலாலி விமான நிலையத்தை நோக்கிப் பறந்தது. மொத்தம் நாற்பத்தியிரண்டு இராணுவ வீரர்கள் அதில் பயணம் செய்தார்கள். பண்டார, பிரியந்த, கெமுனு அருகருகாக அமர்ந்திருந்தார்கள்.

அது தான் பண்டாரவுக்கு முதலாவது ஆகாயப்பயணம். விமானத்தினுள் ஏறியது முதல் அவனுள் புளகாங்கிதம் தக்கு முக்கியது. விமானம் தரையில் ஓடி, ஆகாயத்தில் பறக்க முற்பட்ட போது, அவனுள் கிளம்பிய உற்சாகம், மகிழ்ச்சி....

பயணம் முழுவதும் அவன் மௌனத்திற்கு அடிமைப்பட்டிருந்தான். கண்களை மூடியவண்ணம், யோசனையில் மூழ்கியிருந்தான். தாயின், தங்கையின், தம்பிமாரின், விஜிதாவின் முகங்கள் எனக் கிராமத்திலேயே அவன் மனம் லயித்திருந்தது.

கிராமத்தில் இருந்து புறப்படும் போது தாயின் முகத்தில் தவித்த வாஞ்சை...... அவனை அப்படியே கட்டி அணைத்து, கன்னத்தில் முத்தமிட்டு வழியனுப்பிய போது கலங்கிய கண்களுடன், பெருமை சொட்ட அவனைப் பார்த்ததை..... அதேவாறு தலைகுனிந்து தங்கையின் முத்தத்தைப் பெற்ற பண்டார அவளைப் பார்க்க, அந்தக் கண்களில் பயம் நிறைந்திருப்பதை அவன் அவதானித்து கலவரமுற்றதை....'அண்ணே, அண்ணே' எனப் பன்னிரண்டும், பதினான்கும் வயதான தம்பிமார் அவனைக் கட்டிப்பிடித்து கண்ணீர் சுரந்ததை........

விஜிதாவுடன் அந்தரங்கமாகக் கதைப்பதற்கு பண்டாரவுக்கு சந்தர்ப்பம் கிடைத்த போது, தன் உள்ளத்தில் அவள் மீது வைத்திருந்த ஊமைக் காதலை – முதல் தடவையாக அவன் தட்டுத்தடுமாறி வெளியிட்டு விடுகிறான்.

விஜிதாவின் முகத்தில் ஆச்சரியம் வெகுவாக ஒட்டி விட்டது. எதுவுமே புரியாதது போல – ஓர் விநோதப் பிராணியைப் போல – பார்க்கிறாள்.

"என்ன சொல்கிறாய், விஜிதா?" அவள் முடிவை அறிந்து விட வேண்டும் என்று அவசரப்படுகிறான்.

"பண்டார அண்ணா, நீங்கள் என்னை விரும்பினீர்களா?" என அவள் நேரிடையாகவே கேட்டாள்.

"ஆம்" என அவன் பலமாகத் தலையாட்டினான்.

அவள் முகத்தில் இருந்து ஆச்சரியம் விலகியது. அதில் துன்பத்தின் சாயல் அத்துமீறியது.

"அண்ணா, நீங்கள் எனக்கு ஒரு சகோதரன், நல்ல நண்பன் என்று தான் இவ்வளவு நாட்களும் நினைத்தேன். ஆனால், எனது நினைப்பை நசுக்கிவிட்டீர்கள். உங்கள் மனதில் இப்படி ஒரு தப்பான ஆசை புதைந்திருக்கிறது என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டது. உங்களுக்கு எப்பொழுது முதல் இந்த ஆசை ஏற்பட்டது?"

விஜிதாவின் வார்த்தைகளில் பொதிந்திருந்த கருத்துக்களின் அர்த்தத்தை அவனால் இலகுவில் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. தன் மனதினுள் வளர்ந்திருந்த காதலுக்கு அவள் அனுசரணையாக விளங்குவாள் என்ற அவன் எதிர்பார்ப்பு நலிவடைந்து விட்டது என்பதை புரிந்து கொள்கிறான்.

பண்டாரவுக்குப் பதில் கூறக்கூடிய பக்குவம், தைரியம் ஏற்பட மறுத்தது. அவளைப் பார்ப்பதும், இலக்கின்றி தூர எங்கெல்லாமோ பார்ப்பதுமாக நேரத்தை வீணடித்தான்.

"சொல்லுங்க, அண்ணா."

"இரண்டு வருடங்களாக......"

"அதாவது நான் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்....."

"ஆம்! ஒரு முறை காய்ச்சல் வந்து மூன்று நாட்கள் நான் படுக்கையில் கிடந்த போது... வீட்டில் கிடந்து, தனிமையில் அழுந்திய போது, நீ வெளிப்படுத்திய அன்பை, ஆதரவை, பரிவை உணர்ந்து என் மனம் தளும்பிவிட்டது. அந்த மூன்று

நாட்களும் நீ எனக்குப் பல உதவிகளைச் செய்தாய். கொத்தமல்லி கஷாயத்தைச் 'சுடச்சுட' கொண்டு வந்து நீட்டினாய். எனது உடல் வெப்பத்தை அறிய எத்தனையோ தடவைகள் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாய். வெறும் காய்ச்சல் தானே என எனது குடும்பத்தினர் என்னை அலட்சியம் செய்திருந்த வேளையில், நீ எனக்கு ஒரு தாய்க்குரிய, தங்கைக்குரிய பரிவுடன் சேவை செய்தாய். மொத்தத்தில் அந்த மூன்று நாட்களும் எனக்கு கிட்டிய சேவை ஒரு கணவனுக்கு மனைவி மூலம் கிடைக்கும் சேவைக்கு ஒப்பானது" என்று பண்டார விளக்கமளிக்க, விஜிதாவின் முகத்தில் தவிப்பு அளவுக்கு மீறி இருந்தது.

"எனக்கு ஒரு அண்ணன் இருந்திருந்தால் இந்த மாதிரியான பணிவிடையைத் தான் நிறைவேற்றி இருப்பேன்."

"அதை நான் வித்தியாசமாக விளங்கிவிட்டேன் என்று நீ நினைக்கிறாயா?"

"ஆம். என் உள்ளத்தில் படிந்திருப்பதை அறியாத நிலையில் நீங்கள் என் மீது ஆசை வைத்து விட்டீர்கள், அண்ணா."

"அப்படியென்றால் எனது காதலை நீ ஏற்றுக் கொள்ளமாட்டாயா?"

"இல்லை."

"காரணம் என்ன?"

"நான் உங்களுடன் அப்படிப் பழகவில்லை."

"இப்பொழுது நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று அறிந்து விட்டாய் அல்லவா? உனது எண்ணத்தை மாற்றலாம் தானே?"

"பண்டார அண்ணா, காதலை மலினப்படுத்தாதீர்கள். அது புனிதமானது. அது எப்படி, ஏன், எதற்கு தோன்றுகிறது என்று தெரியாத ஓர் ஆகர்ஷண சக்தி. அந்தச் சக்தியை செயற்கையாகத் தோற்றுவிக்கச் சொல்கிறீர்களா?"

"காதலுக்கு ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்தி என் காதலை நிராகரிக்க முற்படுகிறாயா?"

"இல்லை. மொட்டையாகச் சொல்லுவதென்றால் பண்டார அண்ணா நான் உங்களை ஒரு சகோதரனாக, நண்பனாகத் தான் கருதுகிறேன். என்னைத் தற்செயலாக யாராவது பலாத்தகாரப்படுத்தி திருமணம் செய்து வைத்தாலும், என்னால் உங்களை கணவன் என்ற ஸ்தானத்தில் வைக்க முடியாது."

"நீ நினைத்தால் மனதை மாற்ற முடியும். என் சார்பாக உன்னால் முடிவு எடுக்கலாம்."

"ஆனால், இந்த விடயத்தில் என்னால் மனதை மாற்ற முடியாது. நான் இயந்திரம் இல்லை. மனிதப் பிறவி. மிருகத்தைப் போல வாழ என்னால் முடியாது."

பண்டார தனது வாதத்தை எல்லையை மீறிய நிலையில் நிகழ்த்திய போதும், தன் மனதினுள் பதிந்திருக்கும் அப்பட்டமான உண்மையை வெளிப்படுத்தி அவள் எதிர்வாதம் புரிந்தாள்.

பண்டார தெளிந்தான். அவள் எதிர்க்கருத்தை ஏற்றுக்கொண்டான்.

"அந்தச் சம்பவத்தின் பின் நீ என்னுடன் ஒரு தங்கையின், நண்பியின் ஸ்தானத்தில் இருந்து பேசிய போதும், நீ என்னைக் காதலிக்கிறாய் என்று தான் நினைத்தேன். பரவாயில்லை. வாழ்க்கையின் அனுபவம் எனக்குக் குறைவாக இருக்கலாம். அத்துடன் காதல் என்பது ஓர் ஆழமான உணர்ச்சியின் ஊற்று

என்பதும் எனக்கு தெரியாதிருக்கலாம். இப்பொழுது இந்த ஊற்று ஏன், எப்பொழுது, எதற்காக பெருக்கெடுக்கிறது என்பதைப் புரிந்து விட்டேன். ஒரு சின்னப் பாடத்தை முகவுரையில் இருந்து இறுதி அத்தியாயம் வரை படித்து விட்டேன்" என பண்டார சொல்லும் போது, அவன் கண்கள் கலங்கி விட்டன.

விஜிதாவுக்கும் கண் கலங்கியது. தன் முன்னால் ஓர் ஆண்மகன் கண்கலங்குவதற்கு தான் காரணமாகி விட்டேனே என்ற குற்ற உணர்வு அவளைப் பீடித்தது. அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

"பண்டார அண்ணா, என்னுடன் கோபமா?"

விஜிதா இப்படிக் கேட்டதும் பண்டார உணர்ச்சிவசப்பட்டு விட்டான். கண்களை அவசரத்துடன் துடைத்தான். "இல்லை, இல்லை. ஆனால், இனி இப்படி ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்காக என் மனதைப் பக்குவப்படுத்த வேண்டும் என்ற உண்மையை அறிந்து விட்டேன். அத்துடன் பெண்களின் மனம் எவ்வளவு ஆழமானது என்பதை நீ கற்றுத் தந்ததையும் மறக்க மாட்டேன்."

"அப்படி என்றால் இனி ஒரு பெண்ணையும் காதலிக்கும் எண்ணம் உங்களுக்கு இல்லையா?"

"நான் அப்படிச் சொல்லவில்லை. இனி கொஞ்சம் கவனமாக இருப்பேன். அத்துடன் அவசரப்படவும் மாட்டேன்."

இவனை விஜிதா பரிதாபமாகப் பார்த்தபடி சென்றாள். இதே உணர்ச்சியுடன் – அவன் கிராமத்தை விட்டு வெளியேறிய போதும் அவள் நின்றாள். 'அண்ணா, இனியும் பெண்கள் விடயத்தில் ஏமாந்து விடாதீர்கள்' என்று அவள் சொன்ன மாதிரி.....

**வி**மானம் பலாலியை நெருங்கியது. பண்டாரவின் நெஞ்சில் பிரியந்த மெல்லத் தட்டி, "என்ன கனவு காண்கிறாயா?" எனக் கேட்டான்.

"இல்லை. யோசனையில் ஈடுபட்டிருந்தேன்."

"யாழ்ப்பாணத்தில் இருக்கும் இளம் பெண்களை மனதுக்கு கொண்டு வந்து, அதில் ஓர் உணர்ச்சித் துடிப்பினை அடைகிறாயா?"

"இல்லை." பண்டார கோபத்துடன் பதில் அளித்தான். "நான் ஏன் அவர்களைப் பற்றி நினைக்க வேண்டும்? நான் எனது அம்மாவையும், தங்கையையும், தம்பிமாரையும் நினைத்துப் பார்த்தேன்."

"உன்னைப் பொறுத்தளவில் யாழ்ப்பாணத்து தமிழர்களும், உனக்கு தாய்மார்கள், தந்தைமார்கள், சகோதரர்கள், சகோதரிகள்...... இளம் பெண்கள் எல்லோரும் உன் தங்கைமார்கள் தானே?"

"என்னுள் நிறைய சத்தியங்கள் அடங்கியுள்ளன. அவற்றில் நீ சுட்டிக் காட்டிய தகவலும் அடங்கும். அவர்கள் எமது நாட்டின் பிரஜைகள். அந்த எண்ணத்தில் இருந்து நாம் விலகினால் அவர்கள் அந்நியப்படுவார்கள். அதுவே இரு இனங்களுக்கும் இடையில் தற்போது நிலவும் விரிசலை அகட்டிவிடும். நாம் அவர்களை நேசிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் எங்களை அணைப்பார்கள்."

பிரியந்த கேலியாகச் சிரித்தான். "குண்டுடன் தான் அவர்கள் எம்மை அணைப்பார்கள். நாம் அவர்கள் மீது அன்பு சொரிய, அதை தமக்குச் சாதகமாக்கும் அவர்கள் எமது உயிரைப் பறித்து விடுவார்கள். கூட இருந்து குழி

பறிப்பது என்ற பழமொழி அவர்களுக்குப் பொருந்தும்."

"உனக்கு அவர்கள் மீது காரணமில்லாமல் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக தமிழ் மக்கள் எம்மைத் தமது நண்பர்களாகத் தான் கருதுகிறார்கள்."

"அப்படி என்றால் அவர்கள் ஏன் எமக்கு எதிராகத் துப்பாக்கி ஏந்துகிறார்கள்?

"அவர்கள் என்று நீ யாரைக் குறிப்பிடுகிறாய்?"

"தமிழ் மக்களை."

"தமிழ் மக்கள் யாவருமே துப்பாக்கியை ஏந்தவில்லை. காலாதி காலமாக அடக்கு முறைக்கு அடிபணிந்து, தலை உயர்த்த முடியாத நிலையில் தான் தமிழ் இளைஞர்கள் துப்பாக்கியை ஏந்தினார்கள். அதற்கான காரணத்தை அந் நேரமே அறிந்து பரிகாரம் கண்டிருந்தால், நிலைமை இந்தளவுக்கு விசுவரூபமெடுத்திருக்காது. தலையிடிக்கு சத்திரசிகிச்சை செய்யப் போய் புற்று நோயாக வளர்ந்துவிட்டது. இன்று ஒரு கோடியே எழுபது இலட்சம் மக்கள் யுத்தத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்கெடுக்கின்றார்கள்."

"அரசாங்கத்தின் மீது பழி சுமத்துகிறாயா?"

"ஆம். அரச இயந்திரம் சரிவர செயற்படாததினால் சகல மக்களுமே யுத்தத்தின் குகைக்குள் சிக்கிவிட்டனர். அதில் இருந்து வெளியேறுவதற்கு வழி தெரியாமல் திண்டாடுகின்றனர். வெளிச்சம் எங்கே தெரிகிறது என்று எல்லோருமே தேடுகிறார்கள். அன்பால், ஆதரவால், சகோதரத்துவத்தால், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால், அஹிம்சை வழியால் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடும் நிலை இருக்கும் போது, சீனக்காரனின் துப்பாக்கியிலும், இஸ்ரேலியக் குண்டு வீச்சு விமானங்களிலும் நம்பிக்கை வைக்கிறார்கள். எமது நாட்டின் சொத்தை நாமே அழிக்கிறோம். எமது வருங்கால சந்ததியை 'ஏதோ' ஒரு சக்திக்கு அடகு வைத்து, ஓர் இனத்தின் உரிமையை அநாகரீகமாக நசுக்குகிறோம்."

பிரியந்த வாய்விட்டுச் சிரித்தான். அக்கம், பக்கத்தில் அமர்ந்திருந்த வீரர்கள் இவர்களை வியப்புடன் நோக்கினார்கள்.

"பண்டார, தமிழ் மக்களுக்கு வக்காலத்து வாங்குகிறாயா?"

"இல்லை. உண்மையை உரைக்கிறேன். தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கி, அவர்களுடன் சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும், சமாதானத்துடனும் வாழ்ந்திருந்தால், இன்று எமது நாடு அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிச் சென்றிருக்கும்."

"தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கி இருந்தால் அவர்கள் எம்மை மீறிச் செயல்பட்டிருப்பார்கள்."

"அந்தப் பொறாமையினால் தான் இனத் துவேஷத்தை விதைத்து, அதில் குளிர்காய்கிறீர்கள்."

விமானம் கீழே இறங்க, ஜன்னல் ஊடாக பண்டார பார்வையைத் தாழ்த்தினான். பனை மரங்களும், குடிமனைகளும் சின்னஞ்சிறிதாகத் தெரிந்தன.

"பலாலியை நெருங்கிவிட்டோம்." பிரியந்த குதூகலித்தான்.

"உனக்கு கள்ளுக் குடிக்கிற ஆர்வம். ஆனால், நீ நினைப்பது போல சூழ்நிலை இல்லை. யாழ். குடாநாட்டைச் சுத்தம் செய்து விட்டோம் என

அரசாங்கம் கூறினாலும், புலிகள் இயக்கத்தினர் அங்கு இருக்கிறார்கள். கள்ளுக் குடிக்கும் நேரத்தில் எதிரி உன் தலையைக் கொய்துவிடுவான் என்பதை மனதில் இருத்தி வை." கெமுனு கூறினான்.

"எனது தலையை அவ்வளவு இலேசில் கொய்ய முடியாது. எனது உடம்பில் தூய சிங்கள இரத்தம் இன்னும் ஓடுகிறது. "

"எனது அண்ணனும் இப்படித்தான் சொல்லுவார். இறுதியில் புலிகளிடம் உயிருடன் அகப்பட்டுவிட்டார்." பண்டார அமைதியாகச் சொன்னான்.

"நீயும், உனது அண்ணனும் ஒரு கோழைப் பரம்பரைக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறீர்கள்."

பண்டார ஒன்றும் கூறவில்லை.

விமானம் ஓடு பாதையில் இறங்கி ஓடியது.

"யாழ்ப்பாணத்திற்கு வந்து விட்டோம்." 'யாரோ' அறிவித்தார்கள்.

"எனது இலட்சியக் கனவு இன்று முதல் நிறைவேறப் போகிறது." இன்னொருவன் சூளுரைத்தான்.

விமானம் நின்றது . எல்லோரும் இறங்கினார்கள்.

பண்டார கீழே இறங்கினான். அவன் மனதில் 'சுறுசுறுப்பு'. கண்களை மகிழ்ச்சியுடன் சுழற்ற, நூற்றுக்கணக்கான இராணுவத்தினர், உயர்ந்து வளர்ந்திருந்த பனை மரங்கள் கண்களில் சிக்குண்டு, மறைகின்றன.

எல்லோரும் நடக்கின்றனர்

"வெயில் ஒரே அகோரமாக இருக்கிறது." கெமுனு சொன்னான்.

"இங்குள்ள மக்களுக்கு நிறைய எதிரிகள். இராணுவம், அரசாங்க இயந்திரம், காலநிலை, உப்புத் தண்ணீர், வரண்ட பூமி ஆகியன முக்கிய எதிரிகள். அவர்கள் தமது பிரயாசையால் தான் தமது பூமியை வளமாக்குகிறார்கள். ஒரு சிறிய நிலப்பரப்பில் அதிஉச்ச உற்பத்தியைப் பெறுகிறார்கள். இப்படியான பூமியும், காலநிலையும் தெற்கில் உள்ளன. ஆனால், உழைப்பு, பிரயாசை, குறிக்கோள் ஆகியன சைபராக விளங்குகின்றன. தெற்கின் உற்பத்தியை வடக்கின் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது, தெற்கின் உற்பத்தி மிகக் குறைவு. எமது மக்கள் தமது சோம்பல்தனத்தை அகற்ற வேண்டும்."

"உன்னுடன் யாழ்ப்பாணத்து மக்கள் பற்றி கதைத்தால், ஒரு சின்ன விரிவுரையையே நிகழ்த்தி விடுவாய்." பிரியந்த சினந்தான்.

"நீ குளத்தில் அப்படியே அமிழ்ந்து, எவ்வித பிரயாசையும் இன்றி குளிக்கின்றாய். ஆனால், இங்குள்ள மக்கள் ஒவ்வொரு வாளியாக தண்ணீர் அள்ளித் தான் குளிக்க வேண்டிய நிலை நிலவுகிறது. என்றபடியால் அவர்களது பிரயாசையைப் பற்றிக் கதைப்பதில் என்ன தவறு?"

"ஓர் இனத்துரோகியை இராணுவத்தில் சேர்த்து விட்டார்களே என்று வருந்துகிறேன்." பிரியந்த கூறிவிட்டு முகத்தைத் திருப்பினான்.

மதியம் சாப்பாடு பரிமாறப்பட்டது. நீரைக் குடித்த பிரியந்தவின் முகம் கோணலாகிவிட்டது. "ஒரே உப்பாக இருக்கிறது."

பண்டார புன்னகைத்தான். "எல்லா விஷயங்களிலும் யாழ்ப்பாணத்து மக்கள் பின்னடைவு நிலையில் விளங்குகிறார்கள் என்பதைப் புரிந்தாயா, பிரியந்த?"

"கள்ளும் உவர்ப்பாக இருக்குமா?"

"இல்லை, சுவையாக இருக்கும். இந்த ஊர் மக்களின் வியர்வையினால் வளர்ந்த மரங்களின் உற்பத்திகள் யாவுமே சுவையாகத் தான் இருக்கும். மாம்பழங்கள் கூட எவ்வளவு ருசியானவை என்று உனக்குத் தெரியுமா? இப்பொழுது தென்பகுதி மாம்பழங்களை 'யாழ்ப்பாணத்து மாம்பழங்கள்' என்று கூவித்தான் கொழும்பில் விற்பனை செய்கிறார்கள்."

"நான் ஒரு முறை கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஒன்றைச் சாப்பிட்டேன். என்ன ருசி! இப்பொழுது நினைத்தாலும் நாவில் நீர் ஊறுகிறது." கெமுனு சொன்னான்.

'டிரக்' ஒன்று காத்திருந்தது. இருபது பேரளவில் அதில் ஏறினார்கள்.

"நாங்கள் எங்கே போகிறோம்?" என்று அருகில் நின்ற 'கப்டன்' பொன்சேகாவிடம் பிரியந்த கேட்டான்.

"பருத்தித்துறைக்கு."

"ஓ! புலிகள் இயக்கத் தலைவர் பிறந்த மண். அழகான, அமைதியான கடற்கரையை அண்டியுள்ள, மூளைசாலைகள் நிரம்பிய ஒரு சின்ன நகரம். வடமராட்சிக்குள் அது அடங்குகிறது." கெமுனு ஒரு சின்ன அறிமுகத்தை வெளியிட்டான்.

"பருத்தித்துறையைப் பற்றி உனக்குத் தெரியும் போல." பண்டார வியந்தான்.

"எனது அப்பா பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் 'கொன்ஸ்டபிளாக' வேலை பார்த்தவர். அவரிடம் சிறிதளவு தகவல்களைப் பெற்றிருக்கிறேன்."

'டிரக்' அங்கிருந்து வெளியேறியது.

வழிவழியே தென்பட்ட காட்சிகளில் கண்களைப் பரவவிட்டபடி பண்டார 'டிரக்'கின் ஓரத்தில் அமர்ந்திருந்தான். உடைந்து, நொறுங்கி சேதமுற்றிருந்த வீடுகளைக் கண்ட பண்டாரவின் உள்ளத்தில் வேதனை ஊற்றெடுத்தது. திடீரென எல்லா இரைச்சல்களையும் அமுக்குமாற் போல பிரியந்தவின் குரல் அங்கு எதிரொலித்தது.

எல்லோரும் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

இன்னொருவன் தூஷணம் கலந்து, ஒரு 'பைலா' பாட்டைப் பாட, இரு வீரர்கள் எழுந்து நடனமாடினார்கள். பலரும் பாடலுக்கு ஏற்றபடி கைதட்டி, சுதி ஏற்றினார்கள்.

அச்சுவேலியை 'டிரக்' நெருங்கியது.

"எட்டுப், பத்து மைல்கள் வந்திருப்போம். வரும் வழியில் என்னத்தைக் கண்டாய்?" பண்டார மெல்லிய குரலில் கெமுனுவிடம் கேட்டான்.

"உடைந்த வீடுகள், உயர்ந்த பனை மரங்கள்....."

"ஆட்கள்? கண்டிருக்க மாட்டாய். ஆனால், ஆட்களை விட இராணுவ வீரர்களைக் கண்டிருப்பாய்."

"உண்மை தான்."

"மக்கள் எல்லோரும் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள். இவ்வளவு இராணுவ வீரர்கள் சூழ நின்றால் யாருக்குத் தான் பயம் இருக்காது? அந்தப் பயத்தை நாம் போக்க வேண்டும்."

கெமுனு ஒன்றும் கூறவில்லை.

பருத்தித்துறையை 'டிரக்' நெருங்கியது.

## (9)

சசிகலாவின் நினைவை விட்டு அகலாத – அவள் அடிக்கடி நினைத்துப் பார்க்கும் வகையில் அமைந்துவிட்ட நிகழ்ச்சிகளின் முன்னுரைக்கு வழிவகுத்த சம்பவம். நான்கு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் அது.

'ஏ. எல்' பரீட்சையில் சித்தி அடையத் தவறிய நிலையில் வாழ் நாட்களை 'சோம்பிய' நிலையில் கழிக்கிறாள் சசிகலா. வாழ்க்கையில் இலட்சியம், குறிக்கோள் என்று எதுவுமின்றி நாட்களை இயந்திரத் தன்மையுடன் கழிக்கிறாள்.

ஒரு நாள் – அந்த நாளில் அவள் வாழ்க்கையில் செழுமையை உணர்த்துவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. நண்பி ஒருத்தியை யாழ்ப்பாணம் 'ரவுணில்' பார்த்து விட்டு, வீடு திரும்பிய சசிகலா விறாந்தையில் தாயுடன் கதைத்துக் கொண்டிருந்த அறிமுகம் இல்லாத வாலிபனைக் காண்கிறாள். அவன் யாராக இருக்கலாம் என அனுமானிக்கத் தவறிய நிலையில், வீட்டினுள் செல்ல முயன்றவளை நோக்கி அவ்வாலிபன் கவர்ச்சியாகப் புன்னகைத்தான். அந்தப் புன்னகையில் ஒரு 'சுண்டி இழுப்பு' மறைந்திருந்தது.

சசிகலா புன்னகைக்கவில்லை. அவனை விநோதமாக நோக்கினாள். அவன் புன்னகையைத் தொடர்ந்தான்.

"சசி, இவரை உனக்கு தெரியாது போல.....இவர் கேசவன். எங்கட தூரத்துச் சொந்தம். அப்பான்ர பக்கம். சவூதியில இருந்து வந்திருக்கிறார்" எனப் பூரணி அவ்வாலிபனை அறிமுகப்படுத்துகிறாள்.

சசிகலா தன் நடையை நிறுத்தினாள். அவனை ஆழமாக நோக்கி, அவனை ஒருவாறு இனங்காண்கிறாள்.

"ஓ........கேசவன். கேள்விப்பட்டிருக்கிறன். நீங்கள் ரஞ்சிதமலரின்ர அண்ணனின்ர கூட்டாளி தானே?" சசிகலா கேட்டுக் கொண்டே அவன் முன்னால் அமர்ந்தாள்.

" ஓமோம்" என அவன் இரு தடவைகள் தலையைக் குலுக்கினான்.

"அவ என்ர 'கிளாஸ்மேட்'. அவவின்ர வீட்டில வைச்சு உங்களை எப்பவோ கண்ட ஞாபகம் இப்பதான் வருது........"

"நான் உம்மை அங்கை கண்டிருக்கிறன். நாலைஞ்சு வருசம் வரும். அப்ப நீர் படிச்சுக் கொண்டு இருந்தனீர். நல்ல மெல்லிசு. இப்ப கொஞ்சம் தொக்கை மாதிரி....."

சசிகலா வெகுளியாகச் சிரித்தாள். "இப்ப வீட்ல சும்மா இருக்கிறதால தொக்கையாகிவிட்டன் போல."

"எப்படி ரஞ்சிதமலர் ? சுகமா இருக்கிறாவோ ?"

"ஓ.... இப்ப சவூதியில .......... இரண்டு பிள்ளையள்."

"சரி, நீங்கள் இரண்டு பேரும் கதைச்சுக் கொண்டிருங்கோ. நான் கோப்பி ஊத்திக் கொண்டு வாறன்." பூரணி அங்கிருந்து தளர்வுடன் அகன்றாள்.

சில வினாடிகள் கேசவனுக்கும், சசிகலாவுக்கும் இடையில் பேச்சு விடைபெற்றிருந்தது. கேசவன் அவளைப் பார்த்தவண்ணம் பரவசப்பட்டுக் கொண்டிருந்தான். அதை உணர்ந்த அவள் தலைகுனிய," ஏ.எல். சோதனை சரிவர இல்லையோ?" என அவன் கேட்டான்.

"ம்க்கும். நாலு 'எஸ்' தான் கிடைச்சுது."

"ஏன் என்ன ஆச்சுது?"

"இஞ்ச படிக்கிற மாதிரி சூழ்நிலை இருந்துதோ? 'லைட்' இல்லை. பள்ளிக்கூடமும் ஒழுங்காக நடக்க இல்லை."

"'ரியூசன்'? "

"அது கூட ஒழுங்காக நடக்க இல்லை. ஒரு நாளைக்கு நடக்கும். இன்னொரு நாளைக்கு நடக்காது. 'மாஸ்டர்'மாரும் ஒழுங்காக வாறதில்லை."

"எங்கடை பெடியளின்ர படிப்பை வீணாக்கிப் போட்டாங்கள். காலாதி காலமாக படிப்பை ஒரு பொக்கிஷமாக நினைச்ச எங்கடை பெடியளின்ர எதிர் காலத்தை இருட்டாக்கிப் போட்டாங்கள்." கேசவன் பெருமூச்செறிந்தான்.

"எல்லாம் உரிமை கேட்கப் போய் வந்த வாழ்மானம்..... ஏன் தான் நாங்கள் உரிமை கேட்டுப் போராட்டம் நடத்தினம் எண்டு சில நேரத்தில நினைக்கிறனான். ஆனால், போராட்டம் நடத்தி இருக்காட்டால் எங்கட நிலையை நினைச்சுக் கூட பார்த்திருக்க ஏலாது எண்டும் நினைக்கிறனான்."

"குடியேற்றத்தால எங்களை அப்படியே முழுங்கி இருப்பாங்கள் எண்டு நினைக்கிறீரோ?"

"குடியேற்றம் ஒரு பக்கம். மொழித் திணிப்பு இன்னொரு பக்கம். போன போக்கில போயிருந்தால் நாங்கள் எல்லாம் சிங்களத்தில தான் சோதினை எடுத்திருப்பம். எத்தனை எளிய சாதியள் சிங்களம் படிச்சிருக்கும்? நல்ல வேளை அது நிண்டு விட்டுது. இல்லாட்டால்...."

கேசவன் நாடியை தடவியபடி இருந்தான். பின் நலிவான குரலில் தன் பேச்சை ஆரம்பித்தான். "ஆயிரக்கணக்கான சனம் செத்துப் போட்டுது. அதே அளவு சனம் முடமாகி விட்டது. யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு ஒருக்கால் போனனான். அங்கை கிடந்த ஆக்களைப் பார்த்து..... இரண்டு நாளா என்னால சரியாக சாப்பிட ஏலாமல் போயிட்டுது...."

"நானும் ஒருக்கால் அங்கை போனனான். இரண்டு காலும், ஒரு கையும் இல்லாத ஒரு பொம்பளையைப் பார்த்து எனக்கு அழுகையே வந்திட்டுது. அதைப் பார்த்தாப் பிறகு கடவுள் ஏன் தன்ர கண்ணைத் திறக்கிறார் இல்லை எண்டு தான் நினைச்சனான்."

" கடவுள் எங்களை மறந்திட்டார். " கேசவன் 'பட்'டெனச் சிரித்தான். "தமிழ் ஆக்களை பிச்சைக்கார நிலையை விட கேவலமான நிலைக்கு கொண்டு வந்திட்டார். பிச்சைக்காரன் எப்படியும் இரண்டு வேளை சாப்பாட்டையாவது எதிர்பார்க்கலாம். ஆனால், அகதியள்..... ஒரு வேளை சாப்பாட்டைக் கூட எதிர்பார்க்க ஏலாது. அதுகளால எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க ஏலாது. கேள்விக்குறியை முகத்துக்கு நேரே தூக்கியபடி தான் இருக்க ஏலும்."

"தமிழ் சனத்தில அரைவாசிக்கு மேல அகதியள். சொந்த நாட்டிலேயே அகதியள்."

"கோடிக்கணக்கான பெறுமதியான சொத்துக்கள் அழிஞ்சு போட்டுது.

மாளிகையில வாழ்ந்த ஆக்கள் எல்லாரும் குடிசையில வாழ்ற நிலைக்கு தாழ்ந்திட்டினம்."

"இதை விட அஹிம்சை வழியில எங்கட உரிமையைக் கேட்டிருக்கலாம் எண்டு கூட நினைக்கிறனான்."

"அஹிம்சை வழி? எங்கடை தலைவர்மார் அஹிம்சை வழியிலையும் போராட்டம் நடத்தினவையள். என்ன நடந்தது? அடியும், உதையும், விளக்கமறியலும் தான் மிச்சம். போராட்டம் கூடக் கூட கெடுபிடியும் கூடிச்சுது. அடக்கு முறையும் வலுத்தது. அதால தான் அஹிம்சை வழியில இருந்த நம்பிக்கை பெடியளுக்கு இல்லாமல் போச்சுது. ஆயுதத்தைத் தூக்கிச்சினம். அது தூக்கின நேரம் சரி இல்லையோ தெரிய இல்லை. இன்னும் ஆயுதப் போராட்டம் முடிய இல்ல."

"அதால அவையள் தங்கட குறிக்கோளை அடைவினம் எண்டு நினைக்கிறியளோ?"

"இதைப் பற்றி இப்போதைக்கு என்னால உறுதியாக எதையும் சொல்ல ஏலாது. தங்கட ஆயுதப் போராட்டம் இப்போதைக்கு முடியப் போற ஒண்டு இல்லை எண்டு பெடியள் சொல்லுகினம். ஆனால், ஒண்டை மட்டும் சொல்லுவன். ஒரு அரசாங்கம் ஒரு பிரச்சனை சின்னதாக இருந்தாலும், பூதம் மாதிரி வளர்ந்து இருந்தாலும் அதைத் தீர்க்க வேண்டுமே ஒழிய, அதை அடக்கி, ஒடுக்கக் கூடாது."

பூரணி கோப்பியுடன் வந்தாள். அதைக் கேசவனிடம் நீட்டினாள். "பேந்து எப்ப சவூதிக்கு போற உத்தேசம்?"

"ஒரு மாதத்துக்குள்ள போயிடணும். இஞ்ச இருந்து கொழும்புக்கு போறதுக்கு மட்டும் ஒரு கிழமையாவது எடுக்கும். வவுனியாவுக்கு தொண்ணூறு மைல் தூரம் நடந்து போனால் கூட ஐஞ்சு நாளிலை போகலாம்."

"அந்த மாதிரி ஒரு நிலைமையில எங்களை வச்சிருக்கிறாங்கள்."

இருளும் போது கேசவன் வீட்டை விட்டு வெளியேறினான்.

இரவு சாப்பிட்ட பின், நிலவின் துணையுடன் ஒருவரின் முகத்தை மற்றவர் பார்த்தபடி பூரணியும், சசிகலாவும் பொழுதைப் பேசியபடி போக்கினர். கேசவன் பற்றிய பேச்சு எழுந்தது.

"பெடியன் தன்ர விடா முயற்சியால நல்ல நிலைக்கு வந்து விட்டான். இஞ்ச இருந்திருந்தால் வேலை இல்லாமல், வீதி வீதியாக அலைஞ்சிருப்பான்." பூரணி பொதுப்படையாகச் சொன்னாள்.

"இஞ்ச எங்கை வேலை செய்தவர்?"

"காங்கேசன் 'சிமெண்ட் கோர்ப்பரேஷனில்'. அவன்ர 'என்ஜினியருக்கு' அவன்ல நல்ல விருப்பமாம். எல்லா வேலையையும் ஒழுங்காக செய்வானாம். 'என்ஜினியர்' வேலையை 'ரிஸைன்' செய்து போட்டு சவூதிக்கு போன உடன முதல் வேலையாக இவனைச் சவூதிக்கு கூப்பிட்டு எடுத்திருக்கிறார். இப்ப ஆறு வருசமாக வேலை செய்யுறான். நல்லா காசு உழைச்சுப் போட்டான். இரண்டு தங்கச்சிமாரை நல்ல சீதனம் குடுத்து, கலியாணம் கட்டி வைச்சிருக்கிறான் எண்டால் பார்த்துக் கொள்ளன்."

"பொறுப்பானவர் போல...."

மறுநாளும் கேசவன் வந்தான். பல விடயங்கள் பற்றி சசிகலாவுடன்

அளவளாவினான். பூரணி ஓரிரு வார்த்தைகள் கேசவனுடன் பரிமாறி விட்டு, குசினிக்குள் முடங்கி விட்டாள்.

தொடர்ந்து வந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் காலை, மாலை வேளைகளில் கேசவன் வந்தான். அந்நியோன்யமாக, அந்தரங்கமாக, ஆசையூட்டும் வார்த்தைகளை வெளியிட்டான்.

சசிகலாவை வருந்தி அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் நவீன சந்தையில் 'ஷொப்பிங்' செய்தான். அவளுக்குப் போக விருப்பமில்லை. "போயிட்டு வாவன். அவர் என்ன உன்னை விழுங்கப் போறாரோ" என தைரிய மூட்டினாள் பூரணி.

பஸ்சில் அவனுக்கு அருகில் நெருக்கமாக அமர்ந்திருந்த அவளுக்கு அந்தரமாக இருந்தது. அவனிடம் இருந்து விலகிய போதும், அவன் அவள் பக்கம் அடிக்கடி சரிந்தான்.

சுபாஷ் 'கூல் பாருக்கு' போனார்கள்.

"படிக்கிற காலத்தில ஒவ்வொரு நாளும் பின்னேரங்களில இஞ்ச வருவம். 'பிளேன் ரீ'யோட சிகரெட் குடிப்பம்" என்று சொல்லிச் சிரித்தான் கேசவன்.

சர்வர் 'கூல் டிரிங்ஸை' வைத்து விட்டுச் சென்றான்.

"சசி, இப்ப உமக்கு எத்தனை வயசு?" திடுதிப்பெனக் கேசவன் கேட்டான்.

"இருபத்தி மூண்டு."

"எனக்கு இருபத்தி எட்டு. இரண்டு பேருக்கும் ஐஞ்சு வயது வித்தியாசம்." மேசையின் மீது இருந்த சசிகலாவின் கையை கேசவன் பற்றினான்.

சசிகலா இதை எதிர்பார்க்கவில்லை. மருண்டு விட்டாள். கையை எடுக்க முயல, அவன் கவர்ச்சியாகப் புன்னகைத்து கண்சிமிட்டினான். அதில் அர்த்தம் இருப்பது போல அவளுக்குப் புரிய, தன் முயற்சியை கைவிட்டாள்.

அவன் நிறைய கதைத்தான். தன் சவூதி வாழ்க்கையை தேன் வார்த்தைகளால் வருணித்தான். எதிர்காலத்தில் இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு கற்பனைக் கோட்டை கட்டி இருப்பதாக எடுத்துரைத்தான். அந்தக் கோட்டையின் நாயகி சசிகலாவே எனச் செப்பினான்.

கொஞ்சம், கொஞ்சமாக அவன் வார்த்தைகளுக்கு அவள் மயங்கினாள். யாவுமே உண்மை என நம்பினாள்.

சசிகலா தன் உள்ளத்தைக் கேசவனிடம் பறி கொடுத்தாள்.

"உனக்கு என்ன வாங்கித் தந்தார்?" வீடு திரும்பிய சசிகலாவிடம் பூரணி ஆர்வத்துடன் கேட்டாள்.

அதைச் சொல்ல அவள் நாணப்பட்டாள்.

"சொல்லன்..."

"தன்ர உள்ளத்தையே அப்படியே தந்திட்டார்."

"நீ... நீ... என்ன சொல்லுறாய்?"

"'சுபாஷ் கூல் பார் ஐஸ்கிரீம் சாட்சியாக நான் உம்மை விரும்புறன்' எண்டு அவர் சொல்லிப் போட்டார்."

"விளையாட்டாக இல்லைத் தானே?"

"சத்தியம் எல்லாம் செய்தார்."

"நீ உன்னை மறக்க இல்லைத் தானே?"

"நான் பக்குவப்பட்டனான். விடலைப் பருவத்து ஆசை என்னை விட்டுட்டு போயிட்டுது."

அடுத்த ஒரு வாரமும் கேசவன் பெரும்பாலான நேரத்தை சசிகலாவின் வீட்டு விறாந்தையில் கழித்தான். அவளைப் பல கோணங்களில் படம் எடுத்தான். இரு நாட்கள் பூரணி மதிய சாப்பாட்டை எடுப்புடன் அவனிடம் நீட்டினாள். சசிகலா தற்பாதுகாப்பை மறக்கவில்லை. அவள் தன் உணர்ச்சிகளின் ஏற்ற, இறக்கத்திற்கு ஒரே மட்டமே வழங்கியிருந்தாள்.

"கேசவனை ஒரு மாதிரி வளைச்சுப் பிடிச்சிட்டாய் போல...." பூரணியிடம் அவள் மாமி ஒருத்தி கூறினாள்.

"தேப்பன் மாதிரி பிள்ளை எண்டால் உனக்கு ஏழரைச் சனி துடங்கி விட்டுது எண்டு தான் அர்த்தம்" என்று அவள் சின்னம்மா முதல் குண்டைப் போட்டாள்.

"எ.... என்ன சொல்லுறீங்க?" என பூரணி திடுக்கிட்டாள்.

"கேசவன்ரை தேப்பன் செல்லத்துரையரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?"

"பெரிசா ஒண்டும் தெரியாது."

"சரி நான் சொல்லுறன். அவருக்கு ஊரில நல்ல பெயர் இல்லையாம். கூடாத குணமாம். வாக்குக் குடுப்பாராம். ஆனால், நிறைவேற்றி வைக்க மாட்டாராம். ஒரு இடத்தில இருந்து கேசவனுக்கு கலியாணம் பேசி வந்துதாம். அவர் கேட்ட சீதனம், 'டொனேஷன்', நகை நட்டு எல்லாத்துக்கும் பொம்பளை வீட்டுக்காரர் 'ஓம்' எண்டு சொல்லி கலியாண நாளும் குறிச்சாச்சாம். ஆனால், கடைசி நேரத்தில சீதனம் காணாது எண்டு சொல்லி கலியாணத்தை நிப்பாட்டிப் போட்டாராம்."

பூரணிக்கு மூச்சு வெளிப்பட மறுத்தது.

"எதுக்கும் மனம் தளராதை. போய் மாப்பிள்ளை கேளு."

வீடு சென்ற பூரணி, சின்னம்மா கூறியதை மகளிடம் ஒப்புவிக்கவில்லை.

அவள் தனது மனதை அடுத்த இரு நாட்களும் கல்லாக்கி இருந்தாள். அந்த இரு நாட்களும் கேசவன் வரவில்லை.

பூரணி ஒரு முடிவுக்கு வந்தாள். கேசவனின் வீட்டுக்கு சாதகக் குறிப்புடன் தன் ஒன்று விட்ட சகோதரனுடன் சென்றாள்.

செல்லத்துரை மனிதனாகச் செயற்படவில்லை.

## (10)

கடற்கரையில் இருந்து வெளிப்பட்ட தணலான வெப்பம் பண்டாரவின் கண்களை எரித்தது. பல தடவைகள் கண்களை மூடித் திறந்தான்.

அமைதியாக – அலைகளின் இரைச்சல் இன்றி, நீச்சல் தடாகம் போல அமைந்திருந்த அந்தக் கடற்பிரதேசத்தைக் காலை வேளையில் ரசித்த

பண்டாரவினால், வெயில் உச்சிக்கு தாவிய போது ரசிக்க முடியவில்லை. கடற்கரையில் இருந்து வெப்பத்தின் தன்மை படிப்படியாக உயர்ந்தது. அவன் உடம்பும் எரிந்தது. உடல் அளவுக்கு மீறி வியர்த்தது.

அவனால் அங்கு மேலும் நிற்க முடியவில்லை. கடற்கரையை அண்டி இருந்த முகாமுக்குத் திரும்பினான். பிரியந்த கண்கள் சிவப்பேறிய நிலையில் மூன்று இராணுவ வீரர்களுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தான்.

பண்டார அங்கு வந்ததை அவர்கள் அவதானிக்கவில்லை. 'சிகரெட்' புகையை அநாயசமாக வெளியிட்டபடி சீட்டாட்டத்தில் தம்மை மறந்திருந்தனர்.

பிரியந்த விசில் அடித்தபடி ஒரு சிங்கள பாட்டை இசைத்தான். பின் பாடத் தொடங்கினான்.

உரத்த குரலில், சோகத்தையும் பிசைந்தபடி பிரியந்த பாட, பண்டாரவுக்கு மனதைச் சோகம் மிழிற்றியது. அவனுக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. முகாமில் இருந்து வெளியேறினான்.

முகாமுக்கு அருகில் ஒரு வீடு. ஒரு பக்கம் உடைந்த நிலையில் கிடந்தது. அந்த வீட்டைத்தான் பண்டார, பிரியந்த, கெமுனு உட்பட பத்து இராணுவ வீரர்களுக்கு தங்குவதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அவ் வீட்டிற்கு பண்டார சென்றான்.

முன் அறையில், பழைய காலத்து சாய்மனைக் கதிரை ஒன்று இருந்தது. அதில் அமர்ந்தான். கூரையைப் பார்த்தபடி நேரத்தைக் கடத்தினான்.

கிராமத்தில் உள்ள தாய், தங்கை, தம்பிமாரின் நினைவு அவனைத் தென்றலாக அரவணைத்துச் சென்றது. சோகத்தில் ஊறிய தாயின் முகம், உள்ளத்தில் இருந்து மறையத் தாமதமாகியது. 'மகன், மகன்' என்ற அவளின் குரல், அவன் செவிப்பறையில் மோதியபடி இருந்தது.

விஜிதாவின் நினைவு தலை நீட்டியது. அவளின் முகம் மனதில் படிந்த போது உள்ளத்தில் ஒரு தடுமாற்ற உணர்வு. நெஞ்சினுள் குளிரும் பிரவேசித்தது. இதயத்தின் 'படபடப்பு' விஞ்சியது. அது ஓர் அலாதியான – கற்பனையை மிஞ்சிய உணர்வினை தோற்றுவிக்க ..... அவன் அனுமதி இன்றி ஒரு புன்னகை பிறக்கின்றது.

"விஜிதா....." சற்று உரக்கவே அவள் பெயரை உரைக்கிறான்.

அதுக்குப் பதில் இல்லை. நிசப்தம் தொடர, அவனிடம் இருந்து பெருமூச்சொன்று வெளிப்படுகிறது.

விஜிதாவின் முகம் நெஞ்சில் இருந்து அழிய, அவனது கிராமத்துப் பன்சாலையின் பிரதம பிக்கு சுமணராம தேரரின் முகம் பதிகிறது. அவரது முகத்தில் கருணை நிறையவே பொழிவதை அவன் கண்டிருக்கிறான். அவர் மீது அவன் அதீத அன்பு செலுத்தினான். கௌரவம் அளித்தான். அவர் புத்திமதிகளைச் செவிமடுத்தான். அவரது பிரசங்கங்களைக் கேட்பதற்காக அடிக்கடி பன்சாலைக்கு சென்றான்.

கிராமத்தில் இருந்து புறப்படுவதற்கு முதல் நாள் பன்சாலைக்கு சென்று அவரது ஆசியையும் பெற்றான். அந் நேரத்தில் பன்சாலையில் வெளியார் ஒருவரும் இருக்கவில்லை. அரச மரத்தின் கீழ் இருந்த சிமெந்து வாங்கிலில் அவர் அமர்ந்திருக்க, கீழே நிலத்தில் பண்டார குந்தி இருந்தான்.

"தமிழர்கள் எமது விரோதிகள்; அவர்களை அழிக்க வேண்டும்; அப்பொழுது தான் இந் நாட்டில் சமாதானம் மலரும் என்று ஒரு தப்பான எண்ணம் இங்குள்ள மக்கள் மத்தியில் பரப்பப்படுகிறது. இராணுவ வீரர்களை அவ்வாறான ஒரு நிலைக்குத் தான் தயார் பண்ணுகிறார்கள். நீ தான் அந்தப் தப்பெண்ணத்தைக் களைவதற்கு முயற்சி செய்ய வேண்டும்." சுமணராம தேரர் அவனுக்கு உபதேசம் செய்கிறார்.

"நான் என்னென்று தனியனாக இந்த மகத்தான காரியத்தை நிறைவேற்றுவேன்?" பண்டாரவின் குரலில் தயக்கம் அடங்கியிருந்தது.

"உன்னால் எல்லா இராணுவ வீரர்களினதும் மனதை மாற்ற முடியாது. அப்படி செய்ய முயன்றால் அவர்களே உன்னைச் சுட்டு விடுவார்கள். மெல்ல, மெல்ல ஒரு சிலரின் மனதை மாற்றினால், அவர்கள் ஏனையோரின் மனதை மாற்றுவார்கள். இப்படியே ஒரு கணிசமான தொகையினர் மனம் மாறிவிடுவார்கள். இப்பொழுது இருக்கும் நிலையில் பெரும்பான்மையினர் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டால் தான் தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழலாம். அல்லது ஒற்றுமை என்ற பதத்தையே நாம் மறந்து விட வேண்டும்."

"மக்களின் மனம் மாறினால் அது ஒற்றுமைக்கு வழி வகுக்குமா?" புரியாத நிலையில் பண்டார கேட்டான்.

"ஆம், தமிழர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும்; அல்லது தீர்த்து வைக்கலாம் என்று தான் பெரும்பான்மையானோர் நினைக்கிறார்கள். என்னைப் பொறுத்தளவில் அவ்வளவு இலகுவில் தீர்க்க முடியாது. நீதி, நியாயம், நேர்மை, விட்டுக் கொடுத்தல் ஆகியவற்றைக் கடைப்பிடித்துத்தான் இனப் பிரச்சினையைத் தீர்க்கலாம். தமிழர்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்க வேண்டும். ஆனால், அந்த உரிமைகளை வழங்க சிங்களவர்கள் தயங்குவார்கள். அதனால், உரிமைகளை வழங்காவிட்டால் யுத்தம் தான் தொடரும்; நாட்டில் அபிவிருத்திக்கு இடமில்லை என்ற நிலை தான் ஏற்படும் என்று சொல்லி அவர்களது மனதை மாற்ற வேண்டும்."

பண்டார நகைத்தான். "சாது, உயர் மட்டத்தில் செய்ய வேண்டிய பொறுப்பை கீழ் மட்டத்தில் இருக்கும் என் மீது சுமத்துகிறீர்களே! அரசியல்வாதிகள் தான் இந் நாட்டில் ஒற்றுமையாக வாழ்ந்த சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் குரோத மனப்பான்மையை வளர்ப்பதற்கு காரணகர்த்தாக்களாக விளங்கினார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. என்றபடியால் அரசியல்வாதிகளைக் கொண்டு சிங்கள மக்களின் மனதை மாற்றினால் என்ன? பொது மேடைகளில் பேசக்கூட அவர்களுக்குத் தான் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. அவர்கள் பேசுவதைத் தான் மக்கள் வேதவாக்காக எண்ணுகிறார்கள். பொதுவாக ஆளும் கட்சி அரசியல்வாதிகளும் இக் கைங்கரியத்தில் ஈடுபட வேண்டும். இவ்வாறானவர்கள் மூலம் உங்கள் கருத்துக்களைப் பரப்பினால் என்ன?" தயக்கத்துடன், ஆனால் ஆணித்தரமாகத் தனது கருத்தை பண்டார வெளிப்படுத்தினான்.

சுமணராம தேரர் பிரமித்தார். ஆனால் , பிரமிப்பை வெளிப்படுத்தாமல், "நீ சொல்லுறதை நான் ஏற்றுக் கொள்கிறேன். எல்லா அரசியல்வாதிகளும் இன

ஒற்றுமையைக் குலைப்பவர்கள் அல்லர். சிலர் இன ஒற்றுமையை வளர்க்கப் பாடுபடுகிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் வேளைகளில் ஒற்றுமை பற்றி பேசுகிறார்கள். இராணுவ மட்டத்திலும் இன ஒற்றுமையை வலியுறுத்துகிறார்கள். நீ கீழ் மட்டத்தில் இருந்தாலும், ஏதோ வகையில் இன ஒற்றுமையை வளர்ப்பதற்கு பாடுபடலாம். நீ துப்பாக்கியை ஏந்தப் போறபடியால், நீ ஒற்றுமைக்கு எதிரானவன் அல்லன் என்பதை ஞாபகத்தில் வைத்திரு" என்றார்.

"சரி சாது."

"இன்னொன்றையும் நீ ஞாபகத்தில் வைத்திரு. இந் நாட்டில் அபிவிருத்தி இல்லை என்றால் எமக்கு உயர்ச்சி இல்லை. வெளிநாடுகளின் கடன்களையும், உதவு தொகைகளையும் ஒவ்வொரு நாளும் எதிர்பார்க்க முடியாது. நாடு போகிற போக்கைப் பார்த்தால் என்றோ ஒரு நாள் நாம் மூன்று வேளையும் மரவள்ளிக் கிழங்கும், தேங்காய்ப் பூ சம்பலும் தான் சாப்பிட வேண்டிய நிலை ஏற்படுமோ என அஞ்சுகிறேன்."

சுமணராம தேரரின் இவ் வார்த்தைகள் பண்டாரவின் காதுகளில் இரண்டு, மூன்று நாட்களாக அடிக்கடி எதிரொலித்தன.

இதைப்பற்றி நண்பன் சுனிலிடமும் பிரஸ்தாபித்திருந்தான்.

"தமிழர்களுக்கு இனியும் ஏன் உரிமைகளை வழங்க வேண்டும்? அவர்கள் தற்போது அனுபவிக்கும் உரிமைகள் போதும். அவர்களை விட தாழ்வான நிலையில் உள்ள முஸ்லிம்கள் உரிமைகள் போதாது என்று கூறி ஆயுதப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்களா? தமிழர்கள் தான் தாம் ஏதோ ஒரு புதுவகையான இனம் என்று நினைத்து, ஆயுதங்கள் மூலம் எங்களை விட அதிகமான அளவு உரிமைகளை அனுபவிக்க முற்படுகிறார்கள்" என சுனில் கத்தினான்.

பண்டாரவுக்கு உடனடியாக என்ன பதில் கூறுவது என்று தெரியவில்லை. மௌனமாக வார்த்தைகளை மனதுக்குள் அடுக்கினான்.

"சொல்லு நண்பனே.... " சுனில் அவசரப்படுத்தினான்.

"சுதந்திரத்திற்குப் பின்னர் அவர்கள் எல்லா விதத்திலும் அடக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது உரிமைகள் நசுக்கப்பட்டுள்ளன." பண்டார பொதுப்படையாகச் சொன்னான்.

"நீ எதை ஆதாரமாக வைத்து இப்படி சொல்கிறாய்? கல்வி, வேலைவாய்ப்பு விடயங்களில் அவர்களுக்கு அளவுக்கதிகமான இடம் ஒதுக்கப்பட்டது. ஒரு சிறிய வீதத்தைக் கொண்ட தமிழர்கள் சில அரசாங்க அலுவலகங்களில் பெரும்பான்மையாக விளங்கினார்கள். கல்வி விஷயத்திலும் அவர்களில் நிறையப் பேர் உயர் கல்விக்குத் தகுதியானார்கள். விகிதாசாரப்படி பார்த்தால் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் தமிழர்களின் எண்ணிக்கை அளவுக்கு மீறி விளங்கியது. பெரும்பான்மை மக்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் வேலை வாய்ப்பிலும், பல்கலைக்கழக அனுமதியிலும் ஒரு கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டது."

"இதன் மூலம் என்ன நிறைவேற்றப்பட்டுள்ளது? திறமைசாலிகளான, தகுதிபெற்ற தமிழர்கள் தொழில் ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் உதாசீனம் செய்யப்படுகிறார்கள். இது இரு துறைகள் சம்பந்தப்பட்ட சிக்கலான பிரச்சனை. மறுபுறத்தில் அரசாங்கத்தின் குடியேற்றத் திட்டங்கள். தமிழ்பகுதிகளில் சிங்கள

குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு தமிழர்களின் நிலம் பறிக்கப்பட்டுள்ளது. தமது நிலத்தில் இருந்து தமிழ் மக்கள் ஓடோட விரட்டப்பட்டிருக்கிறார்கள்."

"தமிழ் பகுதிகளா? அப்படி ஒரு பகுதியை அரசாங்கம் இதுவரை பிரகடனம் செய்யவில்லை. வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் கணிசமான அளவு வாழ்கிறார்கள் என்பது தான் உண்மை. அதற்காக வடக்கையும், கிழக்கையும் தமிழ்ப்பகுதி என்று கூறுவதா? வாடகை வீட்டில் இருபது, முப்பது வருடங்கள் ஒருவன் வாழ்ந்தால் அது அவனுக்கு உரிமையாகி விடுமா?"

பண்டார வாய்விட்டுச் சிரித்தான். "ஒரு வீட்டில் இருபது வருடங்கள் வாழ்ந்தால் அதைச் சொந்தமாக்கும் உரிமை அவனுக்கு இருக்கிறது. வயலை உழுபவனுக்கே அது சொந்தம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. எத்தனையோ நூற்றாண்டுகளாக தமிழர்கள் வாழும் ஒரு பிரதேசத்தை தமிழ்ப் பிரதேசம் என்று கூறுவதில் என்ன தவறு? அந்தப் பிரதேசம் தமக்கே உரியது எனத் தமிழர்கள் உரிமை கொண்டாடுவதில் என்ன தவறு?"

"பண்டார, முட்டாள் போலப் பேசாதே. ஒரு வீட்டில் பல காலமாக இருந்து, அது தனக்கே சொந்தமாக வேண்டும் என்று ஒருவன் வாதாடி, அது சரி என்றாலும், சட்டப்படி அது அவன் பெயருக்கு மாற்றப்பட்டால் தான் அது செல்லுபடியாகும். அதே போல, வடக்கு, கிழக்கு தமிழர்கள் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வாழ்வதனால், அது தமிழ்ப் பிரதேசம் என்று ஒத்துக்கொள்ளப்பட்டாலும், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அது இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை!" சுனில் நமுட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தான்.

"அது தமிழர்களின் கோரிக்கைகளில் ஒன்று. வடக்கையும், கிழக்கையும் தமிழர் தாயகமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்."

"வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்களுடன், சிங்களவர்களும், முஸ்லிம்களும் வாழ்கிறார்கள். அவர்கள் கதி என்ன? அம்பாறை மாவட்டத்தை அப்படியே கிழக்கு மாகாணத்தில் இருந்து எடுத்தாலும், சேருவிலை, வெலிஓயா, மூதூர் ஆகிய இடங்களை எப்படி பிரித்தெடுப்பது? அம்பாறை மாவட்டத்திற்குள் அடங்கும் தமிழ் பிரதேசங்களை என்ன செய்வது? இப்போது உள்ள நிலையில் தாயகக் கோட்பாடு, உரிமைகள் என்று பேசுவதைத் தவிர்த்து தமிழர்களை அடக்கி ஒடுக்கினால் தான் சிங்களவர்கள் நிம்மதியாக வாழலாம். வடக்கிலும், கிழக்கிலும் நிறைய சிங்களவர்களைக் குடியேற்றி, தமிழர்களை அங்கும் சிறுபான்மையாக்கினால் தான் தாயகக் கோட்பாடு என்ற எழுந்தமான கருத்துக்கள் சிதையும். இப்பொழுது யாழ். குடாநாடு முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால், பெருவாரியான சிங்களவர்களை அங்கு குடியேற்றலாம். காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பித்தால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம். இரண்டு, மூன்று பாடசாலைகளைச் சிங்களப் பாடசாலைகளாக மாற்றினால் எஞ்சியுள்ள தமிழ் மக்களுக்கு சிங்களத்தைப் போதித்து, அவர்களையும் சிங்களவர்களாக்கலாம். ஐம்பது வருடங்களில் இது முழுக்க முழுக்க சிங்கள நாடாக உருவாகி விடும்."

"உன் மனதில் இவ்வளவு வக்கிர, குரோத, துவேஷ எண்ணங்கள் படிந்துள்ளன என்று நான் நினைக்கவில்லை. தமிழர்களை அணைத்து,

அவர்களுடன் சேர்ந்து இந் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக எத்தனையோ பேர் இரத்தம் சிந்தும் போது....."

"அவர்கள் வீணாக இரத்தம் சிந்துகிறார்கள். பரந்த மனப்பான்மையுடன் இப் பிரச்சனையை அணுகினால் ஒரு நாளுமே தீர்வு கிட்டப் போவதில்லை. இராணுவ தீர்வின் மூலமே இனப் பிரச்சினையைத் தீர்க்கலாம். இன்னும் காலம் தாழ்த்தினால் 'யாரோ' சொன்னது போல் நாம் மரவள்ளிக் கிழங்கும், தேங்காய்ப் பூ சம்பலும் தான் மூன்று வேளையும் சாப்பிட வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவோம்."

இராணுவத்திற்குச் சேர்க்கப்பட்டு பயிற்சிக்காக மாத்தறைக்கு அனுப்பப்பட்ட போது, பிரியந்தவும் இந்த கருத்தைத் தான் 'கரடுமுரடாக' முன்வைத்தான்.

ஆனால், பண்டாரவின் மனதில் மாற்றம் ஏற்படவில்லை. சுமணராம தேரரின் கருத்துக்கள் அவன் அடிமனதில் இறுகி இருந்தன.

## (11)

தூரத்தில் துப்பாக்கி வேட்டு தீர்க்கப்படும் சத்தம் கேட்கவே, பூரணியின் நித்திரை குழம்பி விடுகிறது. கண் விழித்தவள், அறையினுள் பார்வையை ஓடவிடுகிறாள். நிலத்தில் – பாயின் மீது சசிகலா சுருண்டிருந்தாள். சட்டை அலங்கோலமாகக் கிடக்கிறது.

பூரணி எழுந்தாள். மகளின் சட்டையைச் சரி செய்ய முயல, "அம்மா, துவக்குச் சூட்டுச் சத்தம் கேட்குது போல" என சசிகலா அனுங்கினாள்.

"பருத்தித்துறை 'ரவுண்' பக்கம் இருந்து சத்தம் கேட்டுது போல..... "

"'ஆமிக்காரங்கள்' இஞ்ச வாறாங்களோ?"

"சா, 'ரவுணுக்குள்ளை' தான் இரண்டு பக்கத்தாரும் சண்டை பிடிக்கினம் போல......"

"பருத்தித்துறையில இருந்து பெடியளை துரத்திப் போட்டம் எண்டு நேத்தைக்கு இஞ்ச வந்த 'கப்டன்' சொன்னானே."

"துரத்தினாலும் பெடியள் திரும்பி வருவாங்கள் தானே? வடமராட்சிக்குள்ளை பெடியள் இன்னும் நிக்கிறாங்களாம். அவங்களை துரத்திறது அப்படி ஒண்டும் லேசான காரியம் இல்லை. நேத்தைக்கு இரண்டு பெடியள் வந்து 'நோட்டீஸ்' குடுத்திட்டு போனவங்களாம்."

"'நோட்டீஸ்'? என்ன எழுதி இருக்குதாம்?"

"காட்டிக் குடுப்போருக்கு மரண தண்டனை குடுப்பம் எண்டும், தங்கட குறிக்கோளில இருந்து இம்மியளவு மாற்றமில்லை எண்டும் எழுதியிருக்குதாம்."

"அப்ப இப்போதைக்கு இரண்டு பக்கத்தாரும் சண்டையை நிப்பாட்ட மாட்டினம் போல. இந்த நாட்டில சமாதானம் எண்ட ஒண்டு மலரப் போறதில்லை போலத் தெரியுது."

"உரிமையும் வேண்டாம், சலுகையும் வேண்டாம். எங்களை நிம்மதியாக இருக்கவிட்டால் போதும் எண்ட நிலைக்குத் தான் இப்ப இஞ்ச இருக்கிற ஆக்கள் வந்திருக்கினம்."

"நானும் அப்படித்தான் நினைக்கிறன்."

"சரி இதைப்பற்றி ஒருத்தரோடையும் பறையாதை. பேந்து வில்லங்கம் தான்."

சசிகலா பலமாக கொட்டாவி விட்டாள்.

"நீ படு..."

"நித்திரை வருதில்லை. அம்மா படுத்த நேரம் துடக்கம் எத்தனை தரம் முழிச்சிருப்பன்?"

"எனக்கும் உன்னைப் போலத்தான். எப்பத்தான் எங்கட வீட்டுக்கு போவம் எண்ட ஆசை எனக்குள்ள நிரம்பி விட்டுது. அது வழிய முந்தி இஞ்ச இருந்து போய் விட வேணும்."

"எங்களை எப்ப போக விடுவாங்களாம்?"

"இப்பதானே பருத்தித்துறையைப் பிடிச்சிருக்கிறாங்கள்? இன்னும் ஒரு மாசத்துக்குள்ள போக விடுவாங்கள் போலத் தெரியுது. அவசரப்பட்டு போகக் கூடாது. நிலைமையை அனுசரித்துப் போக வேணும்."

மீண்டும் சசிகலா கொட்டாவி விட்டாள்.

தாயும், மகளும் தமது சம்பாஷணையை இடை நிறுத்தினர்.

சொற்ப வினாடிகள் நகர, சசிகலாவின் கண்கள் செருகி விட்டன.

பூரணிக்கு தூக்கம் வரவில்லை. மகளைப் பார்த்தபடி கிடந்தாள்.

தமது சொந்த வீட்டில் எவ்வளவு சௌகரியமாகப் படுப்பவள், இன்று...... அவளை நினைக்கையில் பூரணியின் நெஞ்சில் ஈரம் சுரந்தது. சின்ன வயதில் தகப்பனை இழந்தாள். இப்பொழுது வீடு வாசலை இழந்த நிலையில், இங்கு கிடக்கிறாள். அவள் எதிர்கால வாழ்க்கையில் எத்தனை தடங்கல்கள்?

கேசவன்....

அவனை நினைக்கையில் பூரணிக்கு ஆத்திரமாக இருந்தது. சசிகலாவின் வாழ்க்கையில் கறையை ஏற்படுத்தி விட்டான். "அம்மா, இனி எனக்கு கலியாணம் இல்லை" என சசிகலா முடிவாகக் கூறுமளவுக்கு சம்பவங்கள் நடந்து விட்டன.

சசிகலாவின் சாதக ஓலையுடன் ஒன்று விட்ட அண்ணன் குமாரசாமியுடன் கேசவனின் வீட்டை அடைகிறாள் பூரணி.

செல்லத்துரை வெளியே வருகிறார். பூரணியையும், குமாரசாமியையும் ஒன்றாகக் காண, அவர்கள் வந்த நோக்கத்தை அவர் இலகுவாகக் கிரகித்து விடுகிறார்.

வீட்டின் 'ஹோலில்' அமர்ந்திருந்த கேசவன் மெல்ல நழுவி, படுக்கை அறைக்குள் தாவுவதைப் பூரணி கண்டு விடுகிறாள்.

விறாந்தையில் இருந்த நாற்காலிகளை விருந்தாளிகளுக்குக் காட்டிவிட்டு, விறாந்தைப் படிக்கட்டில் அவர்கள் இருவருக்கும் புறமுதுகு காட்டியபடி செல்லத்துரை அமர்ந்தார்.

குமாரசாமி இரண்டு, மூன்று முறைகள் தொண்டையைச் செருமியும், செல்லத்துரை ஏனென்று ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

"நாங்கள் வந்த விசயம்........" பொறுமை இழந்த நிலையில் குமாரசாமி இழுக்க, "தெரியும். கேசவனுக்கு வேறை இடத்திலை முற்றாகி விட்டுது" என்று 'பட்'டென்று வார்த்தைகளை வீசினார் செல்லத்துரை.

பூரணி அதிர்ந்து விட்டாள். அவள் முகம் வெளுறி விட்டது. "கேசவன், பிள்ளையை விரும்புறார், செல்லத்துரை அண்ணே....."

"அதுக்கு?"

"எண்டபடியால அவரை பிள்ளைக்கு கட்டி வைக்கிறது தான் நியாயம்." பக்குவமாக, ஆனால் உறுதியுடன் சொன்னாள் பூரணி.

செல்லத்துரை திரும்பி பூரணியை அச்சுறுத்துவது போலப் பார்த்தார். "நியாயம், அநியாயம் பற்றி எனக்குத் தெரியும்."

"அது தெரிஞ்சும்.... பிள்ளைக்கு அவர் வாக்கு குடுத்திட்டார். அவர் பிள்ளையை விரும்புறார். அதாவது 'லவ்' பண்ணுறார்."

மீண்டும் அச்சுறுத்துவது போல செல்லத்துரை பார்வையை மாற்றினார். "'லவ்'? கண்டறியாத 'லவ்'. 'லவ்' பண்ணினால் கலியாணம் கட்ட வேணும் எண்டு எங்கை எழுதி இருக்குது?"

பூரணிக்கு கோபம் உச்சந்தலைக்கு ஏறிவிட்டது. ஆனாலும், தனது உணர்ச்சியை அடக்கியபடி பேசினாள். "அது தான் உலக வழக்கு. 'லவ்' பண்ணினால் கட்டி வைக்க வேணும்."

"செல்லத்துரையரிட்டை 'லவ்' வுக்கு அர்த்தமில்லை."

"உங்களுக்கு இன்னும் இரண்டு பெடிச்சியள் இருக்குதுகள். அதுகளுக்கும் இந்த மாதிரி கதி ஏற்படும். அதை மட்டும் ஞாபகத்திலை வைச்சிருங்கோ." பூரணி குரலை உயர்த்தி விடுகிறாள்.

"அதுகள் இப்படி அடாவடித்தனமாக ஆர்ற்றையும் மனதைக் களவெடுக்காதுகள். நான் பார்த்து வைக்கிற பெடியளைத் தான் அதுகள் கட்டுங்கள். மூத்த பெடிச்சியள் அப்படித்தான் கட்டினதுகள்."

"சரி, உங்கட பெடிச்சியளை விடுவம். இப்ப என்ர பெடிச்சிக்கு ஒரு முடிவு சொல்லுங்கோ. இரண்டு பேரும் ஒருத்தரை ஒருவர் விரும்புறதால இரண்டு பேரையும் கட்டி வைக்கிறது தான் முறை."

செல்லத்துரை மறுமொழி சொல்லவில்லை. மௌனத்தில் லயித்திருந்தார்.

"சொல்லுங்கோ, செல்லத்துரை அண்ணே..."

"நான் வன்னியசிங்கம் ஆக்களுக்கு வாக்கு குடுத்திருக்கிறன். அதுகளுக்கு இப்ப என்ன சொல்லுறது? கலியாணத்திற்கு நாளும் குறிச்சாச்சுது. நாளண்டைக்கு கலியாணம்."

"நீங்கள் குடுத்த வாக்கை நிறைவேத்தி வைக்க துடிக்கிறியள். என்ர பிள்ளைக்கு கேசவன் குடுத்த வாக்கை நிறைவேத்தி வைக்க மறுக்கிறியள். இதென்ன நியாயம்?"

"இந்தக் காலத்தில எங்கை நியாயம் இருக்குது? அவனவன் தனக்கு வசதிப்பட்டதைத் தான் செய்யுறான்."

"அப்படி எண்டால் என்ர பெடிச்சியின்ர எதிர்காலத்துக்கு என்ன மறுமொழி சொல்லுறியள்?"

"மறுமொழியை சொல்லி விட்டன்."

"இரண்டு பேரும் 'லவ்' பண்ணுகினம்...."

"'லவ்' பண்ணினால் கட்ட வேணும் எண்டு எங்கையாவது எழுதி இருந்தால் எனக்கு காட்டுங்கோ. மேனை நாளைக்கே கட்டி வைக்கிறன்."

"டேய் செல்லத்துரை." பொறுமை இழந்தவராய் குமாரசாமி கர்ஜித்தார். "படு போக்கிரியான வேலையைச் செய்து போட்டு, குதர்க்கக் கதை கதைக்கிறியோ? பிள்ளையின்ர எதிர்காலத்தைப் பற்றி உன்ர மேன் தான் மறுமொழி சொல்ல வேணும். கூப்பிடு உன்ர பெடியனை. கேட்கிற மாதிரி கேட்கிறன்."

"குமாரசாமி, நீ ஆரோடை கதைக்கிறாய் எண்டதை நினைப்பில வைச்சிரு. உன்ர பேய் நியாயங்களைக் கொண்டு போய் குப்பையில போடு. நீங்கள் இரண்டு பேரும் இஞ்ச இருந்து போய்விடுங்கோ. மானம், மரியாதையோட இஞ்ச இருந்து போறது தான் உங்கள் இரண்டு பேருக்கும் உத்தமம்."

அப்படியே, நடந்தவற்றை சசிகலாவிடம் பூரணி ஒப்புவிக்க அவள் நாள் முழுவதும் அழுதாள், அரற்றினாள். பூரணி அவளை இயல்பு நிலைக்குக் கொண்டுவர பட்டபாடு......

"ஆம்பளையள் எல்லாம் கள்ளர்."

"கேசவனைக் கண்டன் எண்டால் சுடுவன்."

"அவன் ஒரு நாய்."

"அவன் நல்லா இருக்கமாட்டான்."

இவ்வாறெல்லாம் நாள் முழுவதும் சசிகலா கத்தினாள். சில வேளைகளில் சோகம் தாளாமல் தாயைக் கட்டி அணைத்து அரற்றினாள்.

கேசவன் திருமணம் செய்து விட்டு, சவூதிக்கு மீண்டும் சென்றான். அவன் திருமணத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவர்கள் போகவில்லை.

மூன்று மாதங்களின் பின் கேசவனின் தங்கைக்குத் திருமணம் அமர்க்களமாக நிறைவேறியது. ஆனால், ஒரு மாதத்திற்குள் அவள் கண்டல் காயங்களுடன் வீட்டுக்கு வந்தாள். அவள் பிரிந்து வந்ததிற்கான காரணம் பற்றி ஊரில் பலவாறாகக் 'குசுகுசு'த்தார்கள். ஒன்றுமே தெளிவில்லை.

"பார்த்தியளோ அம்மா, எனக்கு செய்த துரோகத்திற்கு கடவுள் நல்ல தண்டனை குடுத்திட்டார்" என்று ஒரு நாள் சசிகலா சொன்னாள்.

சசிகலாவின் மனம் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பியது. "சசி, இனியும் நடந்து முடிஞ்சதை நினைச்சு வாழ்க்கையை வீணாக்காதை. குமாரசாமி மாமா ஒரு நல்ல 'புரபோசல்' கொண்டு வந்திருக்கிறார்..........."

"வேண்டாம், என்னைத் தொந்தரவு செய்யாதேங்கோ. நான் உங்களுக்கு பாரம் எண்டு நினைச்சால் சொல்லுங்கோ . இயக்கத்திலை போய் சேர்றன்."

"எத்தனை நாளைக்கு இப்படி இருக்கப் போறாய்?"

"என்னிலை உண்மையான அன்பு வைக்கிற ஒருத்தர் வருமட்டும் நான் இப்படியே இருக்கிறன். அவன் சிங்களவனாக இருந்தாலும், அவனைத் தான் கட்டுவன்."

பூரணி வாயை மூடிவிட்டாள்.

மாதங்கள் மறைய நல்லதொரு சம்பந்தத்தை 'புரோக்கர்' ஒருவன் கொண்டு வந்தான்.

"சீதனம் வேண்டாமாம். 'டொனேஷன்' வேண்டாமாம். கொஞ்சம் வடிவும், 'இங்கிலிசும்' தெரிஞ்சால் போதுமாம். கட்டி ஒரு மாசத்துக்குள்ளை

கனடாவுக்கு கூட்டிக் கொண்டு போகலாமாம். மாப்பிள்ளை கனடாவில ராசா மாதிரி இருக்கிறாராம்."

அப்படியே அவன் வார்த்தைகளை மகளிடம் கொட்டினாள் பூரணி.

"உங்களுக்கு விருப்பமெண்டால் நீங்கள் அவனைக் கட்டுங்கோ."

பூரணி அழுது விட்டாள். இரண்டு வேளை சாப்பிடாமல், தனது அதிருப்தியைக் காட்டினாள். சசிகலா குறுக்கும், நெடுக்குமாக நடந்தாளே ஒழிய, மனதை மாற்றவில்லை. தாயின் மனதிற்கு ஒத்தடமும் கொடுக்கவில்லை.

"சீதனத்திற்காக, 'டொனேஷனுக்காக, ஸ்பொன்சர்ஷிப்'புக்காக தங்கட லட்சியங்களை, கொள்கையளை மாத்திற இந்த சமுதாயத்தில இருக்கிற மாப்பிள்ளையைக் கட்டுறது பாவம். அதை விட ஒரு சிங்களவனைக் கட்டலாம்."

இதன் பின் இந்த விவகாரத்திற்கு பூரணி மேலும் அழுத்தம் கொடுக்கவில்லை. மகளின் மனதில் என்றோ ஒரு நாள் மாற்றம் ஏற்படும் என அவள் நம்பிக்கை வைத்தாள்.

அந்த நம்பிக்கை நான்கு வருடங்கள் கடந்தும் நிறைவேறவில்லை. சசிகலா தனது தீர்மானத்தில் உறுதியாக இருந்தாள். இதனால் யாராவது கலியாணம் பேசி வந்தால், "சசி கலியாணம் முடிக்கிறதில்லை எண்டு தீர்மானித்திருக்கிறாள்" என்று மனதைக் கல்லாக்கிய நிலையில் – வார்த்தைகளுக்கு நகைச்சுவை முலாம் பூசியபடி, பூரணி சொல்லிவிடுவாள்.

ஆனால், அந்தத் தாயின் பாச உணர்ச்சி இளகவில்லை. அது அவளை அழுத்தியது. அவள் மனம் இதை எண்ணும் வேளைகளில் எல்லாம் குமைந்தது. தன் குறையை யாரிடம் பரிமாறி, மனப்பாரத்தை இறக்கி வைக்கலாம் என்று எண்ணி அழுதிருப்பாள்?

ஒருவரும் இல்லாத வேளை ராஜேஸ்வரி அந்த உண்மையைப் பூரணியிடம் இருந்து பக்குவமாய் பிடுங்கினாள். பூரணியும் எவ்வித ஒளிவு மறைவின்றி, சசிகலாவின் வாழ்க்கையில் மேடையேறிய சோக நாடகத்தை நுனிப்புல் நிலையில் வெளிப்படுத்தினாள்.

நான்கு வருடங்களாக மனதை அழுத்திய பாரம் பூரணியிடம் இருந்து சிறிது நேரத்திற்கு அகன்றிருந்தது.

## (12)

பருத்தித்துறையின் அந்தக் கிராமம் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

விடியற்காலை ஐந்து மணிக்கு நாய்கள் மாறி, மாறிக் குரைக்க, ராஜேஸ்வரி எழுந்து விட்டாள். விளக்கொன்றைப் பற்றவைத்து விட்டு, வெளியே பார்க்கிறாள். இருளில் ஒன்றுமே தென்படவில்லை. வீதி 'பளீச்'சென்று, ஆள் அரவம் இன்றிக் கிடக்கின்றது.

பூரணியும் எழுந்து வந்தாள்.

"நாய்கள் குரைக்குது. 'ஆமிக்காரங்கள்' நடமாடுறாங்கள் போல........"

"அப்படிப் போலத் தான் கிடக்குது. நேத்தைக்கு தும்பளை, கலட்டிப் பக்கம் 'செக்கிங்' செய்தவங்களாம்." ராஜேஸ்வரியின் முகத்தில் கலவரம்

சாடையாகத் தொற்றியது.

"பெடியளைப் பிடிச்சுக் கொண்டு போனவங்களோ.?"

"ஐஞ்சாறு பெடியளைப் பிடிச்சவங்களாம். என்ர மனுசன்ர தூரத்துச் சொந்தக்காரப் பெடியன் ஒண்டையும் பிடிச்சுக்கொண்டு போயிருக்கிறாங்களாம்."

"எங்கை கொண்டு போறாங்களாம்?"

"கொழும்புக்காம்."

நாய்கள் தொடர்ந்தும் குரைத்தன.

"இண்டைக்கு எங்கட பக்கம் 'செக்கிங்கோ' தெரிய இல்லை." பூரணி சந்தேகம் கிளப்ப, "இருக்கலாம். அப்படி எண்டால் பிள்ளையளை எழுப்பி, முகம் கழுவி, 'ஐடென்ரிக் கார்ட்'டை 'ரெடி'யாக வைக்கச் சொல்லுவமோ?" என வினவினாள் ராஜேஸ்வரி.

"ஓ, அது நல்லது. திருநீற்றையும் பூசச் சொல்லுங்கோ."

ராஜேஸ்வரி தனது அறைக்குச் சென்று நளினியையும், வசந்தியையும் எழுப்ப, சசிகலாவைப் பூரணி எழுப்பினாள்.

"இன்னும் விடிய இல்லத் தானே? ஏன் எழுப்பினனியள்?" என சசிகலா அனுங்க. "'ஆமி'க்காரங்கள் 'செக்கிங்' வரப் போறாங்கள் போல. ஒழும்பி வெளிக்கிட்டு நில்லு" என்று பூரணி சொன்னாள்.

"'ஆமியா'?" எனக் கேட்டவளின் முகத்தில் கலவரம் தத்தளித்தது.

"பயப்படாதை. சும்மா ஆக்களை பார்த்திட்டு போய்விடுவாங்கள்." பூரணி மகளுக்கு தெம்பூட்டினாள்.

" தொந்தரவு செய்ய மாட்டாங்களோ?"

" சா! இந்த முறை ஆக்களோட நல்லா நடக்கச் சொல்லி இருக்கிறதால தொந்தரவு செய்ய மாட்டாங்கள்."

சசிகலா எழுந்து, கிணற்றடியை நோக்கிச் சென்றாள்.

விடிந்து கொண்டு வந்தது.

சசிகலா ஜன்னலினூடாகப் பார்வையை வெளியே செலுத்துகிறாள். வீதியில் – சற்றுத் தூரத்தில் நாலைந்து இராணுவ வீரர்கள் குழுமி நிற்பது தெரிகிறது.

அவள் இதயத்தினுள் ஒரு சிறிய துடியாட்டம்.

ஜீப் ஒன்று வந்து நிற்கிறது. அதில் இருந்த 'கப்டன்' பொன்சேகா இறங்கினான்.

வீதியில் நின்ற இராணுவ வீரர்கள் அவனுக்கு 'சல்யூட்' அடித்தார்கள். அவன் அவர்களுடன் சொற்ப வினாடிகள் பேசி விட்டுச் சென்றான்.

இராணுவ வீரர்கள் மத்தியில் பண்டார, கெமுனு, பிரியந்த காணப்படுகின்றனர்.

சூரியன் எட்டிப் பார்க்க, அந்த நாலைந்து இராணுவ வீரர்களும் இவர்களது வீட்டை நோக்கி வந்தார்கள். ஒரு நாய் இராணுவ வீரர்களை முறைத்தபடி, விடாமல் குரைத்தது. பிரியந்த தனது துப்பாக்கியை நாயின் முகத்துக்கு குறி வைக்க, அது ஓடி விட்டது.

"அம்மா, 'ஆமிக்காரங்கள்' வாறாங்கள்...." சசிகலா 'பரபர'த்தாள்.

"பயப்படாதை...."

பூரணி அறையில் இருந்து வெளியேறினாள்.

சசிகலாவின் நெற்றி வியர்த்தது.

பண்டாரவும், பிரியந்தவும் உள்ளே வந்தார்கள். மற்றவர்கள் வெளியே நின்றார்கள்.

ராஜேஸ்வரி அச்சம் கலக்கப் புன்னகை புரிந்து, அடையாள அட்டையைப் பக்குவமாக நீட்டினாள். பண்டார புன்னகை புரிந்தானே தவிர, அடையாள அட்டையைப் பெறவில்லை. அவன் பார்வை உள்ளே பாய்ந்தது. பூரணி வெளியே வந்து புன்னகைத்தாள். அவளையும் பார்த்து பண்டார புன்னகைத்தான்.

பண்டாரவின் பார்வை சுழல, மெல்ல மெல்ல நளினியும், வசந்தியும் வெளியே வந்தனர். பண்டார அவர்களையும் பார்த்துப் புன்னகைத்தான்.

"நாங்கள் இலங்கை இராணுவம். உங்களைப் பார்க்க வந்தோம்." பண்டார சிங்களத்தில் சொன்னான்.

ஒருவரும் ஒன்றும் கூறவில்லை.

"உங்களை இரட்சிப்பதற்காக இங்கு வந்திருக்கிறோம். உங்கள் நலனுக்காக நாம் எமது உயிரையும் விடத் தயாராக இருக்கிறோம். என்றபடியால் நீங்கள் எங்களுக்கு உதவவேண்டும். தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் என்று நாம் எண்ணவில்லை." பண்டார தொடர, பிரியந்தவுக்கு எரிச்சலாக இருந்தது.

"காலையிலேயே விரிவுரையைத் தொடங்கி விட்டாயா? வந்த விஷயத்தை முடித்து விட்டு வெளியேறுவோம். இன்னும் எத்தனை வீடுகள் இருக்கின்றன?" பிரியந்த வார்த்தைகளை அவசரத்துடன் வெளியிட்டான்.

பண்டார ஒன்றும் கூறவில்லை.

"வீட்டில் இவ்வளவு பேரா இருக்கிறீர்கள்?" என அவன் ராஜேஸ்வரியிடம் கேட்க, "இல்லை. உள்ளே என் மகள் இருக்கிறாள்" என பூரணி சிங்களத்தில் சொன்னாள்.

பண்டார வியந்தான். "சிங்களம் தெரியும் போல. அப்படியென்றால் நாம் பேசுவது உங்களுக்குப் புரியும். பலருக்கும் நாங்கள் பேசுவது புரியவில்லை." அவன் அழகாகப் புன்னகைத்தான்.

பிரியந்த வீட்டினுள் புகமுற்பட, பண்டார அவன் கையைப் பிடித்தான்.

"நீ இங்கு நில். நான் போய் பார்த்து விட்டு வருகிறேன்" என்றபடி பண்டார உள்ளே சென்றான்.

'ஹோலைக் கடந்து சசிகலா இருந்த அறைக்குப் போனான். சசிகலா பதறிய உள்ளத்துடன், கட்டிலில் அமர்ந்திருந்தாள். பண்டாரவைக் கண்டவுடன் 'சடக்'கென்று எழுந்தாள்.

பண்டார கவர்ச்சியாகப் புன்னகைத்தான்.

சசிகலா புன்னகைக்க முயன்றும் தோற்றுவிட்டாள்.

"பேரென்ன?" பண்டார பக்குவமாகத் தமிழில் கேட்டான்.

"சசிகலா."

"எனக்கு பெயர் பண்டார. சிங்களம் தெரியுமா?"

"கொஞ்சம், கொஞ்சம் தெரியும்."

"கொஞ்சாம் , கொஞ்சாம்....." சிரித்தவன், அதன் பின் சிங்களத்தில்

அவளுடன் உரையாடினான். "நீங்கள் ஏன் வெளியில் வர இல்லை?"

"'ஆமி'க்காரர்கள் என்றால் எனக்குப் பயம், சேர்."

"'சேர்? என்னை அப்படி அழைக்காதீர்கள். பெயரைச் சொல்லி அழையுங்கள். சரியா?"

அவள் 'ஆகட்டும்' எனத் தலையாட்டினாள்.

"'ஆமி'க்காரர்களுக்கு பயப்படுகிறீர்களா? ஏன் ஏதும் கசப்பான அனுபவம் ஏற்பட்டதா?"

அவள் 'ஆம்' எனத் தலையசைத்து, "இந்திய 'ஆமி'க்காரன் ஒருவன் ஒருக்கால் என்னோடை சேஷ்டை விட்டான்" என்றாள்.

"நாங்கள் இலங்கை இராணுவம். அப்படிச் செய்ய மாட்டோம். அப்படிச் செய்வது பாவம் என்று, நாங்கள் நினைக்கிறோம்."

'நீங்கள் தான் அப்படி நினைக்கிறீர்கள். எல்லோரும் அப்படி அல்ல' என்று சொல்ல சசிகலா நினைத்தாள். ஆனால், அதனால் ஏற்படக்கூடிய அனுகூலமற்ற சூழ்நிலையை எதிர்கொள்ள அவள் தயாராக இருக்கவில்லை.

"உங்களுக்கு இதுவா ஊர்?"

"இல்லை. யாழ்ப்பாணம்."

"யாழ்ப்பாணத்தில் வீடு எங்கு இருக்கிறது?"

"நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அருகில்."

"ஓ! பிரசித்தம் பெற்ற நல்லூர் முருகன் கோவிலுக்கு அருகில் தான் வசிக்கிறீர்கள். மிகவும் பிரபலமான ஒரு கோவில். அந்தக் கோவிலை நான் ஒரு தடவையாவது தரிசிக்க வேண்டும். அதற்கு உங்கள் பையன்கள் என்னை உயிருடன் வைத்திருப்பார்களோ தெரியவில்லை." பண்டார சின்னதொரு சிரிப்பை வெளியேற்றினான்.

சசிகலா முதல் தடவையாகப் புன்னகைத்தாள்.

"வெளியில் நின்ற தடித்த பெண் உங்கள் அம்மாவா?"

'ஆம்' என சசிகலா தலையாட்டினாள்.

"அப்பா?"

"பத்து வருஷத்திற்கு முந்தி இறந்து விட்டார்."

"'ஆமி'க்காரர்கள் சுட்டாங்களா?"

"இல்லை. 'ஹாட் அட்டாக்' வந்து இறந்து விட்டார்."

"இவ்வளவு ஓர் அழகான மகளின் திருமணத்தைப் பார்க்காமல் உங்கள் தந்தை இறந்து விட்டார்." பண்டார புன்னகைத்தான். "குடும்பத்தில் நீங்கள் மட்டுமா?"

"ஓமோம்."

"ஏன் புலி இயக்கத்தில் சேரவில்லை?"

"அவசியம் இல்லை என்று நினைத்தேன்."

"அவசியம் வந்தால்...?"

"அதைப் பற்றி அந் நேரத்தில் முடிவு எடுப்பேன்."

"சிங்கள ஆட்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று நினைக்கிறீர்களா?"

"நாங்கள் எல்லோரும் அப்படித்தான் நினைக்கிறோம். ஆனால், அதற்கேற்ற சூழ்நிலை இல்லை."

பற்கள் தெரிய பண்டார சிரித்தான்.

பிரியந்த வந்தான். "ஓ! ஓர் அழகான பெண்! மான் குட்டி போலக் காட்சி அளிக்கிறாள்" என்றவன் விசில் அடித்தான்.

"போடா வெளியே." பண்டார கத்தினான்.

பிரியந்த கண்ணைச் சிமிட்டியபடி, "இந்த ஊரில் இப்படியான ஓர் அழகியை இன்று தான் கண்டேன்" என்றான். பின் அங்கிருந்து அகன்றான்.

"உங்களுக்கு எப்படி சிங்களம் தெரியும்?"

"அப்பா அனுராதபுரத்தில் ஐந்து வருடங்கள் வேலை செய்தார். நானும் அம்மாவும் அவருடன் தான் இருந்தோம். அக்கம், பக்கத்தில் இருந்தவர்களுடன் பழகினதால் சிங்களத்தைப் பேசக் கற்றுக் கொண்டேன்."

"எனக்கு கொஞ்சம் தமிழ் தெரியும். ஆனால், நீங்கள் சிங்களம் கதைப்பது போல் நான் தமிழ் கதைக்க மாட்டேன்."

சசிகலாவுக்கு இப்பொழுது பயம் அகன்று விட்டது. துணிவு பிறந்தது.

"நீங்கள் ஏன் இராணுவத்தில் சேர்ந்திருக்கிறீர்கள்?"

இப்படியான ஒரு கேள்வியை அவளிடம் இருந்து இவ்வளவு சீக்கிரத்தில் அவன் எதிர்பார்க்கவில்லை.

"ஒரு தொழில் செய்ய வேண்டும் என்பதற்காக இராணுவத்தில் சேர்ந்தேன்."

"வேறு தொழில் கிடைக்கவில்லையா?"

"இல்லை."

பண்டார போய் விட்டான்

மறு நாள் வசந்தியுடன் சசிகலா பருத்தித்துறை சந்தைக்கு மரக்கறி வாங்க சைக்கிளில் சென்றாள்.

விநாயக முதலியார் தெருவில் பண்டார எதிர்ப்பட்டான்.

சசிகலாவைக் கண்ட பண்டார கையைக் காட்டி அவளை நிறுத்தினான்.

"எங்கே போகிறீர்கள்?" சைக்கிள் 'ஹான்டிலில்' பிடித்தபடி பண்டார கேட்டான்.

"சந்தைக்கு."

"சைக்கிள் எல்லாம் ஓடத் தெரியும் போல."

"ஆறு வயதிலேயே கற்று விட்டேன்."

"இங்கு எல்லாப் பெண்களுமே சைக்கிள் ஓடுவார்கள் போல....."

"1990 ஆம் ஆண்டுக்குப் பிறகு சைக்கிள் தான் எல்லோருக்கும் பிரயாணம் செய்வதற்கு இருந்த ஒரே ஒரு வாகனம். சைக்கிள் என்ற ஒன்றைக் கண்டு பிடித்திருக்காவிட்டால் கற்கால யுகத்திற்கே நாம் சென்றிருப்போம். எங்கள் ஊரில் இருந்த அறுபது வயதுக் கிழவி ஒருத்தி சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டாள் என்றால் உங்கள் அரசாங்கத்தின் பொருளாதாரத் தடையின் தாற்பரியத்தை நான் விளக்க வேண்டுமா?"

"ஆ.... அப்படியா?" பண்டார வியக்க, "சரி வாறன்" என்றபடி சசிகலா 'பெடலை' மிதித்தாள்.

மரக்கறிகளை வாங்கிக் கொண்டு திரும்பி வர, பண்டார அதே இடத்தில் நின்றான். அவன் அருகில் வந்தவுடன், சசிகலா புன்னகைத்தாள்.

அவனும் புன்னகைத்தான். கண்களால் அவனுக்கு காட்டி விட்டு போய் விட்டாள்.

"நீர் ஏன் அந்த 'ஆமி'க்காரனோட கதைச்சனீர்?" வழியில் வசந்தி கேட்டாள்.

"கதைச்சால் என்னவாம்?"

"அவன் நாளைக்கு வீடு தேடி வருவான்."

வசந்தி சொன்னது போல இரு நாட்கள் கழிய, பண்டார 'சிவில்' உடையில் இவர்களது வீட்டுக்கு வந்தான்.

அந் நேரம் ராஜேஸ்வரி, வசந்தி, நளினி மூவரும் வெளியே சென்றிருந்தார்கள். பூரணி கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தாள்.

பண்டார 'சொக்கலேட் பக்கெட்' ஒன்றை சசிகலாவிடம் நீட்டினான்.

"எனக்கா?" அவள் வியப்புடன் கேட்டாள்.

"ஆம். இங்கு வந்த பின் இம் மாதிரியான 'சொக்கலேட்' உங்களுக்கு கிடைப்பதில்லை என்பதை அறிந்தேன். அதனால் இன்று எங்களுக்கு விநியோகித்த 'பக்கெட்'களில் எனக்குரியதை உங்களுக்கு கொண்டு வந்தேன்."

சசிகலா அவனை நன்றிப் பெருக்குடன் நோக்கி, "'தாங்ஸ்'. இந்த மாதிரியான 'சொக்கலேட்' என்றால் எனக்கு நல்ல விருப்பம். சின்ன வயதில் எவ்வளவு 'சொக்கலேட்' தின்றிருப்பேன்?"

பண்டார விழிகளை அங்கும், இங்கும் படர விட்டான். "ஒருவரும் இல்லைப் போல....."

"அம்மா மட்டும் தான் இருக்கிறார். அவர் குளிக்கிறார்."

பண்டார நாற்காலி ஒன்றில் அமர்ந்தான்.

" இங்கு வந்த பின் தமிழர்களின் கலாசாரம், பழக்கவழக்கம், பண்பாடு குறித்து நான் சிறிதளவு அறிந்து விட்டேன். பொதுவாக எங்கள் கலாசாரம், பழக்கவழக்கம், பண்பாடு உங்களுடையதுடன் பொருந்துகின்றன. ஆனால், இரு இனங்களும் ஒன்று சேர்ந்து வாழத் தான் தயங்குகின்றன. ஓர் இனத்தை இன்னோர் இனம் சந்தேகிக்கிறது. பொறாமை கொள்கிறது. தமிழர்களும், சிங்களவர்களும் ஒருவருடன் ஒருவர் நட்புறவை வளர்க்க என்ன முட்டுக்கட்டையாக விளங்குகிறது?"

"மொழி தான்."

"நீங்கள் சொல்வதன் அர்த்தம்....?"

"எனக்கு உங்கள் மொழியை சரிவரக் பேசக் கூடியதாக இருக்கிறது. அதனால் நாங்கள் இப்பொழுது சம்பாஷிக்கிறோம். எங்கள் கருத்துக்களைப் பரிமாறுகிறோம். அதாவது நான் உங்கள் மொழியைப் பேசும் வரை இருவருக்கும் பிரச்சனை இல்லை. ஆனால், என்று நான் எனது மொழியை மட்டும் பேசுகிறேனோ, அன்று தான் பிரச்சனை உருவாகிறது."

"உங்கள் கருத்துப்படி தமிழர் சிங்களத்தையும், சிங்களவர் தமிழையும் கற்க வேண்டுமா?"

"ஆம். அப்படித்தான் நான் நினைக்கிறேன். ஆனால், இவ்விடயத்தில் ஒன்றைக் கூற விரும்புகிறேன். தமிழர்கள் எப்படியும் சிங்களத்தைக் கற்று விடுவார்கள். ஆனால், சிங்களவர்கள் தமிழைக் கற்கத் தயங்குகிறார்கள்."

"தமிழ் இனத்தின் மீது வெறுப்பு இருப்பதனால் அவர்கள் தமிழைக் கற்காமல் விடுகிறார்கள். தமிழ் இனத்தை நேசிக்கும் போது அவர்களது

மொழியையும் கற்பார்கள். நான் இப்போது தமிழ் இனத்தை நேசிக்கிறேன். இனி மொழியை நேசிப்பேன். அதன் பின் தமிழ் மொழியைக் கற்பேன்."

சசிகலா விழுமிய உணர்ச்சியின் உச்சக் கட்டத்தை அடைந்தாள்.

## (13)

ஞாயிற்றுக்கிழமை காலைச் சாப்பாட்டை முடித்துவிட்டு, தமக்கென ஒதுக்கப்பட்ட வீட்டில் பண்டார ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான்.

பருத்தித்துறைக்கு வந்து இரு வாரங்களாகி விட்டன. இந்த பதினான்கு நாட்களும் எத்தனை வீடுகளுக்கு அவன் ஏனைய இராணுவ வீரர்களுடன் சோதனை செய்யச் சென்றிருப்பான்? பொதுவாக இராணுவத்தினரைக் கண்டு இளம் பெண்களும், ஆண்களும் எவ்வளவு பயந்தனர்? எல்லோரது கண்களும் மருண்டன. இராணுவத்தினர் தமது வீட்டை விட்டு வெளியேறும் வரை எவ்வளவு தயக்கத்தை முகங்களில் தக்க வைத்திருந்தனர்? இராணுவத்தினருக்கு எவ்வளவு மரியாதை வழங்கினார்கள்? எத்தனை பேர் அவர்களைச் 'சேர்' என விளித்திருப்பார்கள்?

"நீங்கள் எப்பொழுது வந்து எங்களை மீட்பீர்கள் என்று காத்திருந்தோம்" என ஒரு வயதானவர் துணிந்து சொன்னார்.

"பொருளாதாரத் தடையினால் நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா? ஒரு இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதற்காகப் பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்து மக்களைப் பட்டினிச் சாவுக்கு இட்டுச் செல்வதா?" ஒரு மூதாட்டி கேட்டாள்.

"ஆறு வருடங்களாக 'லைட்' இல்லாமல் இருக்கிறோம். இதன் பொருட்டு யாரும் குரல் எழுப்பி எங்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுத் தந்தார்களா?" இளைஞன் ஒருவன் ஆக்ரோஷமாகக் கேட்டான்.

"விமானக் குண்டு வீச்சினால் எத்தனை அப்பாவி மக்கள் இறந்திருப்பார்கள்? அவர்கள் இறந்தால் புலிகள் இயக்கத்தினர் என நாமம் இடப்படுகின்றது. இதே வேளை, தென்பகுதியில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டால், அதுக்கு பொறுப்பு யார் என்று அறிய முன்னரே புலிகள் இயக்கத்திற்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இறந்த சிங்கள மக்களின் படங்கள் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. அது பற்றிய செய்திகள் கொட்டை எழுத்துக்களில் வெளியிடப்படுகின்றன. வானொலியில், தொலைக்காட்சியில் செய்திகள் வெளியிடுகிறார்கள். ஈனத்தனமான, மிலேச்சத்தனமான, படுபயங்கரமான, காட்டுமிராண்டித்தனமான போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் பாவிக்கப்படுகின்றன. இதன் எதிரொலியாக – சிங்கள மக்களை ஆசுவாசப்படுத்துவதற்காக, தமிழ் கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தி பொது மக்களைக் கொன்று விட்டு, புலிகளைத் தான் கொன்றோம் என அறிக்கை விடுகிறார்கள். அது மட்டுமா? அப்பாவி தமிழ் மக்களை பெண்கள் உட்பட வகை தொகையின்றி கைது செய்து விளக்க மறியலில் அடைத்து வைக்கிறார்கள்." ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர், தனது கருத்துக்களைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தினார்.

"எத்தனை அப்பாவி மக்கள் முடமான நிலையில் வாழ்கிறார்கள்?

எத்தனை கர்ப்பிணிப் பெண்களுக்கு கருச்சிதைவுகள் ஏற்பட்டன? போஷாக்குணவு கிடைக்காதபடியினால் எத்தனை பிள்ளைகள் சித்த சுவாதீனமுற்றிருக்கிறார்கள்? வைத்தியசாலைகளில் உரிய மருந்துகள் இல்லாதபடியினால் எத்தனை பேர் இறந்திருப்பார்கள்?" என்று நிறைய கேள்விகளைத் தொடுத்தார் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர்.

"நாம் சமாதானத்தைத் தான் விரும்புகிறோம். சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழத்தான் விரும்புகிறோம். அதே வேளை, எமது உரிமைகளையும் அடைய விரும்புகிறோம். எமக்குரிய உரிமைகளை வழங்குவதில் ஏன் அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது?" ஓர் ஆசிரியை கேட்டார்.

"சிங்கள மக்கள் நல்லவர்கள். அவர்களில் நிறையப் பேர் தமிழர்களுடன் சேர்ந்து வாழத்தான் விரும்புகிறார்கள். ஆனால், சில இனத் துவேஷிகளால் அவர்கள் தமது ஆர்வத்தைத் தணித்திருக்கிறார்கள்..."

"கட்டாயக் குடியேற்றத்தை நிறுத்த வேண்டும். இனப் பிரச்சனை இவ்வளவு பூதாகாரமாக உருவாகியதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்...."

"விட்டுக் கொடுத்து வாழ எல்லோரும் பழக வேண்டும். இது எமது நாடு என்ற எண்ணம் உருவாக வேண்டும். ஒவ்வொரு இந்தியனும் இந்தியா தனது நாடு என்று எண்ணுவது போல், ஒவ்வொரு இலங்கையனும் இது எனது தாய்நாடு என்று எண்ண வேண்டும். அந்த எண்ணத்தை ஏற்படுத்துவது அரசாங்கத்திலும், சிங்கள மக்களிலும் தான் தங்கியுள்ளது."

"நாடு பிரிய வேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. ஆனால், சிங்கள மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை நாம் அனுபவிப்பதற்கு வழி வகுத்தால் அதுவே போதும்."

"வகை தொகையின்றி இளைஞர்களைக் கைது செய்வதனால் பயங்கரவாதப் பிரச்சனைகளை ஒழிக்கலாம் என்று எண்ணுவது மடமைத்தனம். அவ்வாறு கைது செய்யப்படும் இளைஞர்கள் விடுதலையாகும் போது இயக்கத்தில் தான் சேருவார்கள். அந்த அளவுக்கு அவர்கள் மனதில் குரோத எண்ணம் வளர்ந்துவிடும்."

இப்படி நிறைய கருத்துக்களை எதிர்ப்பட்டவர்கள் பலரும் பண்டாரவிடம் வெளியிட்டார்கள்.

"தமிழர்களின் அடிப்படைப் பிரச்சனை எனக்கு விளங்குகிறது." எதேச்சையாக பண்டார முதல் தடவையாக பிரியந்தவிடம் கூறியபோது, பிரியந்த அவன் மீது ஆத்திரமுற்றான்.

"நீ ஒரு பக்க நியாயத்தைக் கேட்டு விட்டு ஒரு அரைகுறை முடிவுக்கு வந்து விட்டாய். உன் மூளையை இங்குள்ள தமிழர்கள் சலவை செய்து விட்டார்கள். தமிழர்கள் தந்திரசாலிகள். ஏமாந்து விடாதே." பிரியந்த எச்சரிக்கை செய்தான்.

"இல்லை, நான் அவர்களை நம்புகிறேன். அவர்களின் உணர்ச்சிகளைப் புரிகிறேன். அவற்றை நாம் உதாசீனம் செய்யக்கூடாது. அவர்களை அரவணைத்து, செயல்பட்டால் தான் இந்த நாடு உருப்படும். இங்குள்ள தமிழர்கள் சமாதானத்துடன் வாழத்தான் விரும்புகிறார்கள்."

"அவர்கள் இப்பொழுது எமது கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதால் சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும், நாடு பிரியக்கூடாது என்று

சொல்கிறார்கள். புலிகள் இயக்கத்தின் அதிகாரத்தில் இருக்கும் போது தமிழ் ஈழம் வேண்டும் எனக் கோஷம் எழுப்பி இருப்பார்கள்."

"இது ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலையாகும். ஜே.வி.பி (மக்கள் விடுதலை முன்னணி) காலத்திலும் இதே நிலை தான் எமது பகுதியில் நிலவியது. அதற்காக சிங்கள மக்கள் யாவரும் ஜே.வி.பி ஆதரவாளர்களா? தமது தலையைப் பாதுகாப்பதற்காக நேரத்திற்கு ஏற்றபடி மக்கள் தமது உணர்ச்சிகளை மாற்றுவார்கள். ஆனால், உண்மையாகவே தென்பகுதி மக்களும் சரி, வட பகுதி மக்களும் சரி அடிப்படையில் சமாதானத்தைத் தான் விரும்புகிறார்கள்."

பிரியந்த ஒன்றும் கூறாமல் போய் விட்டான்.

பண்டார தமது வீட்டில் இருந்து வெளியேறினான்.

காற்று சற்று வேகத்துடன் வீசியது. பனைகள் 'சல சல'த்தன பனைகளை அண்ணாந்து பார்த்தபடி பண்டார நின்றான். மீண்டும் வீட்டுக்கு வந்தான்.

பிரியந்த வந்தான். தன்னுடன் ஒரு முட்டி கள்ளு கொண்டு வந்தான்.

"இன்று நான் வாழ்க்கையை அனுபவிக்கப் போகிறேன்." பிரியந்த 'சிகரெட்' ஒன்றைப் பற்ற வைத்தான்.

"யார் உனக்கு கள்ளு தந்தார்கள்?"

"கடற்கரைப் பக்கத்தில் எனக்குத் தெரிந்த ஒரு மீனவன் இருக்கிறான். அவனிடம் சொன்னேன். அவன் கொண்டு வந்து தந்தான்."

"பணம் கொடுத்தாயா?"

"இல்லை."

"ஏன்?"

"அவன் அதை வாங்க மறுத்துவிட்டான்."

"காரணம் என்ன?"

"நாம் அவனது விருந்தாளிகளாம். விருந்தாளிகளிடம் இருந்து பணத்தைப் பெறுவது தவறு என்று அவன் எண்ணுகிறான்."

"பார்த்தாயா? இங்குள்ள தமிழர்களின் உயர்வான பழக்கவழக்கத்தை? அவன் ஒரு சாதாரண மீனவன். அவனிடம் போதிய பணம் இருக்காது. ஆனாலும் எம்மை தமது விருந்தாளிகளாக நினைத்து எம்மைக் கௌரவிக்கின்றான்."

"அவன் விருந்தாளிகளாக நினைக்கவில்லை. என் மீது இருக்கும் பயத்தினால் கள்ளை இலவசமாகத் தருகிறான்."

கெமுனு, காமினி, ஆரியதாச, ரஞ்ஜித் ஆகிய இராணுவ வீரர்கள் வந்தார்கள்.

"சா! ஒரு முட்டி கள்ளு இருக்கிறது" என்ற காமினி அன்றைய சிங்கள வாரப் பத்திரிகையை பண்டாரவிடம் நீட்டினான்.

"ஆ....... பத்திரிகைகளும் கொழும்பில் இருந்து வந்திருக்கின்றன போல....." என்ற பண்டார பத்திரிகையின் முதல் பக்கத்தில் பார்வையை பதித்தான்.

"பண்டார, கள்ளு குடிப்பாயா?" ஆரியதாச கேட்டான்.

"அவன் குடிக்க மாட்டான். அவன் ஒரு போதிசத்தன். குடி, சிகரெட் இல்லை. ஆனால், பெண்கள் விஷயத்தில் கொஞ்சம் கோணல்." பிரியந்த

சொல்லிவிட்டு, பண்டாரவைச் சுவாரஷ்யத்துடன் பார்த்தான்.

"இல்லை. நான் எல்லா விஷயத்திலும் உத்தமன். பெண்களுடன் அந்நியோன்னியமாக பழகுவதில் என்ன தவறு?"

"இங்குள்ள தமிழ் பெண்கள் மீது பண்டார பிரியம் வைக்கிறான். சசிகலா என்ற ஓர் இளம் பெண்ணுக்கு 'சொக்கலேட்' கொடுக்கிறான்."

"அது மனிதாபிமானத்தால் நான் செய்யும் ஓர் உதவி. மற்றும்படி என் மனதில் ஒரு கெட்ட எண்ணமும் இல்லை. அவள் என் சகோதரி மாதிரி."

பிரியந்த அட்டகாசமாகச் சிரித்தான். மற்றவர்கள் சிரிக்கவில்லை. "சகோதரி? இப்படித்தான் விஜிதா பற்றி இப்போது சொல்கிறாய்."

"நான் அப்படிச் சொல்லவில்லை. விஜிதாவை நான் காதலித்தேன். அது கைகூடவில்லை. ஆனால், சசிகலாவை நான் காதலிக்கவில்லை."

"சரி, சரி நீ விரும்புவதைச் செய். மச்சான், நாங்கள் எங்கள் குடியைத் தொடருவோம்" என்ற ரஞ்ஜித் 'கிளாஸ்' ஒன்றைப் பிரியந்தவிடம் நீட்டினான்.

"சரி நீங்கள் குடியுங்கள். எனது வாழ்த்துக்கள்." பண்டார பத்திரிகையுடன் கடற்கரைக்கு மீண்டும் சென்றான்.

கடல் காற்று அவன் கேசங்களைத் தடவியபடி சென்றது.

கற்பாறை ஒன்றில் அமர்ந்தான். பத்திரிகையில் கவனத்தைப் பதித்தான். ஒவ்வொரு பக்கங்களாக வாசித்தவன், ஒரு பக்கத்தில் அச்சாகியிருந்த புகைப்படத்தைக் கண்டு திகைத்தான். அது விஜிதாவும், அவள் கணவனும் மணவறையில் எடுத்த படம். படம் விளம்பரமாக 'திருமணம்' என்ற தலைப்பின் கீழ் பிரசுரமாகி இருந்தது. படத்தின் இரு பக்கங்களிலும் மணமகனினதும், மணமகளினதும் பெயர்கள் வெளியாகி இருந்தன. மணமகனுக்குப் பெயர் செனிவிரத்ன.

பண்டாரவுக்கு சில வினாடிகள் மார்பு லேசாகப் 'படபட'த்தது. விஜிதா தன்னிடம் இருந்து விலகி, தூர போய் விட்டாள் என்ற உணர்வு அவனுள் உள்ளிட்டது. கண்களில் வேதனை படர்ந்தது. தொண்டையில் 'ஏதோ' சிக்கிக் கொண்ட மாதிரி.....

செனிவிரத்னவை இமை வெட்டாமல் பார்த்தபடி இருந்தான்.

அந்த துயரத்தை பண்டாரவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவன் தனது இருப்பிடத்திற்கு செல்கிறான். போதையில் பிரியந்த பாடுகிறான்.

ராகத்திற்கு ஏற்றபடி மற்றவர்கள் கை தட்டுகிறார்கள். பண்டாரவின் கண்களில் நீர்திரையிட்டது.

## (14)

நித்திரை வராமல் சசிகலா தவித்தாள்

பண்டார காலையில் வந்த போது கதைத்தவை யாவும் அவள் நெஞ்சில் சுழன்று, சுழன்று வந்தன.

காலை புலர்ந்து, சற்றைக்கெல்லாம் பண்டார வந்திருந்தான்.

அவனைக் கண்டு விறாந்தையைப் பெருக்கிக் கொண்டிருந்த வசந்தி ஆச்சரியமுற்றாள். 'இந்த நேரத்தில இவன் ஏன் இங்க வாறான்' என்று அவள்

மருள, "சசி நிக்கிறதா?" என பண்டார கேட்டான்.

"ஓமோம்" என்றபடி விரைந்து உள்ளே சென்ற வசந்தி, படுக்கையில் கிடந்த சசிகலாவிடம் பண்டார வந்திருக்கும் தகவலை வெளியிட்டாள்.

சசிகலா விறாந்தைக்கு வந்தாள். பண்டார வெளியே நின்றான். "வாங்க" என சசிகலா முகமலர்ச்சியுடன் வரவேற்றாள்.

"உங்கள் நித்திரையைக் குழப்பி விட்டேனா?" பண்டார தயவுடன் கேட்டபடி நாற்காலியில் அமர்ந்தான்.

"இல்லை. நான் எப்பொழுதோ எழுந்து விட்டேன். செய்வதற்கு ஒன்றுமே இல்லாததால் படுக்கையில் கிடந்தேன்."

"வானொலிச் செய்தி கேட்டீர்களா?"

"இல்லை. எங்களிடம் 'ரேடியோ' இல்லை."

பண்டார நகைச்சுவை மிளிர சிரித்தான். "'ரேடியோ' கூடவா இல்லை?"

சசிகலாவின் முகத்தில் ஒரு வாட்டம் தெரிந்தது. "நல்லதொரு 'ரேடியோ' இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் போது மறந்து விட்டுட்டு வந்தேன்."

"ஒரு 'ரேடியோ' தரட்டுமா?"

"நீங்கள்?"

"ஆம். என்னிடம் ஒரு சிறிய ரேடியோ மேலதிகமாக இருக்கிறது. தரட்டுமா?"

அவன் இப்படிக் கேட்டதும் சசிகலா தடுமாறிவிட்டாள். என்ன பதிலைக் கூறுவது? 'ரேடியோ' வேண்டும் என்று கேட்டால், தாய் அவள் மீது எரிந்து விழுவாள். ராஜேஸ்வரி ஏசக் கூடும். வசந்தியும், நளினியும் கேலி செய்யக்கூடும். வீணாக ஏன் வம்பை வாங்குவான்?

"வேண்டாம்" என்றாள்.

அவள் சொன்ன விதம் அவன் மனதுக்குத் திருப்தியாகப்படவில்லை. "உங்களுக்கு ஒரு 'ரேடியோ' அவசியப்படுகிறது. ஆனால், அதை என்னிடம் இருந்து பெறவிரும்பவில்லை. அப்படித்தானே?"

"அப்படித்தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன். உங்களிடம் நான் 'ரேடியோ' பெற்றால், அது பற்றி ஊர் முழுவதும் கதை பரவும். பின், ஆபத்தில் தான் இக் கதை முற்றுப் பெறும்."

"பயப்பட வேண்டாம். உங்களுக்கு ஏதாவது ஆபத்தும் வராமல் பாதுகாப்பது எனது கடமை."

"நீங்கள் இன்று இங்கு இருப்பீர்கள். நாளை எங்காவது போய் விடுவீர்கள். நாளைய தினத்தைப் பற்றித்தான் நான் யோசிக்கிறேன்."

"நீங்கள் மீண்டும் யாழ்ப்பாணம் போகும் வரை நான் இங்கு தான் இருப்பேன். என்னை இன்றிலிருந்து கொடிகாமத்திற்கு இடமாற்றினார்கள். ஆனால், எனக்கு இங்கு தான் இருக்க விருப்பம் என்று மேலதிகாரியிடம் சொல்லி, இடமாற்றத்தை ரத்துச் செய்து விட்டேன்."

இப்படி பண்டார சொன்னதும் சசிகலா நெகிழ்ந்து விட்டாள். சில வினாடிகள் அவளுக்குப் பேச்சு கிளம்பவில்லை.

"ஏன் இங்கிருந்து போக விருப்பமில்லையா?"

பண்டார கனிவாகச் சிரித்தான். "எமது முகாமின் முன் உள்ள

அமைதியான கடல், மெல்லென வீசும் காற்று, 'சலசல'க்கும் பனைகள், அன்புள்ளம் கொண்ட இவ்வூர் மக்கள்..... என்று பல மெல்லுணர்வுள்ள விடயங்களை விட்டுப் போக நான் விரும்பவில்லை."

"மக்கள் என்றால்........?"

"பொதுவாக மக்கள், குறிப்பாக நீங்கள்."

"என்னை விட்டுப் போக உங்களுக்கு ஏன் மனம் வரவில்லை?"

"காரணம் தெரியவில்லை."

அந்தக் காரணத்தைக் கேட்டு, அவனை அவள் வற்புறுத்தவில்லை.

"சரி, இன்று வானொலியில் என்ன செய்தி சொன்னார்கள்? பேச்சுவார்த்தை பற்றி ஏதாவது செய்தி சொன்னார்களா?"

பண்டார கபடமில்லாமல் சிரித்தான். "பேச்சுவார்த்தையா? அது ஒரு போதும் நடக்காது. குடாநாட்டைத் தற்போது கைப்பற்றி இருக்கும் அரசாங்கம் புலிகள் இயக்கத்தை அடக்கி, ஒடுக்கலாம் என்று நம்புகிறது. என்றபடியால் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு, சரண் அடைவது போல் வந்தால் தான் பேச்சுவார்த்தை நடத்தும். எமது இராணுவ வீரர்களும் வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் விரைவிலேயே தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விடலாம் என நம்புகிறார்கள். எனவே, தற்போதைய சூழ்நிலையில் ஆயுதங்களுடன் உள்ள புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பமாட்டார்கள்."

"தனிப்பட்ட ரீதியில் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"இராணுவத்திற்கு அரசாங்க ஆதரவு இருக்கிறது. இராணுவத்தில் நிறையப்பேர் இருக்கிறார்கள். அளவுக்கதிகமான போர் ஆயுதங்கள் உள்ளன. செயல்நோக்கம் கொண்ட இராணுவத்தினரும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் புலிகள் இயக்கத்தை முறியடிக்கக்கூடும். அப்படி நடந்தால் தமிழர் பாடு அதோ கதிதான். அவர்களுக்கு உரிமை வழங்கப்படாது. சலுகைகள் தான் கிடைக்கும். அதுவும் உரிமைகள் வழங்குவதைப் போலத்தான் சலுகை கிடைக்கும்."

"எங்களுக்கும் இது பற்றித் தெரியும்..... அது சரி, வானொலிச் செய்தியைச் சொல்லுங்களேன்."

"இலங்கையின் நேரத்தை நேற்றிரவு முதல் ஒரு மணித்தியாலத்தினால் அதிகரித்திருக்கிறார்கள்."

"பொய்!"

"இல்லை உண்மை."

"எங்களுக்கு ஒருவரும் சொல்லவில்லை."

"நேற்றிரவு செய்தியில் சொன்னார்கள். இன்று காலையிலும் சொன்னார்கள். உங்களிடம் தானே 'ரேடியோ' இல்லை? 'ரேடியோ' இருந்திருந்தால் செய்தியைக் கேட்டிருக்கலாம்."

"அந்தளவுக்கு நாங்கள் அதிர்ஷ்டசாலிகள் இல்லை."

"இனி காலையில் ஏழு மணிக்குத்தான் விடியும். மாலையில் ஏழு மணி வரை சூரிய வெளிச்சம் இருக்கும். நண்பகல் பன்னிரண்டு மணிக்கு சூரியன் உச்சியில் நிற்கமாட்டாது."

பூரணி விறாந்தைக்கு வந்தாள். பண்டாரவுடன் சசிகலா பேசிக்

கொண்டிருப்பதைக் கண்டவள், கண்களால் சைகை காட்டி மகளை உடனே உள்ளே போகச் சொன்னாள். இதை பண்டார அவதானிக்கவில்லை. சசிகலா எழுந்து உள்ளே சென்றாள்.

"எங்களை எப்பொழுது யாழ்ப்பாணத்திற்குப் போக அனுமதிக்கப் போகிறீர்கள்?" என பூரணி கேட்டாள்.

"மிக விரைவில். என்ன அவசரம்?"

"போக வேண்டும்."

பண்டார போய் விட்டான்.

மீண்டும் பத்து மணி போல் பண்டார வந்தான். சசிகலா விறாந்தையில் அமர்ந்திருந்தவாறு, கதைப் புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தாள்.

பண்டார 'பார்சல்' ஒன்றை சசிகலாவிடம் நீட்டினான்.

"என்ன இது?" என சசிகலா கேட்க, "ஒரு சின்ன 'பிரசென்ட்'. திறந்து பாருங்களேன்" என்று சொன்னவனின் முகத்தில் ஒரு பூரிப்பு நெளிந்து வளைந்தது.

சசிகலா 'பார்சலைப்' பிரித்தாள். உள்ளே ஒரு சிறிய 'ரேடியோ' இருந்தது. ஆவலுடன் அதைப் போட்டாள்.

"புத்தன், யேசு, காந்தி பிறந்தது
பூமியில் எதற்காக தோழா
ஏழைகள் நமக்காக....."

புன்னகைத்தபடியே பண்டார அங்கிருந்து அகல முற்பட்டான். "இதையும் கொண்டு போங்கள். எனக்கு வேண்டாம்" என்று 'ரேடியோவை' சசிகலா நீட்டினாள்.

"இது உங்களுக்குத் தான். எனது பரிசு. எனது அன்பின் அடையாளமாக இந்த சிறிய பரிசைத் தான் என்னால் தர முடிகிறது."

"ஆனால், இராணுவ வீரனின் அன்பை ஏற்றுக் கொள்ளும் நிலையில் நான் இல்லை."

பண்டார திகைத்து விட்டான். "இராணுவ வீரனுக்கு அன்பு செலுத்துவதற்கு உரிமை இல்லையா? இராணுவ வீரனுக்கும் இதயம் இருக்கிறது. அவன் இயந்திரம் அல்ல. உணர்ச்சிகள் நிறைந்தவன்."

"நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். நாங்கள் இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் இராணுவ வீரர்கள் எல்லோரையும் எமது எதிரிகளாகக் கருத வேண்டியுள்ளது. ஆதலினால், எதிரியின் அன்பை, அன்பளிப்பை நாம் எதிர்பார்ப்பதில்லை. ஏற்றுக் கொள்வதுமில்லை."

சசிகலா இப்படிக் கூறியதும் பண்டாரவின் முகத்தில் தொற்றி இருந்த களை அகன்றது. சில விநாடிகள் அவளை வைத்த விழி வாங்காமல் பார்த்தபடி நின்றான். பின், "பரவாயில்லை. நீங்களே வைத்திருங்கள்" என்று கூறியபடி அங்கிருந்து அகன்றான்.

இரவு படுக்கையில் கிடந்த போது, பண்டாரவின் நினைவு தான் சசிகலாவின் மனதை ஆக்கிரமித்திருந்தது.

'இராணுவ வீரனுக்கு அன்பு செலுத்துவதற்கு உரிமை இல்லையா' என்ற அவனது வார்த்தைகள், அவள் மனதை அடிக்கடி வலம் வந்தன.

அவனது அந்தக் கூற்றின் அர்த்தம் என்ன? அவன் எவ்வகையான அன்பைத் தன்மீது செலுத்துகிறான் என்பதை அவள் அலசினாள். அந்த அன்பில் நட்பா, பாசமா, காதலா கலந்திருக்கிறது என்பதை அறிவதற்கு பிரயத்தனம் எடுத்தாள். நீண்ட நேரம் ஆராய்ந்த போதும் அவன் அன்புக்கு அர்த்தம் என்ன என்று அவளால் துலாம்பரமாக அறியமுடியவில்லை. முரண்பட்ட கருத்துக்களே அவளை நெருங்கின.

அவள் யோசனையை அறுத்துவிட்டு, படுத்துவிட்டாள். ஆனால், பண்டாரவை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு அவள் நெஞ்சில் மோதியபடியே கிடந்தது.

அவள் துடிப்பு காலையில் அடங்கிவிட்டது. பண்டார அவளைத் தேடி வந்தான். அவனைக் கண்டவுடன் அவளுள் 'சுறுசுறுப்பு' புகுந்து விடுகிறது. மகிழ்ச்சியுடன் அவனை வரவேற்கிறாள். இருவரும் சாவகாசமாக அமர்ந்து அளவளாவினார்கள். அவர்கள் பேச்சில் அரசியல் இல்லை. பொது விஷயங்கள் இல்லை. தமது பள்ளி நாட்களில் இடம்பெற்ற – மறக்க முடியாத சம்பவங்களை நுனிப்புல் நிலையில் இருவரும் பரிமாறினார்கள். தமது எதிர்காலக் கனவுகளை, எதிர்பார்ப்புகளை மனம் திறந்து வெளியிட்டார்கள்.

பண்டார போன பின் தன் உள்ளத்தினுள் ஒரு வெற்றுணர்வு புகுந்துவிட்டது போன்று அவளுக்குத் தோன்றியது. அவள் செயல்களில் சோம்பல் தனம் ஒட்டியது. ஒவ்வொரு காரியத்தையும் அசிரத்தையுடன் நிறைவேற்றினாள். பண்டாரவின் முகம் தான் நெஞ்சில் அலைமோதியபடி இருந்தது. அவள் சிந்தனையை பண்டாரவே நிறைய சுவீகரித்திருந்தான்.

இரு நாட்கள் கழிய பண்டார வந்தான். அன்று சசிகலாவின் பிறந்த தினம். ராஜேஸ்வரியும், பூரணியும் வடை, 'கேக்', சுசியம் என்று தின்பண்டங்களைத் தயாரித்திருந்தார்கள்.

பண்டாரவிடம் அவற்றைச் சசிகலா நீட்டினாள். பூரணிக்கு இதில் விருப்பமில்லை என்ற போதிலும், சசிகலா அவள் கட்டளையை மீறிவிட்டாள்.

"இன்று என்ன விசேஷம்?" பண்டார ஆச்சரியத்துடன் கேட்டான்.

"எனது பிறந்த தினம்."

"ஓ! அப்படியா?" அவன் கண்களில் மலர்ச்சி. "எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்."

"நன்றி" என்கிறாள் அவள்.

உடனே அவன் எழுந்தான். அங்கிருந்து வெளியேறினான். "எங்கே போகிறீர்கள்?" அவள் கேட்டு வாயை மூட முன், அவன் வீட்டை விட்டு வெளியேறி விடுகிறான். அவளுக்கு ஆச்சரியம்! ஏன் வீட்டை விட்டு விரைகிறான் என்று அவளுக்குப் புரியவில்லை.

அரை மணித்தியாலத்திற்குள் அவன் திரும்பி வந்து விடுகிறான். அவளிடம் சிறியதொரு 'பார்சலை' நீட்டுகிறான்.

"இது என்ன?" அவள் குழம்பி விடுகிறாள்.

"இந்த பண்டாரவின் சிறியதொரு அன்பளிப்பு."

"எனக்கா?"

"ஆமாம்."

அவள் ஆவலுடன் 'பார்சலைத்' திறந்து பார்க்கிறாள். சேலை ஒன்று

கண்களைப் பறிக்கின்றது.

அவள் முகத்தில் தவழ்ந்த மகிழ்ச்சியை கருமை ஒன்று அணைத்து, துன்பத்தின் சாயலை பரப்பிவிடுகின்றது. அவனை அவள் பரிதாபத்துடன் நோக்க, அவன் கண்களில் மகிழ்ச்சி தவிக்கிறது.

"இந்த சேலைக்கு நீங்கள் எவ்வளவு செலவழித்தீர்கள்?" அவள் கேட்கிறாள்.

"இது எனது பிறந்த தினப் பரிசு. நீங்கள் இதன் விலையைக் கேட்பது தவறு."

சசிகலா சேலையை நன்கு புரட்டிப் பார்க்கிறாள். "இது எப்படியும் ஆயிரம் ரூபாவாவது வரும். ஏன் இப்படி ஒரு பரிசை வாங்கி எனக்குத் தருகிறீர்கள்?"

"இன்று உங்கள் பிறந்த தினம்......"

"அதற்கு?"

"பரிசாகத் தந்தேன். அவ்வளவு தான்."

"உங்கள் சம்பளத்தில் ஐந்தில் ஒரு பகுதியை இந்தச் சேலைக்காக செலவழித்ததன் அர்த்தம் என்ன?"

"அன்பு தான்."

"அன்பு?"

"ஆம்."

"ஆனால்......"

"நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். தயவு செய்து இராணுவ வீரனின் அன்பை உதாசீனம் செய்யாதீர்கள்."

அவன் சென்று விடுகிறான்.

அவள் மனம் குழம்பி விடுகிறது. 'ரேடியோ'வை நீட்டிய போதும், அன்பின் நிமித்தமே அதை தருவதாகச் சொல்லி இருந்தான். இப்போதும் அதே கருத்தைத் தான் வெளிப்படுத்துகிறான். இந்த அன்புக்கு அர்த்தம் என்ன?

தூரத்தில் நின்றவாறு அவன் கை காட்ட, அவளும் காட்டுகிறாள்.

இதை எல்லாம் கவனித்தபடி இருந்த ராஜேஸ்வரி விறாந்தைக்கு வந்தாள்.

"பிள்ளை சசி, உம்மோட ஒரு விசயம் கதைக்க வேணும். ஊருக்குள்ள ஆக்கள் எல்லாம் ,'குசு, குசு' எண்டு உம்மை பற்றித்தான் கதைக்கினம். அந்த 'ஆமி'க்காரன் இஞ்ச வந்து போறதைப் பற்றிச் சொல்லி காறித்துப்புதுகள்".

"ஓம் அம்மா. என்ர 'ஃபிரெண்ட்ஸும்' இதைப் பற்றி கதைச்சு சிரிச்சவையள்." நளினி ஒத்துப் பாடினாள்.

"இந்தப் பிள்ளைக்கு எவ்வளவு தான் புத்திமதி சொல்லியும் ஒண்டும் விளங்குது இல்லை." பூரணி அழுவாரப் போலக் கூறினாள்.

"நான் பண்டாரவோட கதைக்கிறதில என்ன பிழை? அவர் மனுசன். மிருகம் இல்லை. அவரில மனிசத்தன்மை இருக்குது."

"அது எங்களுக்கும் தெரியும். ஆனால், இது இஞ்ச இருக்கிற எல்லாருக்கும் தெரியாது. ஊரோட ஒத்துப்போக வேணும் எண்டு ஒரு பழமொழி இருக்குது. அதுக்கு ஏத்த மாதிரி நாங்கள் ஒத்துப் போனால் சரி. " ராஜேஸ்வரி பொதுவாகச் சொன்னாள்.

"'அன்ரி' சொல்லுறது கேட்டுதோ? இனி அவன் வரக்கிள்ளை நீ

வெளியில வந்தியோ, தெரியும்." பூரணி மகளை அச்சுறுத்துவது போலப் பார்த்தாள்.

"நீங்கள் எல்லோரும் எப்பத்தான் குறுகிய மனப்பான்மையை விடப் போறியளோ தெரிய இல்லை." சசிகலா அங்கிருந்து அகன்றாள்.

தாய் அவளைத் தொடர்ந்தாள்.

"நாங்கள் சொல்லுறது எல்லாம் உனக்கு விளங்குது தானே?"

"விளங்குது, விளங்குது." சசிகலா கத்தினாள்.

அவள் மனதில் விகாரமான எண்ணமொன்று உருவாக முற்பட்டது.

பண்டாரவை மீண்டும் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் அவளுள் பெருகியது.

## (15)

கண்கள் கலங்கின. அவற்றைத் துடைப்பதற்காக கைக்குட்டையை எடுக்க முற்பட, கையில் இருந்த பத்திரிகையை திடீரென வெளிப்பட்ட காற்று அள்ளிக் கொண்டு போனது. அதை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் எதுவும் இன்றி, உணர்ச்சி மரத்த நிலையில் தொலை தூரத்தில் பார்வையை படரவிட்டபடி பண்டார கற்பாறையில் அமர்ந்திருந்தான்.

விஜிதாவை நினைக்கையில் அவன் உள்ளம்அழுது வடிந்தது. எப்படி வாழவேண்டியவள்............!

" பண்டார அண்ணா, பண்டார அண்ணா" என்று வளைய வருபவள் இன்று............!

நிழல் உருவம் ஒன்று அவன் முன்னால் இருந்த நிலத்தில் படர, திரும்பிப் பார்க்க.......... சசிகலா நிற்கிறாள்.

பண்டார திகைத்து விட்டான். அந்நேரத்தில் அங்கு அவளை அவன் எதிர்பார்க்கவில்லை. சடாரென எழுந்து விட்டான்.

சசிகலா மலர்ச்சியுடன், அவன் உள்ளத்தைச் சுண்டும் விதத்தில் புன்னகைத்தாள். பண்டாரவினால் புன்னகையை வரவழைக்க முடியவில்லை.

"உங்களைச் சந்திக்க வந்தேன். முகாமில் இருந்தவர்கள் நீங்கள் இங்கே இருப்பதாகச் சொல்ல, இங்கு வந்தேன்."

அந்த உண்மை அவன் மனதைச் சுட்டது. "ஏன் என்னைத் தேடிவந்தீர்கள்?"

"கதைக்கத்தான்."

"அதுக்காக என்னைத் தேடி வருவதா? இங்குள்ள நிலைமை தெரியாமல்."

"அந்த நிலைமை பற்றித் தெரியும். அதையிட்டு பயந்தேன். ஆனால், இனியும் பயப்படும் நிலையில் நான் இல்லை. அதற்கான தைரியத்தை வரவழைத்து விட்டேன். "

"நீங்கள் ஊருக்குப் பயந்து வாழவேண்டும். நீங்கள் ஒரு கன்னிப் பெண். அதுவும் ஒரு தமிழ்ப் பெண். உங்கள் ஒழுக்கத்துக்கு மாசு கற்பிக்கப்படலாம். உங்கள் பாரம்பரியம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை வீணாக ஏன் மீறுகிறீர்கள் ?"

"ஒழுக்கத்தை நான் பேணுகிறேன். ஆனால், பாரம்பரியம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை மீறும் நிலைக்கு வந்துவிட்டேன்."

"அது தவறு. உங்கள் தவறான எண்ணத்தைக் களைந்து விடுங்கள். உங்கள் இனத்தினர் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும், பழக்கவழக்கங்களையும் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் பின்பற்றுகிறார்கள். காலாதி காலமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றவற்றை உதாசீனம் செய்யாதீர்கள்."

பண்டார புத்தி சொல்ல, அவனுடன் நிறைய மனம் விட்டுப் பேச வந்த சசிகலா திரும்பி வீடு சென்றாள்.

பண்டார அசையவில்லை. மீண்டும் கற்பாறையில் அமர்ந்தான். அவன் மனதினுள் விஜிதாவின் எண்ணம்தான் மீண்டும், மீண்டும் 'பளிச்'சிட்டது.

'விஜிதா........' அவனிடம் இருந்து பெருமூச்சொன்று வெளிக்கிளம்பியது.

அவள் இறந்துவிட்டாள். அந்தச் செய்தி பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது.

ஒரு வாரத்தின் முன் பத்திரிகையில் வெளிவந்த அவளது திருமணப் படமும் செய்தியில் நுழைக்கப்பட்டிருந்தது.

"கணவனுடன் ஏற்பட்ட தகராறினால் இளம் பெண் தற்கொலை" என்று செய்தியின் தலைப்பு இருந்தது.

செனிவிரத்ன ஒரு சந்தேகப் பேர்வழியாம். தனது மனைவிக்கும், பக்கத்து வீட்டில் இருந்த வாலிபனுக்கும் இடையில் தொடர்பு இருந்ததாக அவன் குற்றஞ்சாட்டிய பொழுதெல்லாம், அவள் அதை மறுதலித்திருக்கிறாள்.

சம்பவ தினத்தன்று நன்கு குடித்து விட்டு வந்த செனிவிரத்ன மனைவியுடன் வாக்குவாதப்பட்டிருக்கிறான். இதன் உச்சக் கட்டத்தின் போது, அவளை அவன் நையப்புடைத்திருக்கிறான். இதனால் மனமுடைந்த அவள் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துவிட்டாள்.

செய்தியில் குறிப்பிட்டிருந்த வாலிபன் அவன் தான். அவனுடன் எவ்வளவு கண்ணியத்துடன் நடந்தும், அவள் கணவன் அதைச் சந்தேகித்துவிட்டானே ! அவளைக் காதலித்த விடயத்தை பண்டார மனதுக்குள் போட்டு மூழ்கடித்த போதும், அது எவ்வாறு வெளிப்பட்டது? அவளுடன் அளவளாவுவதைக் கண்ட சிலர் தான் செனிவிரத்னவின் மனதில் சந்தேகத் தீயை வளர்த்திருக்கிறார்கள்.

விஜிதா இவ்வளவு இளகிய மனம்படைத்தவள் என்று பண்டார எதிர்பார்த்திருக்கவில்லை. எதையும் சமாளிக்கக்கூடிய பக்குவம் அவளிடம் பதுங்கி இருக்கிறது என்றே அவன் எண்ணியிருந்தான். ஆனால், உயிரைத் துச்சமென மதித்து, தன் வாழ்க்கைக்கு அரைகுறையாக முற்றுப்புள்ளியிட்டு விட்டாளே!

பண்டாரவுக்குத் தன் மீது ஆத்திரம் வந்தது. ஓர் ஊமைக் காதலை மனதினுள் வளர்த்து அதில்மாளிகை கட்டி, அவளை அதில் இணைக்க அவன் முற்பட, அவள் ஒரு சந்திப்பில் அந்த மாளிகையை தவிடு பொடியாக்கிவிட்டாள். அந்தளவில் அவளுக்கும், அவனுக்கும் இடையில் விளங்கிய அந்நியோன்யம் கழன்று விட்டது. ஆனால், அதன் அடிவேர் சாகவில்லை. அது மீண்டும் முளைத்து, அவள் வாழ்க்கையைப் பறித்தெடுத்து விட்டது.

பண்டாரவுக்கு மீண்டும் கண்கலங்கியது. அவனால் வேதனையை

அடக்க முடியவில்லை. குலுங்கிக் குலுங்கி அழுதான்.

கடலுக்குள் பாய்ந்து உயிரை விடவேண்டும் என்ற ஆவேசம் அவனுள் கிளர்ந்தெழுகின்றது. ஆனால், அவனது தாயின், தங்கையின், தம்பிமாரின் முகங்கள் மனதில் நிழலாட, அவன் ஆவேசம் தணிகின்றது.

தன் நெஞ்சைக் கைகளினால் பலமுறை குத்துகிறான். நெஞ்சு வலிக்கின்றது. செயலைக் கைவிடுகிறான்.

கடலை நோக்கி ஓடுகிறான். 'சடா'ரென நிற்கிறான். நிலத்தில் குந்துகிறான். எழும்புகிறான். ஓடுகிறான். நிற்கிறான். பின் பாறைக்கு வருகிறான். அமர்கிறான். தலைமயிரை கைவிரல்களால் குழப்புகிறான்.

கெமுனு வந்தான். "நண்பா, உனக்கு வாசிக்கப் பத்திரிகை தந்தால் அதை எறிந்து விட்டு வந்திருக்கிறாய். உனக்கு என்ன பைத்தியமா?"

அப்பொழுதே தன் கையில் இருந்து காற்றுடன் கலந்த பத்திரிகையின் நினைப்பு பண்டாரவுக்குள் புகுந்தது. "ஓ! நண்பனே, என்னை மன்னித்துவிடு. நான் அந்தப் பத்திரிகையைத் தவற விட்டுட்டேன்" என்றவனின் கண்கள் கலங்கின.

"பண்டார, ஏன் அழுகிறாய்?"

"விஜிதா செத்து விட்டாளடா............ " என்ற பண்டார விசித்து விசித்து அழுதான்.

கெமுனுவுக்கு என்னவோ போலாகிவிட்டது. "அழாதே பண்டார" என்று அவனைத் தேற்றினான்.

"எனது ஒரு தலைக் காதல், அவளது வாழ்க்கைக்கு சாவுமணி அடிக்கும் என்று நான் நினைக்கவில்லை. செனிவிரத்னவைக் கலியாணம் செய்த பின் அவள் சீரும் சிறப்புமாக வாழ்க்கையை மேற்கொள்வாள் என்று எண்ணினேன். ஆனால்,......" பண்டாரவினால் தொடர்ந்தும் பேசமுடியவில்லை.

"எல்லாம் விதி பண்டார ......"

பிரியந்த நெஞ்சை நிமிர்த்தியபடி வந்தான். பண்டார சிறு பிள்ளைபோல் அழுவதைப் பார்க்க அவனுக்கு வியப்பாக இருந்தது. கெமுனுவை அழைத்து பண்டார அழுவதற்கான காரணத்தைக் கேட்டான். அதைக் கெமுனு சொன்னான். விநோதப் பிராணியைப் பார்ப்பது போல பண்டாரவைப் பார்த்துக் கொண்டு பிரியந்த சென்றான்.

மாலை வரை பண்டார கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டான்.

"பண்டார, கவலைப்படாதே. வா சசியின் வீட்டுக்குப் போய்விட்டு வருவோம்" என்று கெமுனு அழைப்பு விடுக்க," வேண்டாம் அடிக்கடி அவளிடம் சென்று அவளின் உள்ளத்தில் ஆசையை வளர்க்கக்கூடாது" என்று பதிலிறுத்தான் பண்டார.

"பரவாயில்லை. இங்கு இருக்கும் வரை நாம் அனுபவிப்போம்."

கெமுனுவின் வார்த்தைகளில் அழுத்தம் இல்லாத போதும், பண்டாரவுக்கு கோபம் வந்தது. நண்பனைக் கோபத்துடன் நோக்கி, "நீ சகோதரிகளுடன் பிறக்கவில்லையா? இப்படிப் பேச உனக்கு வெட்கமில்லையா?" எனக் கத்தினான்.

இரவு பனைமரங்கள் 'சலசலத்தபடி' இருக்க, பாய் ஒன்றில், நிலவை

உற்றுப் பார்த்தவண்ணம் பண்டார கிடந்தான்.

வீட்டின் முற்றத்தில் பிரியந்த, கெமுனு, ஆரியதாச, ரஞ்ஜித், காமினி இன்னும் இரு இராணுவ வீரர்கள் சுற்றிவர அமர்ந்திருந்தவண்ணம் கள்ளு அருந்திக் கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் உற்சாகத்துடன் காணப்பட்டனர். கெமுனு அடிக்கடி நகைச்சுவைத் துணுக்குகளை வெளிப்படுத்தி, அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தினான்.

பண்டாரவினால் அந்த நகைச்சுவைத் துணுக்குகளை ரசிக்க முடியவில்லை. விஜிதாவின் எண்ணம் தான் இடைவிடாமல் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது. நிலாவில் அவள் முகம் தெரிந்தது. அவனைப் பார்த்து புன்னகைப்பது போன்ற ஒரு பிரமை அடிக்கடி எழுந்தது. "பண்டார அண்ணா" என்று அவள் அழைப்பது போல..........

பிரியந்த வழமை போல தன்னை மறந்த நிலையில் பாடுகிறான்.

போத்தல் ஒன்றில் காமினி தாளம் போட்டான். கெமுனு மேசை ஒன்றில் தாளம் போட்டான். மற்றவர்கள் பாடலுக்கு ஏற்ப கை தட்டினார்கள்.

பண்டாரவின் கண்கள் கலங்கின.

அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்தான். கண்களைத் துடைக்கிறான். விஜிதாவின் நினைவை அறுத்தெறிய முயல்கிறான். முடியவில்லை. கண்கள் கலங்குகின்றன. மீண்டும் கண்களைத் துடைக்கிறான்.

கண்கள் தெளிவடைய முன்னால் விரிந்திருந்த இருளில் 'ஏதோ' அசைவது போல் தெரிய........அவன் ஆறறிவு அந்த உண்மையை உணர்த்தி விடுகிறது. அவன் உஷாரடைந்தான். வேதனை அவனிடமிருந்து விடைபெற்றது.

"கெமுனு ........" எனக் கத்தியபடி பண்டார வீட்டை நோக்கி ஓட, கள்ளுக் குடித்துக் கொண்டிருந்த யாவரும் பயந்து விட்டார்கள்.

"பண்டார என்ன?" என்று ஒருவன் கேட்கும் போதே, இருளில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

"எனது அம்மா" என்று ஒருவன் அலறியபடி கீழே விழுந்தான்.

எல்லோரும் வீட்டுக்குள் பாய்ந்தனர்.

மீண்டும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பண்டாரவின் கைக்கு துப்பாக்கி சிக்கியது. அதை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான்.

பண்டாரவின் பின்னால் இருந்து வேட்டுக்கள் தொடர்ந்தும் தீர்க்கப்பட்டன. காதை அடைக்கும் ஒலிகள் அப்பிரதேசத்தில் எதிரொலித்தன.

கைக் குண்டு ஒன்று வீசப்பட்டது. அது பண்டாரவின் முன்பாக விழுந்தது. ஆனால், வெடிக்கவில்லை.

பண்டார தனது குறியைப் பனை மரங்களின் பக்கமாக வைத்தான். துப்பாக்கியின் குதிரையை அழுத்தினான். ரவைகள் சீறின.

மறுபுறத்தில் இருந்து வெளிப்பட்ட ரவைகள் சுவரைத் துளைத்தன.

பிரியந்த துப்பாக்கியுடன் வந்தான்.

காமினி தூஷண வார்த்தைகளை உபயோகித்தபடி துப்பாக்கியுடன் வெளியே பாய்ந்தான். நிலத்தில் கிடந்தபடியே சுட்டான். பின் எழுந்தவன், சுட்டுச் சுட்டபடி முன்னேறினான்.

அவனை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன."எனது தாயே " என்று கத்தியபடி அவன் கீழே விழுந்தான்.

பண்டார வெளியே பாய்ந்தான். அவனும் சுட்டான்.

மறுபுறத்தில் இருந்து ரவைகள் தீர்க்கப்படவில்லை.

பண்டார பார்வையைச் சுழல விட்டான். ஒன்றுமே அசையவில்லை.

சொற்ப வினாடிகள் நிசப்தம் நிலவியது. எதிரிகள் போய் விட்டார்கள் என எண்ணும் போது, 'பட', 'பட' வென வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ரவை ஒன்று பண்டாரவின் காலை உரசியபடி பறந்தது.

"எனது தாயே" என அலறியபடி பண்டார சுட்டான்.

அவன் காலில் இருந்து இரத்தம் வழிந்தது.

பிரியந்த தொடர்ந்தும் சுட்டான்.

பண்டாரவுக்கு தலை சுற்றியது. எனினும், தொடர்ந்தும் சுட்டான்.

திடீரென இடிமுழக்கம் போல பாரிய சத்தம். "எனது தாயே" என கதறியபடி ஓர் இராணுவ வீரன் கீழே விழுந்தான்.

வெளியே நின்ற சகல இராணுவ வீரர்களும் வீட்டுக்குள் பாய்ந்தனர்.

"பண்டார, உள்ளே வா." ஒருவன் கத்தினான்.

பனை மரங்களின் பக்கம் இருந்து தொடர்ந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பண்டாரவுக்கு நிற்க முடியவில்லை. இரத்தம் நிறைய வெளியேறியிருந்தது.

தட்டுத் தடுமாறி உள்ளே புகுந்தான். அவன் கண்கள் செருகின. கீழே விழப்போக, பிரியந்த அவனைத் தாங்கிப் பிடித்தான்.

அவன் கண்களை மீண்டும் விழித்துப் பார்க்க, மந்திகை ஆஸ்பத்திரியில் காலில் கட்டுடன் கிடந்தான்.

## (16)

மீண்டும் பண்டாரவைத் தேடி சசிகலா பருத்தித்துறை இராணுவ முகாமுக்குச் சென்றாள்.

பிரியந்த தான் அவளை எதிர்கொண்டான். "நீ ஏன் அவனைப் பார்க்க வந்தாய்? புலிகளுக்காக ஒற்றர் வேலை செய்கிறாயா?" என அவன் சீறினான்.

சசிகலா கலவரமடைந்து விட்டாள். பயம் அவளைத் தணிவாகப் பற்றிக் கொண்டது. பதட்டத்துடன் பிரியந்தவைப் பார்த்து மௌனமாக நிற்க, "நீ ஏன் அவனைப் பார்க்க வேண்டும்?" என பிரியந்த கேட்டான்.

"சும்மா தான்......கதைக்க....."

"சும்மா?" என உரத்த குரலில் கேட்டுக் கண்களால் மிரட்டினான் பிரியந்த.

சசிகலா பதில் அளிக்கவில்லை. அவனையே தயவுடன் பார்த்தபடி நின்றாள்.

"நீ தானே அந்த ஒற்றர் வேலையைச் செய்தனி? நீ கொடுத்த தகவலினால் தான் அவர்கள் எம்மைத் தாக்கினார்கள். இதனால் எமது பக்கத்தில் இருவர் இறந்துவிட்டார்கள். அவர்களில் எத்தனைபேர் இறந்தார்களோ

தெரியவில்லை. எப்படியும் ஐந்து பேர்களாவது இறந்திருப்பார்கள். நான் மட்டும் இருவரை விழுத்தி இருப்பேன்."

இப்பொழுது தான் அவனது சீற்றத்துக்கான காரணம் சசிகலாவுக்குப் புரிந்தது. நான்கு நாட்களுக்கு முன் கடற்கரைப் பக்கமாக இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட செய்தி அவள் காதுகளுக்கு எட்டி இருந்தது. அதன் பின் அந்தப் பக்கம் இராணுவத்தினரின் கெடுபிடி இருந்ததென்றும், சில வாலிபர்கள் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டார்கள் என்றும் சசிகலா அறிந்திருந்தாள்.

பண்டார தங்கியிருந்த வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற அனுமானத்திற்கு அவள் வந்தாள். அப்படியென்றால் பண்டாரவுக்கு என்ன நடந்தது?

துணிவை வரவழைத்தபடி, அது பற்றி பிரியந்தவிடம் கேட்டாள்.

"என்ன நடக்க வேண்டுமோ, அது நடந்துவிட்டது."

"விபரமாகச் சொல்லுங்களேன்."

பிரியந்த முறைத்தான். "ஏன் அதைப் பற்றி புலிகளுக்கு தகவல் அனுப்பப் போகிறாயா?"

"இல்லை." அவள் குரலைச் சற்று உயர்த்தினாள். அவள் உள்ளம் கொதிப்படைந்தது.

"பண்டாரவுக்கு என்ன நடந்தாலும் உனக்கு என்ன? நீ ஏன் கவலைப்படுகிறாய்?"

"அவர் எனது நண்பர். ஒரு நண்பரைப் பற்றி விசாரிப்பது தவறா?"

"நீ அவனைக் காதலிக்கிறாயா?"

"'மைன்ட் யுவர் ஒன் பிசினஸ்'."

அவ் வார்த்தைகளின் அர்த்தம் பிரியந்தவுக்குப் புரியவில்லை. வெறுமனே சசிகலாவை வெறுப்புடன் பார்த்தபடி நின்றான்.

நல்ல வேளையாக இவர்களது சம்பாஷணையைச் செவிமடுத்துக் கொண்டிருந்த இராணுவ வீரன் ஒருவன் சசிகலாவிடம் வந்தான். "பண்டாரவைத் தேடுகிறாயா?"

"ஆம்" என அவள் தலையாட்டினாள்.

"அவன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறான். அங்கே போனால் அவனைப் பார்க்கலாம்."

"மடையா, ஏன் இந்தத் தகவலை இவளிடம் வெளியிட்டாய்?" எனப் பிரியந்த கத்தினான்.

"உண்மையான காதலர்களுக்கு உதவி செய்வதை நான் விரும்புகிறேன்."

"உண்மையான காதலர்கள்?" பிரியந்த கேலியாகச் சிரித்தான். "பண்டாரவைக் காதலிப்பது போல நடித்து, இங்குள்ள இராணுவத்தினரின் நடமாட்டங்களைப் புலிகளுக்கு அறிவிப்பது தான் இவள் வேலை. புலிகளின் ஒற்றர்களில் இவளும் ஒருத்தி. 'கப்டன்' பொன்சேகாவிடம் சொல்லி இவளைக் கைது செய்து, அடைத்து வைக்க வேண்டும்."

சசிகலாவின் முகம் இறுகி, கறுப்புப் படர்ந்துவிட்டது. கண்களில் கலவரம் தொக்கியது. பிரியந்தவின் பேச்சு அவள் அடிவயிற்றைக் கலக்கியது. இன்னும் சிறிது நேரம் அங்கு நின்றால், அவளைப் பிடித்து அடைத்து விடுவான்

எனப் பயந்தாள். ஒன்றும் சொல்லாமல், ஓர் அரைகுறைப் புன்னகையுடன் அங்கிருந்து மெல்ல நழுவினாள்.

மந்திகை ஆஸ்பத்திரிக்குப் பண்டாரவைப் பார்க்கப் போவதா, இல்லையா என்று சிந்தித்தபடி சைக்கிளைச் செலுத்தினாள். அவனுடன் கதைப்பதற்கே தயங்கியவள், அவன் நீட்டிய 'ரேடியோ' வை பெறுவதற்கே தயங்கியவள், அவனை ஆஸ்பத்திரியில் சென்று சந்திப்பது சரியா? அது சரி என்று அவள் மனச்சாட்சிக்கு பட்டாலும் அறிந்தவர், தெரிந்தவர்களின் கண்களுக்குச் சிக்காமல் ஆஸ்பத்திரியின் உள்ளே போய், வெளியே வருவது அவ்வளவு லேசுப்பட்ட காரியம் அல்ல. ஒருவர் கண்டால் கூட அது பற்றி ஊர் முழுவதும் பரவிவிடும். அதன் எதிரொலியாக, பல தேவையற்ற, எதிர்பார்க்க அவசியமற்ற சம்பவங்கள் நிகழக்கூடும். காயமடைந்திருக்கும் அவன் பூரண சுகம் பெற்று முகாம் வரும் போது அவனுடன் கதைக்கலாம் தானே என்ற ஓர் எண்ணமும் ஏற்பட்டது. ஆனால், குணமடையும் அவன் ஆஸ்பத்திரியில் இருந்து தனது ஊருக்குச் சென்றால்.........? அவனைப் பார்க்கும் சந்தர்ப்பத்தை இழந்துவிடுவாள். அவனை ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்ற துடிப்பு அவளுள் விஞ்சியது. எதையும் எதிர்கொள்ளும் சக்தியை தன்னுள் திரட்டினாள்.

சிறிது நேர சைக்கிளோட்டத்தின் பின் தனது சைக்கிள் ஆஸ்பத்திரியின் முன்பாக நிற்பதை அவள் உணர்ந்தாள். மேலும் எதையும் தீவிரமாகச் சிந்திப்பதை அவள் தவிர்த்தாள். மனத் தைரியத்துடன் ஆஸ்பத்திரியினுள் பிரவேசித்தாள்.

ஒவ்வொரு 'வோர்ட்' டாக அவனைத் தேடிச் சென்றாள். ஒரு 'வோர்ட்'டில் இராணுவ வீரர்கள் காவலுக்கு நின்றார்கள். அங்கு தான் பண்டார இருப்பான் என்று அவள் நம்பினாள். ஆர்வத்துடன் அங்கு சென்றாள். பண்டாரவைத் தேடினாள். கட்டில் ஒன்றில் நீட்டி நிமிர்ந்த நிலையில் அவன் கிடந்தான். ஒரு காலில் கட்டுப் போடப்பட்டிருந்தது.

பண்டார விழித்தபடி இருந்தான். சசிகலாவைக் கண்டவன் புன்னகைத்தான்.

"எப்படி சுகமாக இருக்கிறீர்களா?" என சசிகலா குசலம் விசாரித்தாள்.

"புத்தபெருமானின் அருளால் சுகமாக இருக்கிறேன்."

"உங்களுக்குப் பெரிய காயம் ஒன்றும் இல்லைப் போல......."

"கணுக்காலில் மட்டும் காயம் ஏற்பட்டுள்ளது. இரண்டு பேருக்கு பாரதூரமான காயங்கள் ஏற்பட்டு, அவர்கள் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். எனக்கு ஒரு வாரத்துக்குள் 'டிக்கெட்' வெட்டுவார்கள். அதன் பின் ஒரு வாரம் முகாமில் ஓய்வெடுத்தால், நான் பூரண சுகமடைந்துவிடுவேன்."

"உங்கள் முகாமுக்குச் சென்றேன். பிரியந்த என்னைக் கண்டபடி ஏசினவர்."

"அவன் ஓர் இனத்துவேஷி. அவனது பேச்சைக் கருத்தில் எடுக்க வேண்டாம்."

சொற்ப வேளையின் பின் சசிகலா அங்கிருந்து வெளியேறினாள். மற்றைய 'வோர்ட்'களில் கிடந்த நோயாளிகள் பலரும் அவளை விசித்திரமாகப் பார்த்தபடி இருந்தார்கள்.

அடுத்த மூன்று நாட்களும் சசிகலா ஆஸ்பத்திரிக்குச் சென்று பண்டாரவைப் பார்த்துவிட்டு வந்தாள்.

## (17)

மந்திகை ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து பண்டார சிகிச்சை பெற்ற வேளையில், அவன் பெயருக்கு வந்திருந்த கடிதத்தை சக இராணுவ வீரன் ஒருவன் நீட்டி விட்டுச் சென்றான். கடித உறையில் கிடந்த கையெழுத்தைப் பார்த்தவுடன் அது நெலும் குமாரியிடம் இருந்தே வந்திருக்கிறது என்பதைப் பண்டார புரிந்தான். ஆவலுடன் கடிதத்தைப் பிரித்தான். அவன் பருத்தித்துறைக்கு வந்த பின் அவன் தங்கை எழுதிய முதல் கடிதம் அது.

"அன்புள்ள அண்ணா" என்று விளித்திருந்தவள், ஊரில் நடைபெற்ற சில புதினங்களை மேலெழுந்தவாரியாகத் தொட்டிருந்தாள். "அண்ணா, இக் கடிதத்தில் ஓர் அதிர்ச்சியானதும், வேதனையானதுமான செய்தியை குறிப்பிடப் போகிறேன். உங்கள் மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள். எங்கள் அன்புக்குரியவளாக விளங்கிய விஜிதா தற்கொலை செய்து விட்டாள். கிருமி நாசினி அருந்தி, அவள் உயிரை இழக்கும் வேளை துடிப்பதைக் கண்டு..... என்னால் அன்றிரவு சரிவர தூங்கவே முடியவில்லை...."

அச் செய்தி அவனுக்கு அதிர்ச்சியை ஊட்டாவிட்டாலும், அடங்கிக் கிடந்த வேதனையைக் கிளப்பியது. அவனால் கடிதத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. வேதனையின் இளமை முதிர்ச்சி அடைய, நெஞ்சு வலியெடுத்தது. கண்களை ஒரு திவலை மறைத்தது. கொஞ்சம் கொஞ்சமாக கண்கள் கலங்கின. 'ஓ' வென்று அழவேண்டும் என்ற வேதனை அவனைப் பிழிந்தது.

விஜிதாவை நினைக்கின்றான். அவன் மனதில் 'ஏதோ' பிரவாகமாகப் பொங்குற மாதிரி ஓர் உணர்ச்சி படர்கின்றது. அவன் நிலை தளும்ப முற்படுகின்றது. பெருமூச்சுக்கள் மாறி,மாறி வெளிப்படுகின்றன.

கடிதத்தை நீட்டிய இராணுவ வீரனின் தலை தெரிய, கண்களைத் துடைக்கிறான்.

வேதனை தற்காலிகமாக விடைபெற, கடிதத்தில் கண்களைப் பதிக்கிறான்.

"விஜிதாவின் மரணம் எமது கிராமத்தையே வேதனையில் ஆழ்த்தி விட்டது. ஊரில் இருந்த யாவருமே அவளின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஆனால், அவள் கணவன் – அந்த அரக்கன் குடி போதையில் தனது வீட்டில் கிடந்தானாம்.

விஜிதாவின் தற்கொலைக்கான பழி உங்கள் மீது விழுந்திருக்கிறது. உங்களுக்கும், அவளுக்கும் இடையில் காதல் தொடர்பு இருந்ததாகவும், நீங்கள் இருவரும் தகாத முறையில் நடந்து கொண்டதாகவும் 'யாரோ' விஜிதாவின் கணவனுக்கு மொட்டைக் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். அதனால் அவன் விஜிதாவை பல வழிகளிலும் இம்மைசப் படுத்தியதுடன், அவளைத் தேவையின்றி அடித்துத் துன்புறுத்தி, கொடுமைப்படுத்தி இருக்கிறான்.

இதையெல்லாம் அறிந்த எங்கள் அம்மா விஜிதாவின் கணவனைச் சந்தித்து உங்களுக்கும், விஜிதாவுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை என்றும், அப்பழுக்கற்ற நட்புறவே இருந்தது என்றும் சத்தியம் செய்த போதும், அதனால் ஒரு பிரயோசனமும் ஏற்படவில்லை. அந்தப் பிசாசின் மனம் மாறவில்லை. விஜிதா இறந்த தினத்தன்றும் இன்னொரு மொட்டைக் கடிதம் வந்திருக்க வேண்டும். அதையிட்டு

அவன் விசாரித்து அவளைக் கண்டபடி நையப்புடைக்க, அவள் திடீரென தற்கொலை செய்துவிட்டாள். வீணாக நாங்களே அவளது மரணத்திற்கான பழியை ஏற்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது. நல்ல வேளை உங்களுக்கும், விஜிதாவுக்கும் இடையில் எவ்வாறான உறவு இருந்தது என்பதை அவளின் பெற்றோர் அறிந்திருந்தபடியால், உண்மை நிலையை அவர்கள் எல்லோருக்கும் விளக்க வேண்டி இருந்தது....."

பண்டாரவின் இதயத்தில் மீண்டும் ஓர் அழுத்தம். அவன் கவனம் கடிதத்தில் படிய மறுக்கிறது. விஜிதாவைச் சுற்றிச் சுற்றி அவன் சிந்தனை வட்டமிடுகிறது. அவன் மீது அவள் செலுத்திய அன்பு சந்தேகிக்கப்பட்டு விட்டது. சத்திய சோதனையின் கதாநாயகியாகத் திகழ வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலையில் நிறுத்தப்பட்டு விட்டாள். 'பண்டார அண்ணா' என்று கள்ளம் கபடமற்ற முறையில் அவனை வளைய வந்தவளை, அநாமதேயக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விட்டார்கள். அவன் உள்ளம் குமுறி அழுதது. 'விஜிதா..... விஜிதா....' என மனம் ஓலமிட்டது.

கடிதத்திற்குப் பார்வை கவனமின்றி நுழைகின்றது.

"நீங்கள் அனுப்பிய பத்தாயிரம் ரூபா கிடைத்தது. நாம் ஏற்கனவே எடுத்த கடன்களை அடைத்துவிட்டோம். மீதி இருந்த பணத்தில் அம்மாவுக்கு ஒரு சேலை வாங்கினோம். அந்த சேலையை அணிந்து கொண்டு அம்மா வேரஹேன பன்சாலைக்கு போன போது அவரின் முகத்தில் தெரிந்த பூரிப்பு.....

இனி நீங்கள் அனுப்பும் பணத்தில் ஒரு பகுதியைச் சேமிக்க வேண்டும். அச் சேமிப்பில் இருந்து தான் உங்கள் ஆசைக் கனவை நிறைவேற்றப் போகிறோம். ஆம், கல்வீடு ஒன்றின் நிருமாணத்தைப் பற்றித் தான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

இப்பொழுதே எமது கிராமத்தவர்கள் எம் மீது பொறாமை கொள்ளத் தொடங்கி விட்டார்கள். தம்பிமார்களை ஓரிருவர் கேலி செய்தார்களாம்.

நீங்கள் இனி எங்களைப் பார்க்க எப்பொழுது வருவீர்களோ என்று தெரிய இல்லை. முடியுமென்றால் ஒரு புகைப்படத்தை எடுத்து அனுப்பி வைக்கும்படி அம்மா கூறுகின்றார். இராணுவ சீருடையில் புகைப்படம் எடுத்தால் அழகாக இருக்கும். உடனடியாக அனுப்பி வைக்கவும். இந்த மண் வீட்டின் சுவரில் உங்கள் 'பிரேம் ' போட்ட படத்தை தொங்க விடும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

அண்ணா, புதிய இடத்தில், புதிய சூழ்நிலையில் நீங்கள் இப்பொழுது வாழ்கிறீர்கள். உங்களைக் கட்டுப்படுத்த, மேற்பார்வை செய்ய நாங்கள் இல்லை. நீங்கள் ஒரு கட்டாக்காலி. அதனால் உங்கள் கடமைக்குப் புறம்பாக, அநாவசிய விடயங்களில் ஈடுபடவேண்டாம் என்று அம்மா கூறுகின்றார். ஒழுக்க சீலராக, மனுஷத்தன்மையுடன் வாழ வேண்டுமாம். மனதைக் கண்டபடி அலைபாய விட வேண்டாமாம். யாவருடனும் அன்புடனும், பாசத்துடனும், கௌரவத்துடனும் பழகுங்கள். உங்களுக்குப் புத்த பெருமானின் அருள் கிட்டட்டும்....."

பண்டார கடிதத்தை நாலாக மடித்து உறைக்குள் போட்டான்.

கடிதத்தில் பொதிந்திருந்த விஷயதானங்கள் அவனுள் வேதனையை ஊட்டிய அதே வேளை, பொறுப்புணர்ச்சியையும் நினைப்பூட்டின. அவன் அனுப்பிய சம்பளப் பணத்தில் அவன் குடும்பத்தினர் எல்லாக் கடன்களையும் அடைத்து விட்டார்கள் என்று எண்ணியபோது அக மகிழ்ந்தான்.

இராணுவத்தில் சேராமல் கிராமத்தில் கூலி வேலையை தொடர்ந்திருந்தால், அவர்கள் நிதி நிலை உயரப் போவதில்லை என்ற உண்மை புலப்பட்டபோது, தனது தீர்மானத்தில் தவறு இல்லை என்று எண்ணினான். ஒழுக்க சீலனாகப் பண்புடன்

வாழும்படி தாய் அவனுக்குப் புத்திமதி கூறி இருக்கிறாள். ஆனால், அதற்கான அவசியம் – அவனைப் பொறுத்தளவில் இருக்கவில்லை. இதுவரை அவன் ஒழுக்கத்தை பிசகின்றி கடைப்பிடித்திருக்கிறான். சந்தர்ப்பங்கள் வந்த போதும், அவன் அதைத் தவிர்த்தான்.

அவன் நினைவை விஜிதா மேய்ந்தாள். திருமணத்தின் பின் எத்தனை கற்பனைக் கோட்டைகளைக் கட்டியிருப்பாள்? கனவு கண்டிருப்பாள்? பாவம் அவள்! மகிழ்ச்சியை இறுக அணைத்தவண்ணம், திருமண வாழ்வின் உன்மத்தங்களை அனுபவிக்க இருந்தவள், கணவனின் சந்தேகத் தீயில் எரிந்து, நரக வாழ்க்கையின் அடித்தளத்தை தொட்டுவிட்டு, வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியிட்டு விட்டாள்.

ஒரு வேளை மனதை மாற்றி, பண்டாரவின் காதலை ஏற்றிருந்தால்....? அவள் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பாள். பண்டாரவுடன் ஓர் அன்பான வாழ்க்கையை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்துக்குள் பிரவேசித்திருப்பாள். ஆனால், மொட்டு விரியும் முன் கருகி விட்ட மலர் போலாகிவிட்டாள்.

'பண்டார அண்ணா' என்று அவள் அழைப்பது அவன் காதுகளில் ரீங்காரமிட்டது. 'விஜிதா.....' என்று இவன் பெருமூச்சு விடும் உணர்வை, இவனே பெறுகிறான்.

விஜிதாவின் அன்புப் பேச்சு, அந்நியோன்னியத்துவம், நட்புறவு, பழகுந்தன்மை, கெஞ்சலில் உள்ள கொஞ்சல் என்று யாவற்றிலும் மனதைப் பறி கொடுத்தவன். தனது உணர்வினைச் சரிவர வெளிப்படுத்தாமல், அவள் மனதில் இடம் பிடிக்கத் தவறிவிட்டான்.

அவனிடம் இருந்து துயர் அகன்றது. விஜிதாவின் நினைவு மெலிந்தது.

கடிதத்தை மீண்டும் வாசிக்க வேண்டும் என்ற ஓர் உள்ளுணர்வு உதைக்க, கடிதத்தை எடுக்கிறான்.

அப்பொழுது புன்னகையுடன் சசிகலா வருகிறாள்.

"இன்று எப்படி இருக்கிறீர்கள்?" என அன்பொழுகக் கேட்டவள், பார்வையைக் கட்டு போட்டிருந்த காலுக்கு நகர்த்தினாள்.

"பரவாயில்லை. வலி அகன்று காயங்கள் தான் இருக்கின்றன."

கட்டிலுக்கு பக்கவாட்டில் கிடந்த நாற்காலியில் சசிகலா அமர்ந்தாள். அவள் முகத்தில் சின்னதொரு தவிப்பு உழல்வதை இதழ்களில் புன்னகைகள் விரிவதை அவன் அவதானிக்கிறான்.

"பண்டார, நீங்கள் இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கு இருக்க வேண்டும்?" முதல் தடவையாக அவன் பெயரை அவள் உச்சரித்தாள்.

"இன்னும் இரண்டு நாட்களில் 'டிக்கெட்' வெட்டுவார்கள் என்று நினைக்கிறேன்."

"அதன் பின் உங்களால் சரிவர நடக்க முடியுமா?"

"நடக்கலாம் என்று நினைக்கிறேன்."

"எனது மனம் கடந்த சில நாட்களாக ஒரு நிலையில் இல்லை."

"ஏன்?"

அவள் கண்களில் சோகமொன்று முளைக்கிறது. "உங்களுக்கு நடந்த கதியை அறிந்த பின்னர் என் மனம் அமைதியில் இருக்குமா?"

பண்டார வியப்பை முகத்தில் காட்டினான். கேள்வி ரூபத்தில் அமைந்த அவள் பதில் அவன் இதயத்தை மெல்ல அரித்தது.

பண்டார ஒன்றும் கூறவில்லை. பார்வையைத் திருப்பி, முகத்தில் அசுவாரஷ்யத்தை வெளிப்படுத்தினான்.

சசிகலாவின் பார்வை பண்டாரவின் கையில் இருந்த கடித உறைக்குச் சென்றது.

"கடிதமா? உங்கள் காதலியா எழுதி இருக்கிறாள்?" எவ்வித முன்யோசனையும் இன்றி சசிகலா கேட்டு விடுகிறாள்.

இவ்வாறான – அந்நியோன்னியத்திற்குரிய விசாரணையை அவளிடம் இருந்து அவன் எதிர்பார்க்கவில்லை. துணுக்குற்றுவிடுகிறான். "காதலி? எனக்கு காதலி இல்லை. தங்கச்சி தான் எழுதி இருக்கிறாள்."

"நீங்கள் சொல்வதை நான் நம்பமாட்டேன். உங்களுக்கு நிச்சயமாக ஒரு காதலி இருக்க வேண்டும்."

சசிகலாவின் அந்தத் துணிகரப் பேச்சு, அதில் விளக்கமாகவே தெரிந்த அபவாதம், இரண்டையும் பண்டார கவனித்து விட்டான். "இல்லை, இல்லை" என்கிறான் அவன். குரல் தேய்ந்திருந்தது.

"என்னை நம்பச் சொல்கிறீர்களா?"

"நம்பினால் நம்புங்கள். இல்லாவிட்டால் விடுங்கள்."

சசிகலா விழியை நிதானமாக்கி, ஒரு வாத்சல்யமாக அவனைப் பார்த்தாள். "ஏன் காதலில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"காதலைப் பற்றிச் சிந்திப்பதற்கு நான் யோக்கியதை அற்றவன்."

"ஏன், காதலை வெறுக்கிறீர்களா?"

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்."

"அப்படி என்றால், நீங்கள் காதலில் தோல்வி அடைந்திருக்கிறீர்கள் என்று நான் சொன்னால் ஏற்றுக் கொள்வீர்களா?"

"இல்லை 'மெடம்'." பண்டார சிரித்து விடுகிறான்.

"பொய் சொல்லாதீர்கள் பண்டார. உங்களில் அன்பு வைத்திருக்கும் எனக்கு ஏன் பொய் சொல்கிறீர்கள்?"

பண்டார அவள் வார்த்தைகளுக்கு நெகிழ்ந்து விட்டான். இனியும் உண்மையை மறைக்க அவன் விரும்பவில்லை. "நீங்கள் சொல்வது சரி. எனது கிராமத்தில், பக்கத்து வீட்டில் வாழ்ந்து வந்த விஜிதா என்ற பெண்ணைக் காதலித்தேன். ஆனால், காதல் என்ற மாயையைத்தான் என்னுள் வளர்த்திருந்தேன் என்பதை இறுதியிலேயே அறிந்தேன். எனது காதல் நிராகரிக்கப்பட்டபோது நான் அடைந்த வேதனை..."

"அவள் ஏன் உங்களைக் காதலிக்கவில்லை?"

"எனக்கு காரணம் தெரியாது. என்னுடன் பெரிதும் ஒரு சகோதரனைப் போலத்தான் அவள் பழகி இருக்கிறாள். நான் தான் எமது நட்புறவை காதல் என்று அர்த்தப்படுத்திவிட்டேன்."

"அப்படி என்றால் நீங்களும் காதலில் தோல்வியுற்றவர்தான்."

பண்டார அவளை வியப்புடன் நோக்கினான். "நீங்கள் என்ன சொல்கிறீர்கள், சசி?"

"நான் நீண்ட காலமாக எனது மனதைப் பக்குவமாக வைத்திருந்தேன். எனது வாழ்க்கை அகராதியில் காதலுக்கு அர்த்தம் இருக்கவில்லை. ஆனால் கேசவன் என்றொருவனின் பசப்பு வார்த்தைகளுக்கு மயங்கி, அவனை உண்மையாகவே காதலித்தேன். ஆனால், இறுதியில் தான் அவன் ஓர் ஏமாற்றுக்காரன் என்பதை

அறிந்தேன். அத்துடன் என் காதல் நின்று போனது. அதன் பின் காதலில், ஆண்களில், திருமணத்தில் என்று யாவற்றிலும் வெறுப்படைந்தேன்."

"வாழ்க்கையில் எந்தத் தோல்வியையும் தாங்கிக் கொள்ளலாம். ஆனால், காதல் தோல்வியைத் தாங்க முடியாது.

"உண்மைதான். எத்தனை இரவுகள் அழுதிருப்பேன்? எனது அப்பா இறந்த போது கூட இவ்வளவு அழுதிருக்கமாட்டேன். எனக்கு ஆறுதல் சொல்லியே அம்மாவுக்கு அலுத்துவிட்டது."

"நீங்கள் நல்ல அழகி. படித்திருக்கிறீர்கள். பண்பாக நடக்கிறீர்கள். அப்படி இருந்தும் கேசவன் ஏன் உங்களை நிராகரித்தான்?"

"எல்லாம் இருந்தும் சீதனம் கைநிறைய இருக்கவில்லை. அற்ப சொற்பத்துக்கு அவர்கள் தமது மகனை விற்க விரும்பவில்லை. இங்கே தான் யாழ்ப்பாணத்துப் பாரம்பரியம் என்னைப் படுகுழிக்குள் தள்ளியது. அதனால் தான் பாரம்பரியத்தில் எனக்கு வெறுப்பு."

இருவருக்கும் இடையில் ஒரு மௌனம் விழுந்தது. பண்டார இலக்கின்றி பார்வையை வைத்திருந்தான். அவனுடன் அர்த்தத்துடன் நிறைய பேச வேண்டும் என்ற தவிப்பு அவளுள் உருவகித்து, அவள் மனதைத் தள்ளியது. ஆனால், அவளுள் புதைந்திருந்த பெண்மை அவளை ஒரு வரையறைக்குள் நிறுத்தத் தவித்தது. ஆனால், அந்தத் தவிப்பை உதாசீனப்படுத்தியபடி ஓர் அசட்டுத் துணிச்சல், அவள் அடிமனதில் புதையுண்டிருந்த அவளின் தீர்மானத்தை நிதர்சனமாக்கத் துடித்தது.

"விஜிதாவை மறந்து விட்டீர்களா?"

"எப்படி அவளை மறக்க முடியும்? எனது முதல் காதலின் நாயகி அவள் தானே?"

சசிகலா அவனை அர்த்தத்துடன் நோக்கினாள். "நீங்கள் ஏமாந்தீர்கள். நான் ஏமாற்றப்பட்டேன். இருவருக்குமே தோல்விதான் பாடம். இருவருமே இப்பொழுது ஒரே படகில் துடுப்பின்றி செல்கிறோம். அதாவது காதல் தோல்விப்படகு." சசிகலா விரக்தியுடன் புன்னகைத்தாள்.

பண்டார ஒன்றும் கூறவில்லை.

"நீங்கள் காதலை மறந்து விட்டீர்களா?" சசிகலா கேட்டாள்.

"இனி நானாகக் காதலிப்பதில்லை என்று ஓர் எண்ணத்தில் இருக்கிறேன்."

"அவ்வளவு வெறுப்பு வந்துவிட்டதா?"

"இல்லை, இனியும் ஏமாற நான் தயார் இல்லை."

"அதாவது உங்களை ஒரு பெண் விரும்பிய பின்னர் தான் அவளைக் காதலிக்கத் தொடங்குவீர்களா?"

சசிகலாவின் கேள்வி அவன் தொண்டையை அடைத்துவிட்டது. பதில் அவனிடமிருந்து புறப்படத் தயங்கியது.

"சொல்லுங்க....."

பண்டார மௌனத்தில் இருந்து விடுதலை பெறத் துடித்தான். ஆனால், முடியவில்லை.

"பதிலைச் சொல்ல ஏன் தயங்குகிறீர்கள்?"

"காதலைப் பற்றி நினைக்கும் நிலையில் நான் இல்லை."

"ஏன்?"

"எனக்கு இப்பொழுது பொறுப்பு இருக்கிறது. அத்துடன் எனது இலட்சியம்

நிறைவேற வேண்டும். இவை இரண்டும் தான் இப்பொழுது எனது முதற் தேவைகள்."

"உங்கள் முதற் தேவைகளை நிறைவேற்றிய பின்...."

"அதைப் பற்றி அந் நேரத்தில் முடிவு எடுப்பேன்."

பண்டாரவின் பதில் சசிகலாவின் மனதினில் புதைந்திருந்த ஆர்வத்தைத் தணித்தது. அவனுடன் நிறையப் பேசி, அவன் அடி மனதினில் புதைந்திருக்கும் ஓர் உண்மையை அறிய அவள் முற்பட்டாள். அந்த உண்மை வெளிப்பட்டால் தன் மனதினுள் அடைந்து கிடக்கும்– அவன்பாற் அவள் கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்தலாம் என்று எண்ணி இருந்தாள். ஆனால், அவன் தளர்வாகவன்றி, இறுக்கமாகப் பேசியதனால் அவள் ஏமாற்றத்தைச் சுவீகரித்து விட்டாள்.

பண்டாரவின் மீது அவளுள் ஒரு குருட்டுக் காதல் முளைத்திருந்தது. அவனது சில நடவடிக்கைகளில், அவன் வெளிப்படுத்திய சத்தியங்களில் அவள் தன் மனதைப் பறி கொடுத்திருந்தாள். அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளைத் துளியளவும் யோசிக்காமல் – இந்த யாழ்ப்பாணத்து சமூகத்திற்கு ஒரு பாடம் புகட்டுகிறேன் என்ற தோரணையில் ஏற்கனவே தாயிடம் சொல்லி இருந்ததை நிரூபிக்கும் வகையில் அவன் மீது அவள் காதலுற்றிருந்தாள்.

சசிகலாவின் பேச்சில் இழையோடிய எண்ணம் பண்டாரவை விழிக்க வைத்தது. விஜிதா மீது அவன் கொண்ட அன்புக்கு ஒப்பான அன்பினை சசிகலா தன் மீது பொழிய முனைகிறாள் என்பதைப் புரிந்தான். அவ்விதமான அன்பினை அவன் வளர்க்க விரும்பவில்லை. அதைத் தவிர்த்து – எட்டத்தில் தன் உணர்ச்சிகளை வைக்கவே அவன் விரும்பினான். அதே வேளை, அவள் உள்ளத்தில் தொற்றியுள்ள அநாவசிய ஆசையைக் கிள்ளி எறிய வேண்டும் என்ற உத்வேகம் அவனுள் மெலிதாக உருவகித்தது.

"சசி, நீங்கள் உங்கள் மனதில் தேவையற்ற ஆசைகளை வளர்க்கக் கூடாது. ஒருவன் உங்களை விரும்புகிறானா, இல்லையா என்று அறியாமல் மனதை அலைபாய விடாதீர்கள். நீங்கள் ஏற்கனவே சூடு கண்ட பூனை. என்றபடியால், நீங்கள் வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனமாக வைக்க வேண்டும்."

இருட்டிக் கொண்டு வர, சசிகலா மனமின்றி அங்கிருந்து அகன்றாள்.

கெமுனு வர சசிகலாவின் மனதினில் புதைந்திருக்கும் – தன் மீதிருக்கும் காதலை பண்டார வெளிப்படுத்தினான்.

"நீ அவளைக் காதலிக்கிறாயா?" கெமுனு நேரிடையாகவே வினாவினான்.

"இல்லை."

"காரணம் என்ன?"

"ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது."

"அது என்ன?"

"நேரம் வரும் போது சொல்வேன்."

"அப்படி என்றால் ஏன் அவளுடன் அந்நியோன்னியமாகக் கதைக்கிறாய்? அவளைத் தேடி அவள் வீட்டுக்குப் போகிறாய்? பரிசுப் பொருள்களைக் கொடுக்கிறாய்?"

"அது தவறு என்று இப்பொழுது தான் உணர்கிறேன். எனது அன்பினை அவள் காதல் என நினைக்கிறாள். வீணாக ஏமாறப் போகிறாள். என்றபடியால் அவள்

எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்."

"என்ன மாதிரி?"

"அவள் என்னை வெறுக்கிற மாதிரி, அல்லது மறக்கிற மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவள் இனி என்னைச் சந்திப்பதை நீ தான் தடுத்து நிறுத்த வேண்டும்."

"சரி." கெமுனு உறுதியுடன் கூறுகிறான்.

## (18)

வீடு சென்ற சசிகலாவை பூரணி தடுத்து நிறுத்தினாள்.

"ஒவ்வொரு நாளும் பின்னேரங்களில எங்கை போயிட்டு வாறாய்?" என்று பூரணி கேட்டாள்.

"ஆஸ்பத்திரிக்கு." சசிகலா உண்மையை மறைக்கவில்லை.

"ஆஸ்பத்திரியில ஆர் இருக்கினம்?"

"பண்டார."

"பண்டார? அவனைப் பார்க்க நீ ஏன் போனனி? உனக்கு விசரா?"

"அவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில கிடக்கிறார். அவரைப் பார்க்கப் போனால் எனக்கு விசர் எண்டோ சொல்லுறது?"

"அவன் உனக்கு ஆர்? இவங்களோட ஒரு தொடுசலும் வைக்கக்கூடாது எண்டு பெடியள் எச்சரிக்கை செய்திருக்கக்கிள்ளை........"

"உங்கை எல்லாரும் தான் அவங்களோட கதைக்கினம், பழகினம். சாப்பாடு எல்லாம் குடுக்கினம்."

"அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை. நீ அவனைப் பார்க்கப் போகக் கூடாது."

"போனால் என்னவாம்? அவங்கள் என்னை விழுங்கி விடுவாங்களோ? அவங்கள் பேயோ, பூதமோ இல்லை மனுசர்.............."

"அது எனக்குத் தெரியும். நீ அவனைப் பார்க்கக் கூடாது. அவனோடை ஒரு கதையும் வைச்சிருக்கக் கூடாது. நீ ஒரு பொம்பளை. அதுவும் ஒரு தமிழ்ப் பொம்பளை எண்டதை மறந்திடாதை."

"நான் எண்டைக்கும் தமிழ் பொம்பளைதான். அதை ஒருத்தராலையும் மாத்த ஏலாது."

"நாங்கள் இப்ப பிறத்தியார்ட்ட வீட்டிலை இருக்கிறம். நீ பண்டாரவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு எல்லாம் போறதை ராஜேஸ் 'அன்ரி' கேள்விப்பட்டால் எங்களை வீட்டில இருந்து துரத்திப் போடுவா."

"அதுக்கு என்ன? இஞ்சை வேறை வீடு இல்லையோ?"

"உனக்கு இப்ப கொஞ்ச நாளா விசர்குணம் வந்து சதிர் ஆடுறாய். அவனை ஏன் போய் பாாக்கிறாய்?"

"ஏன் பார்க்கிறதில என்ன பிழை?"

"அவன் ஒரு 'ஆமி'க்காரன். அதுவும் ஒரு சிங்களவன்."

"ஆனால், அவர் மனுசன். மிருகம் இல்லை. கேசவன் மாதிரி ஒருத்தனோட ஒப்பிடக்கிள்ளை பண்டார ஒரு கடவுள் மாதிரி."

"என்னடி பெரிய, பெரிய சொல் எல்லாத்தையும் பாவிக்கிறாய்?"

"உண்மையைத் தான் சொல்லுறன். கேசவன் ஒரு ஏமாத்துக்காறன். படுபோக்கிரி. அவன்ர தேப்பன் ஒரு அநியாயக்காரன். இந்த மாதிரி எங்கடை ஆக்கள் எங்களுக்குள்ளை இருக்கக்கிள்ளை, பண்டார மனுசத்தன்மையோட நடக்கிறார்."

" அப்படி எண்டால் நீ அவனைக் கலியாணம் கட்டப் போறியோ?"

"அது என்ர விருப்பம். நான் நினைச்சால் அவரைக் கட்டுவன். அதை ஆரும் தடுக்க ஏலாது."

"இடியே, நான் உன்ர அம்மா. எனக்கு முன்னால என்னடி கதைக்கிறாய்?"

"உங்களுக்கு முன்னால கேசவன்ர தேப்பன் என்ன கதை எல்லாம் கதைச்சார் எண்டு எனக்குத் தெரியும். நீங்கள் வாயைப் பொத்திக் கொண்டுதானே அவையின்ர வீட்டில இருந்து வந்தனீங்கள்? இந்த மாதிரி முதுகெலும்பு இல்லாத ஆம்பிளையளைக் கட்டுறதைவிட ஒரு சிங்களவனைக் கட்டினால் என்ன எண்டு அண்டைக்குச் சொன்னனான். இப்பவும் அதைத்தான் சொல்லுறன். பண்டாரவுக்கு விருப்பமெண்டால் நான் அவரைக் கட்டுவன்."

பூரணி கண்ணீர் சொரிந்தாள். விக்கி, விக்கி அழுதாள், "கடவுளே! ஏன் என்னை இப்படி எல்லாம் சோதிக்கிறாய்?" என்று பிதற்றினாள்.

சசிகலா உள்ளே சென்று விட்டாள்.

மறுநாள் காலை அவள் மந்திகை ஆஸ்பத்திரிக்குச் சென்றாள். ஆனால், பண்டாரவின் கட்டில் வெறுமையாகக் கிடந்தது. அங்கு காவலுக்கு நின்ற இராணுவ வீரனிடம் பண்டாரவைப் பற்றி விசாரித்தாள். அவனை 'டிஸ்சார்ஜ்' செய்து விட்டதாக சொன்னான்.

அங்கிருந்து சசிகலா நேரே பண்டார தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றாள். வீட்டைச் சுற்றி இரு இராணுவ வீரர்கள் துப்பாக்கிகளுடன் நின்றனர். பண்டாரவைப் பார்க்க வேண்டும் என்று சசிகலா சொன்னாள். ஒருத்தன் வீட்டினுள் சென்று சில நிமிடங்களின் பின் வந்து, அவன் தூங்குவதாகச் சொன்னான். மாலையில் வருவதாகக் கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினாள்.

மாலையில் மீண்டும் அவனைத் தேடி சசிகலா சென்றாள். பண்டார அங்கில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. சசிகலாவுக்கு மனம் களைத்தது.

இரு நாட்கள் கழிய அவனைத் தேடி சசிகலா சென்றாள். பண்டார அங்கில்லை என மீண்டும் தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் மூன்று நாட்கள் கழிய சென்றாள். "அவன் இல்லை" என வாசலில் நின்ற இராணுவ வீரன் சொன்னான்.

"நான் எத்தனையோ தடவைகள் அவரைப் பார்க்க இங்கு வந்துவிட்டேன். ஆனால், அவர் இல்லை என்ற பதில் தான் அளிக்கப்பட்டது. அவர் உண்மையிலேயே இல்லையா? அல்லது இருந்து கொண்டே இல்லை என்று சொல்லச் சொன்னாரா?" என சசிகலா கேட்டாள்.

"அவன் இல்லை. அலுவலாக 'எங்கேயோ' சென்று விட்டான். இரவு ஒன்பது மணிக்குப் பின் வந்தால் சந்திக்கலாம்."

சசிகலா வீடு திரும்பிவிட்டாள்.

தாய் விறாந்தையில் எரிமலையான நிலையில் நின்றாள். "ராஜேஷ் 'அன்ரி' எங்களை வீட்டில இருந்து போகச் சொல்லிப் போட்டா. நாளைக்கே இஞ்ச

இருந்து போக 'ரெடி' பண்ணு."

"இப்ப இஞ்ச நிறைய வீடுகள் ஆக்கள் இல்லாமல் தான் இருக்குது. நான் பின்னேரத்துக்குள்ளை ஒரு வீட்டை பார்த்துக் கொண்டு வாறன்" என்று சசிகலா கறாராகச் சொன்னாள்.

"பண்டாரவைப் பார்க்கிறதை எப்ப விடப் போறாய்? எப்பத் தான் என்னை நிம்மதியாக இருக்க விடப் போறியோ தெரிய இல்லை" என்று பூரணி அலுத்தாள்.

"எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டுறன். அதுக்குப் பிறகு நீங்கள் நிம்மதியாக இருக்கலாம்."

பூரணி 'எதையோ' 'முணு முணு'த்தபடி சென்றாள்.

பண்டார ஏன் தன்னைப் பார்க்க வரவில்லை என்ற வினாவே சசிகலாவின் நெஞ்சில் அடிக்கடி எதிரொலித்தது. அவன் தன்னைத் தவிர்க்கிறானா என்ற வினாவும் அவளுள் எழுந்தது. அவனை எப்படியாவது சந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தாள்.

அன்றிரவு கடற்கரைப் பக்கம் நிறைய குண்டுச் சத்தம் கேட்டது. துப்பாக்கி வெடிகள் தீர்க்கப்படும் சத்தமும் கேட்டது.

சசிகலாவுக்குத் தூக்கம் வரவில்லை. இதயம்' படபட'த்த நிலையில் பாயில் கிடந்தாள் .

## (19)

பருத்தித்துறை இராணுவ முகாம் புலிகள் இயக்கத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

நள்ளிரவு கடல் வழியாக இரு படகுகளில் வந்த பன்னிரண்டு புலி இயக்கத்தினர் இருளோடு இருளாக முகாமின் ஒவ்வொரு பக்கத்திலும் பதுங்கி இருந்தனர். முகாமின் வாசலில், மண்மூடைகளுக்குப் பின்புறமாகக் காவலுக்கு நின்ற இராணுவ வீரர்கள் தமது எதிரிகளைக் கவனிக்கவில்லை.

திடீரென 'ரொக்கட் லோஞ்சரில்' இருந்து குண்டு முகாமை நோக்கிப் பறந்தது. அதைத் தொடர்ந்து புலிகளின் தாக்குதல் ஆரம்பமாகியது.

எல்லாமே சில வினாடிகள் தான். முகாமின் உள்ளே இருந்த இராணுவ வீரர்கள் உஷாரடைந்தனர். அவர்கள் தகுந்த நிலை எடுத்து எதிர்த்தாக்குதலை ஆரம்பித்தனர்.

'கப்டன்' பொன்சேகா உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

அன்றைய இரவு பண்டார, பிரியந்த, கெமுனு ஆகியோரும் முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்தனர். மூவரும் எவ்விதப் பதட்டமும் இன்றி தமது துப்பாக்கிகளை இயக்கினர்.

வெடிச்சத்தங்களும் , குண்டுச் சத்தங்களும் அந்தப் பிரதேசத்தைக் 'கிடு கிடுக்க' வைத்தன. "ஐயோ அம்மா" , "மகே அம்மே" என்ற கதறலும், குண்டுச் சத்தங்களுக்குள் மெலிதாக நுழைந்தன.

பண்டார அதிதீவிரமாகச் செயல்பட்டான். தீரத்துடன் எதிர்த்தாக்குதலை நிகழ்த்தினான்.

இரு தரப்பினரும் தொடர்ந்தும் எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

சூடுபட்டு ஓர் இராணுவ வீரன் பண்டாரவின் முன்னால் விழுந்தான்.

பண்டாரவின் உணர்ச்சி வேகம் அதிகரித்தது. கீழே விழுந்தவனின் துப்பாக்கியைக் கைப்பற்றியவன், அதன் மூலம் சுடத் தொடங்கினான்.

அரை மணித்தியாலத்தில் சூட்டுச் சத்தங்கள் அடங்கின.

"அவர்கள் பின்வாங்கி விட்டார்கள்" என்று இராணுவ வீரன் ஒருவன் கத்தினான்.

"அப்படிச் சொல்ல முடியாது. அவர்கள் எங்காவது ஒளிந்திருப்பார்கள்." பொன்சேகா எச்சரித்தான்.

கடல் காற்றின் இரைச்சலைத் தவிர அப் பிரதேசம் அமைதிக்கு அடிபணிந்திருந்தது.

நேரம் நகர்ந்தது.

பொன்சேகா நேரத்தைப் பார்த்தான். 2.10 மணி. விடிவதற்கு இன்னும் ஐந்து மணித்தியாலங்கள் இருந்தன.

ஒரு மணி நேரம் கழிந்தது. எதிர்ப்புறத்தில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்படவில்லை.

பொன்சேகா வெளியில் சென்றான். ஏழு இராணுவ வீரர்கள் பிணமாகக் கிடந்தனர். மூவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள். உடனடியாக அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன.

தமது விடுதிகளில் உறங்கிக் கொண்டிருந்த பல இராணுவத்தினரும் அங்கு வந்துவிட்டனர். யாவரது முகங்களிலும் ஆத்திரம் எல்லையை மீறிய நிலையில் படிந்திருந்தது.

ஏழு பிணங்களும் அப்புறப்படுத்தப்பட்டன.

முகாமின் முன் இருந்த கடற்பிரதேசத்தை பொன்சேகா ஆராய்ந்தான். நிலத்தில் இரத்தக் கறைகள் காணப்பட்டன. ஒரு சடலமும் காணப்படவில்லை. பொன்சேகா தனது அலுவலக அறைக்குச் சென்று, பலாலி இராணுவ முகாமுடன் தொடர்பு கொண்டு நடந்த தாக்குதலை விபரித்துவிட்டு, தனது விடுதிக்குப் போக முற்பட்டான்.

அச் சமயத்தில் பொன்சேகா முன் பிரியந்த தோன்றினான். "'சேர்', பண்டாரவின் நண்பி சசிகலா தான் இந்தத் தாக்குதலுக்குப் புலிகள் இயக்கத்திற்கு உதவி செய்திருக்கிறாள்" என்று ஆத்திரத்தில் கத்தினான்.

பொன்சேகா ஒன்றும் கூறவில்லை. சிறிது நேரம் யோசித்தவன், "பண்டாரவைக் கூப்பிடு" என்று கட்டளையிட்டான்.

பண்டார வந்தான். பொன்சேகாவின் முன் பணிவுடன் நின்றான்.

"உன்னைப் பார்க்க எத்தனை தடவைகள் சசிகலா வந்தாள்?"

"நாலைந்து தடவைகள்." பண்டார தெளிவுடன் பதில் அளித்தான்.

"அவள் ஏன் உன்னைப் பார்க்க வந்தாள்?"

"அவள் எனது நண்பி. அதனால் என்னைப் பார்க்க வந்தாள்."

பொன்சேகா கூர்மையுடன் பண்டாரவை நோக்கி, "நண்பி? ஒரு தமிழ்ப் பெண் எப்படி உனது நண்பியாக இருக்கலாம்?" எனக் கேட்டான்.

"ஏதோ தெரியவில்லை. அவள் என்னுடன் நட்புறவுடன் பழகுகிறாள்."

"அவள் உன்னைக் காதலிக்கிறாளா?"

"தெரியாது."

"நீ?"

"இல்லை."

"இல்லை?"

"ஆம்."

"அவளுக்கும், புலிகள் இயக்கத்திற்கும் இடையில் தொடர்பு இருக்கிறதா?"

"இல்லை என்று தான் சொல்லுவேன். அவளுக்கு இவ்விதமான போராட்டத்தில் விருப்பம் இல்லை. சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதில் அவளுக்கு நிறைய விருப்பம் உள்ளது."

பொன்சேகா சிரித்தான். "அவள் உன்னை நன்றாக ஏமாற்றி இருக்கிறாள். உன்னை மடக்கி விட்டாள். அவள் பொறிக்குள் நீ அகப்பட்டுவிட்டாய். அவளுக்கும், புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நிச்சயம் தொடர்பு இருக்க வேண்டும். அவள் இங்கு வேவு பார்த்திருப்பாள்."

"இல்லை 'சேர்'. எனக்கு அவளில் நம்பிக்கை இருக்கிறது. அவளது ஒவ்வொரு வார்த்தையையும் சத்தியமாக நினைக்கிறேன்."

"நீ வாயைப் பொத்து. நான் அவளை விசாரிக்க வேண்டும்."

பண்டார மௌனமானான்.

விடிந்து விட்டது.

சசிகலா சோம்பலை முறித்தபடி எழுந்தாள். முதல் நாளிரவு குண்டு, வெடிச் சத்தங்களினால் அவளால் சரியாகத் தூங்க முடியவில்லை.

'ஹோலுக்கு' வர, ராஜேஸ்வரி எதிர்ப்பட்டாள்.

"இஞ்ச இருந்து எப்ப போறதாக உத்தேசம்? இண்டைக்கே போறன் எண்டு நேத்தைக்குச் சொல்லிப் போட்டு இன்னும் நிக்கிறியள்?"

"இந்தக் கிழமையளவில் 'ஜஃபனா'வுக்கு போக விடுவினமாம். எண்டபடியால ஒரேயடியாக இஞ்ச இருந்து போறம்."

"அது வரைக்கும் உம்மட ஆட்டத்தை நிப்பாட்டி வையும். ஊரே காறித் துப்புது."

சசிகலா அங்கிருந்து அகல முற்பட, ஜீப் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அவள் திரும்பிப் பார்க்க பிரியந்த இறங்கினான். அவன் முகம் விகாரமுற்றிருந்தது. இன்னும் இரு இராணுவ வீரர்களும் இறங்கினார்கள். அவர்களது முகங்களும் கடுப்புடன் விளங்கின.

சசிகலாவின் கண்கள் பண்டாரவைத் தேடின. அவனைக் காணவில்லை.

பிரியந்தாவைப் பார்த்து சசிகலா புன்னகைத்தாள். ஆனால், பிரியந்த புன்னகைக்கவில்லை.

"உன்னைக் 'கப்டன்' பொன்சேகா வரச் சொன்னார்" என்று பிரியந்த சொன்னான்.

"ஏன்?"

"விசாரணைக்கு."

ஆள் அரவம் கேட்டு பூரணி வந்தாள். இராணுவ வீரர்கள் மகளைச் சுற்றி நிற்பதையும், அவள் திகைத்தவளாக நிற்பதையும் கண்டு 'எங்கேயோ', 'ஏதோ' பிழைத்துவிட்டது என்பதை அவள் புரிந்தாள். அவளைப் பயம் பீடித்தது.

சசிகலா தாயை நோக்கினாள். "அம்மா, என்னை 'காம்ப்'புக்கு வரட்டாம்."

"ஏன் பிள்ளை?"

"தெரிய இல்லை. ஏதோ விசாரிக்கப் போகினமாம்."

"என்ர கடவுளே" எனப் பூரணி தலையில் கை வைத்து அழுதாள்.

சசிகலா உடைமாற்றிக் கொண்டு வர அறைக்குள் சென்றாள்.

"ஏன் சசியை வரட்டாம்?" என பிரியந்தவிடம் பூரணி கேட்டாள்.

அவன் "தெரியாது" எனக் கையை விரித்தான்.

சசிகலா வந்தாள்.

"நானும் வரட்டோ?" பூரணி கேட்டாள்.

"வேண்டாம். என்னை என்னால பாதுகாத்துக் கொள்ளத் தெரியும்."

சசிகலா அங்கிருந்து வெளியேறினாள்.

அயலில் உள்ள மக்கள் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, சசிகலா ஜீப்பில் ஏறினாள்.

## (20)

பொன்சேகா தனது காரியாலயத்தில் தனக்குரிய நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவன் முகத்தில் தெளிவு நிரம்பி இருந்தது.

அவன் முன்பாக சசிகலா அமர்ந்திருந்தாள். அவள் முகத்தில் தவிப்பு இருந்த போதும், அச்சம் அறவே இருக்கவில்லை.

"உண்மையைச் சொன்னால், உன்னை விட்டுவிடுவேன். எனது வீரர்கள் ஏழு பேர் இறந்துவிட்டார்கள். பருத்தித்துறை நகரின் அரைவாசியையே எனது வீரர்கள் எரித்திருப்பார்கள். நான் அவர்களது கோப உணர்ச்சியை தணித்துவிட்டேன். எல்லோரும் உன் மீது தான் குற்றஞ் சுமத்துகிறார்கள்."

"நான் கும்பிடும் கடவுள் மீது சத்தியம். நான் பொய் சொன்னால் என் நாக்கு அழுகிவிடும் என நினைக்கிறேன். எனக்கு புலிகள் இயக்கத்துடன் எவ்வித தொடர்பும் இல்லை." சசிகலா உறுதிமிக்க குரலில் கூறுகிறாள்.

"நீ எங்கே பயிற்சி எடுத்தாய்?"

"பயிற்சியா? இல்லை, நான் ஒரு பயிற்சியும் எடுக்கவில்லை."

"உன்னை வேவு பார்ப்பதற்கு யார் அனுப்பினார்கள்?"

"நான் யாருக்கும் வேவு பார்க்கவில்லை."

"அப்படி என்றால் ஏன் அடிக்கடி முகாமுக்கு வந்தாய்?"

"பண்டாரவைப் பார்க்க."

"ஏன் அவனைப் பார்க்க விரும்பினாய்?"

"அவருடன் கதைப்பதற்கு."

"நீ அவனுடன் என்ன கதைப்பாய்?"

"பல விஷயங்கள் குறித்து கதைப்பேன்."

"நீ அவனை விரும்புகிறாயா?"

சசிகலா 'ஆம்' என்று தலையாட்டினாள்.

"அதாவது, நீ அவனைக் காதலிக்கிறாய். அப்படித் தானே?"

அவள் மீண்டும் 'ஆம்' எனத் தலையாட்டினாள்.

"ஏன் ஒரு சிங்களவனை, அதுவும் ஓர் இராணுவ வீரனைக் காதலிக்கிறாய்?"

"நான் அவரை விரும்புகிறேன். அவரின் பேச்சில், சுபாவத்தில், பழகுந்தன்மையில், நேர்மையில் கவரப்பட்டிருக்கிறேன். அவரில் மனுஷத்தன்மை மறைந்திருக்கிறது. சின்னச் சின்ன விஷயங்கள் மூலம் தனது மனுஷத்தன்மையை அவர் விளக்கி விட்டார்."

பொன்சேகா புன்னகைத்தான். "மனுஷத்தன்மை? அதை உன்னால் விளக்க முடியுமா?"

கேசவனுடன் கொண்ட தொடர்பைப் பற்றியும், அவன் எவ்வாறு அவளை ஏமாற்றினான் என்பது பற்றியும் சசிகலா விளக்கினாள். கேசவனின் தந்தை தனது தாயை எவ்வாறு அவமதித்தார் என்பதையும் எடுத்துரைத்தாள். "மனுஷத்தன்மை உள்ள ஒருவன், அவன் ஒரு சிங்களவனாக இருந்தாலும், எனக்கு அவனைப் பிடித்தால், அவனைத் தான் கலியாணம் முடிப்பேன் என்று அம்மாவிடம் ஏற்கனவே சொல்லி இருந்தேன். பண்டாரவில் மனுஷத்தன்மை இருக்கிறது. அவரை எனக்குப் பிடித்திருக்கிறது. அவர் ஒரு இராணுவ வீரர், சிங்களவர் என்பதையிட்டு நான் கவலைப்படவில்லை."

"அப்படியென்றால் நீ அவனைக் கலியாணம் முடிக்கத் தயாரா?"

சசிகலாவின் முகத்தில் நாணத்தின் சாயல் வளையமிட்டது. "தயார்" என்று உறுதியுடன் சொன்னாள்.

"உனது அம்மா இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பாரா?"

"நிச்சயம். ஆனால், அதை மீறவும் நான் தயார்."

"தென்பகுதியில் உன்னை ஏற்றுக்கொள்வார்களா?"

"அங்கும் எதிர்ப்பு நிறைய இருக்கும் என எதிர்பார்க்கிறேன். அவற்றையும் எதிர்நோக்கத் தயாராக இருக்கிறேன்."

"உனது முடிவு முட்டாள்தனமானது என நான் கூறுகிறேன். நீ அதற்கு என்ன சொல்கிறாய்?"

"நீங்கள் ஒரு முட்டாள் என நினைக்கிறேன்."

பொன்சேகா சிரித்தான், "முட்டாள்? என்னை முட்டாள் என்று சொன்ன இளம் பெண் நீ தான். உன் துணிச்சலை பாராட்டுகிறேன்.....சரி, இவ்வளவு துணிச்சலுடன் ஒரு முடிவை எடுத்திருக்கிறாய். அதற்கும் பாராட்டுக்கள். ஆனால், உனது முடிவை நீ மீள்பரிசீலனை செய்வதையே நான் விரும்புகிறேன்."

"இல்லை 'சேர்', எனது முடிவில் மாற்றம் இல்லை."

"பிற்பாடு அதையிட்டுக் கவலை அடைவாய்."

"அப்படி நான் நினைக்கவில்லை."

பொன்சேகா மீண்டும் சிரித்தான். "நான் என்ன சொன்னாலும், உனது காதில் ஏறப்போவதில்லை. உனது முடிவின்படி நட."

அதன் பின் சுமார் இரு மணி நேரம் பல விடயங்கள் குறித்து விசாரணை செய்த பொன்சேகா ஒரு முடிவுக்கு வந்தான். "நீ போகலாம்."

அந்த முகாமை விட்டு மகிழ்ச்சியுடன் வெளியேறினாள் சசிகலா.

பிரியந்த உரத்த குரலில் சோக கீதம் ஒன்றை உணர்ச்சித் துடிப்புடன் பாடிக் கொண்டிருந்தான்.

அவனைச் சுற்றியிருந்த அவன் நண்பர்கள் எவரும் கைதட்டவில்லை. விசில் அடிக்கவில்லை. மௌனமாக பாடலை செவிமடுத்தபடி அமர்ந்திருந்தனர்.

பண்டார ஒரு மூலையில் அமர்ந்திருந்தான்.

அவனது நினைவு முதல் நாளிரவு இறந்த தனது சகபாடிகளை வட்டமிட்டபடி இருந்தது. காலையில் எல்லோரும் பகிடிகளை வெளியிட்டபடி நேரத்தைக் கடத்தியதை எண்ணிப் பார்க்கிறான். அவன் மனம் ஈரமாகியது.

விஜிதாவின் நினைவும் உடனே இணைகின்றது. அவள் இவ்வுலகில் இல்லை என்ற உண்மை மனதினுள் வெளிச்சமாக, எச்சிலையே விழுங்க முடியாமல் தவிக்கிறான்.

"பண்டார அண்ணா........... "என அவள் அழைப்பது போன்ற உணர்வைப் பெறுகையில்.............

"பிரியந்தவுக்கு எந்நேரமும் காதல் தோல்விப் பாட்டுத் தான் பாடத் தெரியும்" என்று கெமுனு சிரித்தான்.

"அவன் பண்டாரவுக்காகப் பாடுகிறான் போலும்....."

சிறியதொரு சிரிப்பு வெளிப்படுகிறது.

'கப்டன்'பொன்சேகா வந்தான். அவனிடம் இருந்து மதுவின் நெடி வெளிப்பட்டது.

எல்லோரும் எழுந்தனர். பிரியந்த பாடுவதை நிறுத்தினான்.

அங்கு குழுமி நின்ற யாவரையும் பொன்சேகா பெருமையுடன் நோக்கினான்.

"நேற்றிரவு நடந்த தாக்குதலை முறியடித்ததிற்காக பண்டார, பிரியந்த, கெமுனு, ஏர்னஸ்ட் , ஏக்கநாயக்கா, 'சார்ஜன்ட்' சுஸந்தா ஆகியோருக்கு பதவி உயர்வு வழங்கும்படி சிபார்சு செய்துள்ளேன்" என்று பொன்சேகா கூறியதும், யாவரும் மெல்ல கைதட்டினார்கள்.

"பண்டார மிகவும் துணிச்சலுடன் போராடியதைக் கண்டேன். பண்டாரவின் தீரச் செயலால் தான் எதிரிகள் தமது தாக்குதலை நிறுத்தி விட்டு பின்வாங்கி இருக்கிறார்கள். எதிரிகளின் தரப்பில் பத்துப்பேராவது இறந்திருப்பார்கள் என ஊகிக்கின்றேன்." பொன்சேகா பேசுவதை நிறுத்தினான். பின் பண்டாரவை தன் அருகில் அழைத்து, அவன் தோளில் கைபோட்டான் . "இன்று இன்னொரு தகவலையும் இங்கு வெளியிடப்போகிறேன். இவ்வூரில் ஒரு கலப்புத் திருமணம் நடைபெறப் போகிறது. ஒரு சிங்கள வாலிபனை, ஒரு தமிழ் பெண் திருமணம் செய்யப்போகிறாள். இதன் மூலம் இன ஒற்றுமைக்கு இவர்கள் ஒரு முன்னுதாரணமாகத் திகழப் போகிறார்கள்."

"அந்த சிங்கள வாலிபன் பண்டார தானே?" கெமுனு கேட்டான்.

"ஆம். பண்டாரவை சசி என்ற தமிழ் பெண் திருமணம் செய்யத் தயாராகிறாள். வடக்கும், தெற்கும் இணையப் போகிறது." பொன்சேகா தன் கையை பண்டாரவை நோக்கி நீட்டினான். "நான் தான் உன்னை முதன் முதலில் வாழ்த்துகிறேன்."

பண்டார கைகுலுக்கவில்லை. பொன்சேகாவின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவிப்பது போல அவனைப் பார்த்தான். "சசியை நான் திருமணம் செய்யப் போகிறேன் என்று யார் சொன்னார்கள்?"

"சசியே என்னிடம் காலையில் யாவற்றையும் கக்கினாள். அவள் உன்னைக் காதலிக்கிறாளாம். உன்னைக் கலியாணம் செய்வதற்கும் தயாராக இருக்கிறாளாம்."

"ஆனால், நான் அவளைக் காதலிக்கவில்லையே.!"

"நீ என்ன சொல்லுகிறாய்?"

" சசி எனது நண்பி மட்டுமே.!"

"அவள் உன்னைக் காதலிப்பதாகச் சொன்னாளே.!"

"அவள் என்னைக் காதலிக்கக்கூடும். ஆனால், நான் அவளைக் காதலிக்கவில்லை."

"அவள் தமிழ் என்றபடியாலா?"

"இல்லை, இல்லை. அவளை நான் திருமணம் செய்தால் நான் தமிழ் இனத்துக்குச் செய்யும் துரோகம் என்று நினைக்கிறேன்."

" உனது கூற்று எனக்குப் புரியவில்லை."

"நான் அவளைத் திருமணம் செய்தால் அவள் தமிழச்சியாக வாழ முடியாது. அவள் ஒரு சிங்களத்தியாகத் தான் வாழ வேண்டிய நிலை ஏற்படும். எமக்குப் பிறக்கும் பிள்ளையும் சிங்களப் பிள்ளையாகத் தான் வளரும். ஆனால், அவள் ஒரு தமிழனைத் திருமணம் செய்தால் அவள் தமிழச்சியாக தான் வாழ்வாள். அவள் பரம்பரையும் தமிழாகத் தான் விளங்கும். இதன் மூலம் ஒரு இனத்தின் ஒரு துளி அழிவதை என்னால் தடுப்பதற்கு உதவ முடிகின்றது. இன ஒற்றுமை அவசியம் தான். ஆனால், தமிழர்களும், சிங்களவர்களும் திருமணம் செய்வதனால் இன ஒற்றுமை ஏற்படாது. இது ஒரு இனத்தின் அதாவது, தமிழ் இனத்தின் அழிவில் தான் முடியும்."

"நீ ஒருத்தன் ஓர் இனத்தின் அழிவை நினைத்து, காதலைத் தியாகம் செய்வதனால் காதலின் அர்த்தத்தையே கொச்சப்படுத்துகின்றாய்."

"'சேர்', நான் அவளைக் காதலிக்கவில்லையே!"

"ஆனால், அவள் உன்னைக் காதலிக்கிறாளே! அவள் உன்னைத் திருமணம் செய்ய விரும்புகிறாள். கலப்புத் திருமணத்தின் அர்த்தத்தை மறந்துவிடு. ஓர் இனம் அழியப் போகிறதே என்ற கவலையை மறந்துவிடு. உன்மீது ஒரு பெண் தூய காதல் கொண்டிருக்கிறாள் என்பதை நினைத்துப் பார். அதன் பின் அவளது காதலை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்று நினைத்துப் பார்."

பண்டார மௌனமாக நின்றான்.

பொன்சேகா தொடர்ந்தும் பேசினான். "தமிழ் இனத்தின் அழிவைத் தடுப்பதற்கு அவர்களது தலைவர்கள் இருக்கிறார்கள். நீ தூய காதலை

அரசியலுடன், போராட்டத்துடன் கலக்காதே. காதலுக்கும், மற்றையவற்றுக்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் இல்லை. காதலைக் காதல் கண்ணோட்டத்துடன் நோக்கு."

"உண்மை தான். காதலை அரசியலுடன், போராட்டத்துடன் கலக்கக்கூடாது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் தமிழனத்தை நான் நேசிக்கிறேன். அந்த இனத்துக்கு துரோகம் செய்ய விரும்பவில்லை."

பொன்சேகாவின் முகத்தில் சினம் முளைத்தது. "உன்னால் தமிழினத்தை நேசிக்க முடியுமென்றால் ஏன் ஒரு தமிழ்ப் பெண்ணை நேசிக்க முடியாது.?"

"அங்கே தான் என் பொதுநலம் வெளிப்படுகிறது. சசிகலா என்னை திருமணம் செய்வதனால், தமிழினத்தை, தமிழ் என்ற பதத்தை மறந்துவிடுவாள். அதை நான் விரும்பவில்லை."

"இவை யாவற்றுக்கும் அவள் தயாராக இருக்கும் போது....."

"அவளது அறியாமையை, அவசரத்தை எனக்குச் சாதகமாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. அவளுக்குப் புத்திமதி கூறி என்னை மறக்கச் செய்யும் நிலையில் தான் நான் இருக்கிறேன்."

"தமிழர்களுக்கே தமது இனத்தில் பற்று இல்லாத இந்த நாட்களில் நீ அந்த இனம் அழியக்கூடாது என்பதற்காக ஒரு தூய காதலை நிராகரிக்கிறாய். உனக்கு எவ்வளவு தான் புத்திமதி கூறினாலும் அது உனது காதில் ஏறப்போவதில்லை." 'கப்டன்' பொன்சேகா அங்கிருந்து வெறுப்புடன் அகன்றான்.

பண்டாரவை கெமுனு நெருங்கி அவனது கைகளைப் பற்றினான். ஏதோ சொல்ல கெமுனு வாயெடுக்க, "கெமுனு, தயவு செய்து என் மனதைக் குழப்பாதே." என்று பண்டார சொன்னான்.

"நான் உன் மனதை மாற்றமாட்டேன். உன் இதயத்தில் இப்படியானதொரு எண்ணம் இருப்பதையிட்டு நான் பெருமையடைகிறேன். ஒரு துளி விஷம் ஒரு கிணற்று நீரையே நஞ்சாக்கும். உன் ஒரு துளி எண்ணம் நிச்சயம் தமிழினத்தில் ஏதோ சதவீத அழிவை நிறுத்தத்தான் போகிறது" என்று உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கெமுனு சொன்னான்.

"கெமுனு, நீ எனக்கு ஓர் உதவி செய்வாயா?"

"என்ன?"

"சசியை அடுத்த முறை சந்திக்கும் போது என்னை மறந்துவிடச் சொல்லு. எனது எண்ணத்தையும் அவளிடம் சொல்லு."

பண்டார அங்கிருந்து அகன்று கடற்கரையை நோக்கி நடக்கிறான்.

கடல் அமைதியாகக் கிடக்கிறது.

"பண்டார, அங்கே நிற்காதே. புலிகள் உன்னை சுடக்கூடும்." கெமுனு கத்தினான்.

பண்டார திரும்பி, கெமுனுவைப் பார்த்து புன்னகைத்தான். ● ● ● ●

# ஆசிரியரின் பிறநூல்கள்

- ❑ யோகராணி கொழும்புக்குப் போகிறாள் 1992 – நாவல்
- ❑ இவர்களும் வாழ்கிறார்கள் 1993 – நாவல்
- ❑ இலட்சியப் பயணம் 1994 – நாவல்
- ❑ அக்கரைக்கு இக்கரை பச்சை 1994 – நாவல்
- ❑ மௌன ஓலங்கள் 1995 – நாவல்
- ❑ வடக்கும் தெற்கும் 1996 – நாவல்
  (மக்கள் சமாதான இலக்கிய மன்றத்தினால் நடத்தப்பட்ட நாவல் போட்டியில் முதல் பரிசும், அரச கரும மொழிகள் திணைக்களம் நடாத்திய போட்டியில் கல்வி ஆராய்ச்சி தொடர்புத் துறையில் மூன்றாம் பரிசும் பெற்ற நாவல்)
- ❑ இன்றல்ல நாளையே கல்யாணம் 1996 – நாவல்
- ❑ சுதந்திரக் காற்று 1994 – சிறுகதைப் தொகுப்பு
- ❑ பஞ்சம் 1995 – சிறுகதைப் தொகுப்பு
- ❑ Air of Freedom 1996
  (மொழிபெயர்க்கப்பட்ட 11 சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பு )
- ❑ නිදහසේ වා රැළි 1996
  (மொழிபெயர்க்கப்பட்ட ஏழு சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பு)

## விரைவில் வெளிவரவிருப்பவை

- ❑ சிவபுரத்து சைவர்கள் நாவல்
- ❑ இந்த நாடகம் அந்த மேடையில் நாவல்
- ❑ උතුර සහ දකුණ
  ("வடக்கும் தெற்கும்" நாவலின் மொழிபெயர்ப்பு)

# ஆசிரியரின் ஆக்கங்கள் பற்றி.................

"காத்திரமானதொரு நாவலை ஆசிரியர் எழுதியிருப்பது உற்சாகப்படுத்தப்பட வேண்டிய ஒரு கடமையாகும். கதையில் சீரான நீரோட்டம் வாசகனைச் சிரமப்படுத்தவில்லை."
—கே.எஸ்.சிவகுமாரன் "தினகரன் வாரமஞ்சரி"
("யோகராணி கொழும்புக்குப் போகிறாள்" – நாவல் )

"Rameswaran has brought into play human tendencies against truly rural background. Humanism and social justice are his keynotes, and that is his succ ess."
A.ThevaRajan "The Island"
("இவர்களும் வாழ்கிறார்கள்" – நாவல்)

"இயல்பான கதை, இயல்பான உரையாடல்கள், எளிமையான கிராமத்துச் சூழல். கதையோட்டமும் விறுவிறுப்பாக இருக்கிறது."
—திருமதி அன்னலட்சுமி இராஜதுரை "வீரகேசரி"
("இவர்களும் வாழ்கிறார்கள்" – நாவல் )

"தெளிவான நடை, எளிமையான உரையாடல்கள், கச்சிதமான பாத்திர வார்ப்புகள் யாவும் நாவலின் வெற்றியை நிர்ணயிக்கின்றன. வட பிராந்தியத்தை நிலைக்களனாகக் கொண்ட நல்ல நாவல்களைப் படிக்கும் வாய்ப்பு அண்மைக் காலங்களில் அருகியே இருந்தது. இலட்சியப் பயணம் என்ற நாவல் அதை நிவர்த்தி செய்கிறது எனத் தாராளமாகவே கூறலாம்."
—டாக்டர் ஆ. இரத்தினவேலோன் "வீரகேசரி வாரவெளியீடு"
("இலட்சியப் பயணம்" – நாவல்)

"திரும்பத் திரும்ப விழுந்து, விழுந்து சிரிக்கச் செய்யும் உரையாடல்கள். யதார்த்த நிலைமைகளை இவை சித்தரிக்கின்றன. கதை சிறிதெனினும் இத்தகைய சித்திரங்கள் சிரிக்கச் செய்யும் உரையாடல்கள் வானத்து நட்சத்திரங்களாக கதை எங்கும் பரவிக்கிடக்கின்றன."
—கே. விஜயன் "வீரகேசரி"
("அக்கரைக்கு இக்கரை பச்சை" – நகைச்சுவை நாவல்)

"சோ.ராமேஸ்வரனின் 'வடக்கும், தெற்கும்' கிடைத்தது. நாவலை உடனே படிக்க வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. ஒரே மூச்சில் நாவலை படித்தேன்."
—அந்தனி ஜீவா "தினகரன் வாரமஞ்சரி"
("வடக்கும், தெற்கும்" – நாவல்)

"இலங்கை எழுத்தாளர்கள் கருத்தில் கவனம் செலுத்தும் அளவிற்கு அமைப்பில் கவனம் செலுத்துவதில்லை என்ற குறைபாடு இத் தொகுப்பில் குறிப்பிடத்தக்களவு தீர்ந்துள்ளது எனலாம். இந்த 'சுதந்திரக் காற்றை' கொஞ்சம் சுவாசித்து பாருங்கள். மறக்க முடியாததும், மறக்க முடியாததுமான அனுபவம் ஏற்படும். அதே வேளை ஒரு சமூகம் பற்றிய, அந்த மனிதர்கள் பற்றிய எண்ணப்பாடுகளை அவற்றின் வடிவமைப்புக்கான காரணிகளை இனங்காண முடியும்."
—ம. தேவகௌரி "வீரகேசரி வாரவெளியீடு"
("சுதந்திரக்காற்று" – சிறுகதைத்தொகுப்பு )